# தேர்ந்த கட்டுரைகள்

## வெளியீடு - 13




JPL
C2643
2643
88608

ழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்,
தமிழீழம்.

01-09-92

PUBLIC LIBRA[illegible]
JA[illegible]

# தேர்ந்த கட்டுரைகள்

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
26 - 9 - 1992
யாழ்ப்பாணம்

KOHA JPL

26643 C.C

* * * * * * *

*** வெளியீடு - 13 ***

88608 PUBLIC LIBRARY
JAFFNA

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

வெளியீட்டு வாரியம்,

தமிழீழம்.

**01-09-92**

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

88608 C.C

## உள்ளே....

320.512/R


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ராஜீவ் காந்தி கொலை விடுதலைப் புலிகளுக்கு எதிரான வழக்கு | 01 — 12 |
| 2. | அம்பாறை மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். | 13 — 18 |
| 3. | கட்டுப்பத்தை இராணுவ தங்ககத்தை விடுதலைப் புலிகள் தாக்கி 80 கருவிகளைக் கைப்பற்றியுள்ளனர் | 19 — 23 |
| 4. | யாழ் குடாநாட்டை நெருக்குதலுக்குள்ளாக்குதல் | 24 — 29 |
| 5. | வை 8 வாஜூர்தியின் பேரிழப்பின் பின்னணியிலுள்ள துன்பியல் நாடகம் | 30 — 36 |
| 6. | கிரோசிமா — இன்றும் மறக்கப்படவில்லை | 37 — 42 |
| 7. | செயலுரிமையைக் கைப்பற்ற அமைதியாகக் காத்திருக்கும் பொல்பொட் | 43 — 47 |
| 8. | ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் பாசிலோனா நகரில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் வரலாற்றில் பெருமை வாய்ந்ததாகும். | 48 — 50 |
| 9. | தமிழ் ஈழத்தின் பொருளாதாரம் | 51 — 57 |
| 10. | வேலைப்பழுவினால் இறக்கிறார்களா? | 58 — 61 |
| 11. | ''வாட்டர்கேற்'' அவதூறு பற்றிய உள்ளெண்ணங்கள் நிச்சய மற்றதாகவே இருக்கின்றன. | 62 — 71 |

12. இரண்டாவது பலவேகய இராணுவ நடவடிக்கை மூலம் முதன்மை நிலப்பரப்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டைத் துண்டிக்கும் தங்கள் முக்கிய நோக்கத்தை அதிரடிப்படையினர் நிறைவேற்றியுள்ளனர். 72 — 84

13. நெடுங்கேணியில் ஆதிக்க நிலையில் இருந்த ரோந்துப்படை பதுங்கித் தாக்கப்பட்டது. 85 — 89

14. யாழ்ப்பாணப் பணி வலிகாமக் கரையோர இடைநிலைப் பகுதிகளில் சுற்றி வளைத்துத் தேடுதல் 90 — 94

15. தமிழரின் போர் மனப்போக்கு — தென் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் அதன் மூலங்களும் பரவல்களும் - (1) 95 — 100

16. தமிழரின் போர்ப்பண்பு - (2) போர்த்தொழில் புரியும் தமிழ்க்குல மக்கள் 101 — 108

17. அடுத்த போர் மசிதோனியாவிலா? 109 — 112


KOHA JPL

## தோழர்களுக்கு . . .

தேர்ந்த கட்டுரை வரிசையில் இது 13 ஆவது வெளியீடாகும்,

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல் வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வுசெய்து உண்மைகளை கண்டறியவேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும் பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

# ராஜீவ்காந்தி கொலை: விடுதலைப் புலிகளுக்கு எதிரான வழக்கு

(சண்டே ரைம்ஸ்—26-7-92)

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் படுகொலையைப் பற்றியது இந்த வழக்காகும். இந்தக் கொலை நன்றாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்ட கொலையாகும். இந்தத் திட்டமிட்ட கொலையில் திரு. ராஜீவ் காந்தியுடன் வேறு பதினேழு பேர் கொலையுண்டனர். அவர்களில் ஒன்பது காவல்துறையினரும், ஏழு பொதுமக்களும் கொலையாளியான செல்வி தானுவும் இறந்துள்ளதுடன் 44 பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

திரு. ராஜீவ் காந்தி எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் பிரதம மந்திரியாக வந்தால், இலங்கை விடயத்தில் தலையிடாத கொளகையைக் கடைப்பிடித்த முன்னைய இந்திய அரசினது கொள்கைக்கு மாறாக இலங்கை அரசின் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த முன்நிற்பதுடன் தமிழர்களின் எந்தவொரு தீர்வுத்திட்டத்திலும் எல்லாத் தமிழ்க் குழுக்களுக்கும் இடமளிக்கும் கொள்கையை முன்னெடுத்துச் செல்வார் எனவும் விடுதலைப் புலிகள் அஞ்சினர். மீண்டும் திரு. ராஜீவ் காந்தியைப் பதவிக்கு வராமல் தடுப்பதற்காக அவரைக் கொலை செய்யவும், இந்தியாவின் உறுதிப்பாட்டைக் குலைக்கவும் தாங்கள் இக் கொலையிற் சம்பந்தப்படவில்லை என்பதை எடுத்துக்

காட்டுவதற்காக எல்லாச் சான்றுகளையும் அழிக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் ஒரு சூழ்ச்சித்திட்டத்தைத் தீட்டியது. இதற்குத் தேவையான விடுதலைப் புலிகளின் கடும் கோட்பாட்டாளர்கள் இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமர்த்தப்பட்டதன் மூலம் இச்சூழ்ச்சித் திட்டம் செயல்படத்தொடங்கியது.

## முதலாவது குழு

இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் முதலாவது குழுவான விஜயன் என்றழைக்கப்படும் பெருமாள் விஜயன், அவரது மனைவி செல்வலக்சுமி, அவரது மாமனாரான பாஸ்கரன் என்றழைக்கப்படும் வேலாயுதன் ஆகியோரை சிவராசன் ஏதிலிகள் என்ற போர்வையில் 12. 9. 90 அன்று இராமேஸ்வரத்துக்கு அனுப்பிவைத்தார். அவர்கள் தங்களைத் தூத்துக்குடி ஏதிலிகள் தங்ககத்தில் ஏதிலிகள் எனப்பதிவு செய்து கொண்டனர்.

இரண்டாவது குழுவான றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் அவரது மனைவி சாந்தி ஆகியோர் ஏதிலிகள் என்ற போர்வையில் 20.9.90 அன்று இராமேஸ்வரம் வந்தடைந்து தங்களை ஏதிலிகள் எனப் பதிவு செய்துகொண்டனர். இதற்குப் பின்னர் ஓரிரு நாட்களில் சென்னை வந்தடைந்த இவர்கள் மகாகவி பாரதிநகரில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தனர்.

இதற்குப் பின்னர் போரூர் சபாபதிநகரிலுள்ள 26ம் இலக்க இல்லத்தை ஜெயக்குமார் 1.10.90 அன்று வாடகைக்கு அமர்த்தினார். 1.10.90க்கு இரண்டு நாட்களுக்கு முன்னரேஜெயக்குமார், சாந்தி, றொபர்ட், பயசும் அவரது குடும்பத்தினரும் இந்த வீட்டில் குடியேறினர். இச் சூழ்ச்சியில் ஈடுபட்டோர் தொடர்பு கொள்ளும் இடமாக இந்தவீடு அமைந்தது.

விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெறச் சென்ற ரவி என்றும் பிரகாசம் என்றும் அழைக்கப்படும் ரவிச்சந்திரனும் மகேஸ் என்றழைக்கப்படும் சுசேந்திரனும் 1990-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் சிவராசனுடன் தமிழ்நாடு வந்தடைந்தனர். 1991-ம் ஆண்டு ஜனவரியிலும், பெப்ரவரியிலும் சென்னை முழுவதும் சுற்றித் திரிந்த சிவராசன் அடிக்கடி ரவிச்சந்திர[illegible] ந்தி[illegible] ந்தார்.

இதன் பின்னர் கோடிக்கரை வழியாக யாழ்ப்பாணம் வந்த சிவராசன் 1991-ம் ஆண்டுமார்ச் திங்கள் மீண்டும் சென்னை வந்துசேர்ந்தார். இம்முறைவரும்போது இச் சூழ்ச்சித்திட்டத்திற்குத்தேவையானபணவசதிக்காக தங்கம் கொண்டுவந்தார். இந்தத் தங்கத்தை தம்பி அண்ணா என்றழைக்கப்படும் சண்முகவடிவேல மூலம் பணமாக்கி, பணத்தைத் தம்பியண்ணாவிடமே வைத்திருக்க விட்டு இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொகையைத் தவணைகளில் பெற்று வந்தார்.

## நாடோடித் தன்மை

இதேவேளை சிவராசனின் வேண்டுகோளுக்கமைய ஜெயக்குமார் 1990-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் சென்னை, கொடுங்கையூர் முத்தமிழ் நகரிலிருக்கும் 155-ம் இலக்க இல்லத்தைத் தனது மாமனார் மூலம் வாடகைக்கு அமர்த்தி அங்கே தனது குடும்பத்தைத் தங்கவைத்தார். இவர்களுக்குத் தேவையான பணம் சிவராசனால் வழங்கப்பட்டது.

தூத்துக்குடி ஏதிலிகள் தங்ககத்திலுள்ள விஜயனை 1990-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் சந்தித்த சிவராசன், விடுதலைப் புலிகளைச் சேர்ந்தோர் வருகைதர இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு வசதியான ஒரு வீட்டைச் சென்னையில் வாடகைக்கு அமர்த்தும்படி வேண்டுகோள் விடுத்தார்.

விடுதலைப் புலிகளின் கடுங்கோட்பாட்டாளரான முருகன் என்றழைக்கப்படும் சிறிதரன் 1991ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வேதாரணியம் வந்தடைந்து தற்போது இறந்துபோன ஜெயராஜ் என்ற சண்முகத்துடன் தங்கினார். இதன் பின்னர் சென்னைக்கு வந்த முருகன் றொபர்ட் பயசின் வீட்டில் சில நாட்கள் தங்கினார்.

இதன் பின்னர் விடுதலைப் புலிகளின் உறுப்பினரான முத்துராசா என்ற இந்தியரின் உதவியுடன் 1991-ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் சென்னை 14, ராயப்பேட்டையிலுள்ள முத்தையா முதலிதோட்ட வீதியிலுள்ள பாக்கியநாதனின் 22ம் இலக்க வீட்டில் பாக்கியநாதனுடனும் அவனது தாய் பத்மாவுடனும் தங்கினார்.

15.4.91 வரை சென்னை நகரமெங்கும் சுற்றித்திரிந்த சிவராசன், கரிபாபு, நளினி, முருகன், பிரகாசம் அல்லது ரவி

என்றழைக்கப்படும் ரவிச்சந்திரன், அறிவு, பத்மா ஆகியோரைச் சந்தித்த பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் ஆலோசனை செய்வதற்காகத் திரும்பவும் யாழ்ப்பாணம் செ ற டைந்தார்

இதேவேளை முருகனின் வேண்டுகோளுக்கிணங்க படப்பிடிப்பாளரான கரிபாபு (இப்போது இறந்துவிட்டார்) பாக்கியநாதனால் அவருக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டார். பாக்கியநாதன ல் அறிமுகப்படுத்தப்பட்ட கரிபாபு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வேலூர் மத்திய சிறைச்சாலை, சென்ற் ஜோர்ஜ்கோட்டை, மரினா கடற்கரையிலுள்ள வெளிச்சவீட்டுப் பகுதி, காவல்துறைத் தலைமை மேலாளர் பணிமனை ஆகியவற்றைப் படமெடுப்பதற்காக முருகனால் வேலைக்கமர்த்தப்பட்டார்.

*28-4-91* அன்று இச் சூழ்ச்சியில் ஈடுபட்ட சிவராசன், அன்பு என்று அழைக்கப்படும் த னு, நித்தியா என்றழைக்கப்படும் சுபா, கோதல் என்றழைக்கப்படும் தேநு, சாந்தன் என்றழைக்கப்படும் சுசேந்திரராசா, கோணேஸ்வரன் என்றழைக்கப்படும் சங்கர் கரியையா என்றழைக்கப்படும் விஜயானந்தன், சுரேஸ் என்றழைக்கப்படும் ரூபன் அத்தோடு வாகன ஒட்டுனரான கீர்த்தி என்றழைக்கப்படும் அண்ணா ஆகியோரை 28-4-91 அன்று சந்தித்த பொட்டம்மான் அவர்களுக்கு இந்தச் செயல்திட்டத்தை விரிப்பதுடன் சிவராசனின் கட்டளைகளுக்கிணங்க எல்லோரும் நடக்கவேண்டுமெனவும் கட்டளையிட்டார்.

கோடிக்கரைக்குச் செல்லுமாறு மேற்கண்டவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. படகில் ஏற்பட்ட சிறு குறைபாடு காரணமாக யாழ் பாணத்திலுள்ள மா தகலுக்குத் திரும்பிய அவர்கள் மீண்டும் *30-4-91* அன்று பொட்டம்மானாலும், அகிலாவாலும் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். *1-5-91* அன்று அதிகாலை இவர்கள் கோடிக்கரையை வந்தடைந்தபோது சண்முகத்தின் தொழிலாளர்களும் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்களும் இவர்களைச் சந்தித்தனர்.

## நடவடிக்கை

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களின் தலைமையில் சென்னையிலுள்ள நந்தவனத்தில் *1991*-ம் ஆண்டு மே திங்கள் 7ம், 8ம் திகதிகளில் நடைபெற்ற பொதுக்

கூட்டத்தின் போது மேடைக்கருகாமையில் பத்திரிகையாளருக்கென ஒதுக்கப்பட்ட பகுதிக்கண்மையில் சிவராசன் தனக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்டார். இந்தப் பொதுக்கூட்டத்திற்கு சிவராசனுடன் தானு, சுபா, கரிபாபு, நளினி, அறிவு, முருகன் ஆகியோர் வந்திருந்தனர். இக்கூட்டத்தின் போது மேடையிலிருக்கும் பிரதம மந்திரி திரு. வி.பி சிங் அவர்களுக்கு தானு மாலை அணிவிப்பதாகவும், அக்காட்சியைத் திரு. கரிபாபுவும், நளினியும் படம்பிடிப்பதாகவும் திட்டமிடப்பட்டிருந்தது. இது ஒரு முன்னோடி நடவடிக்கையாகும். மேடையைச் சென்றடைய முடியாத நிலையில் தானு மேடையில் முதல்படியில் நின்று பிரதமருக்கு மாலையைவழங்கியபோதும் கரிபாபுவாலும், சுபாவாலும் அதனைப்படமெடுக்க முடியவில்லை. இந்தத் தவறுக்காக இவர்கள் இருவரும் சிவராசனால் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு, மீளவும் எதிர்காலத்தில் இப்படித்தவறுகள் இழைக்காதிருக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டனர்.

1991-ம் ஆண்டு மே திங்கள் இரண்டாம் வாரத்தில் அறிவு என்றழைக்கப்படும் பேரறிவாளன், வ்ஜயன் வீட்டிலிருக்கும் தொலைத்தொடர்பு சாதனத்தை இயங்கவைப்பதற்காகவும், பொட்டம்மானுடன் தொடர்பு கொள்வதற்கும் ஒரு எக்சைட் (Exide) மின்கலத்தை வாங்கிச் சிவராசனுக்குக் கொடுத்தார் அத்துடன் இரண்டு சிறிய மின்கலங்களையும் வாங்கிச் சிவராசனுக்குக் கொடுத்தார். இந்த மின்கலங்களே 21-5-91 அன்று ராஜீவ் காந்தியைக் கொலை செய்த தானுவின் பட்டியில் உள்ள குண்டை இயக்கவைத்து வெடிக்கச் செய்தவையாகும்.

## சந்திப்பு

20-5-91 அன்று சிவராசன் தானுவையும், சுபாவையும் கூட்டிச்சென்று கல்யாணி நர்சிங் ஹோமில் இருக்கும் பத்மாவைச் சந்தித்துத் தானுவுக்கு 'புறுவான்' (Brufan) குளிகைகள் வாங்கிக்கொடுத்தார். அங்கிருந்து பத்மாவின் வீட்டுக்குச் சென்ற அவர்கள் கரிபாபு, நளினி, முருகன், அறிவு ஆகியோரைச் சந்தித்தனர். அப்போது, ஒரு மாலை வாங்கிக்கொண்டு 21-5-91 பிற்பகல் 5.00 மணிக்கு சென்னை பிராட்வே (பாரிஸ்கோணர்) மேவுசில் (Moffusil) பேரூந்து நிலையத்தில் நிற்கும்படி கரிபாபுவுக்குச் சிவராசன் அறிவுறுத்தினர். கோடாக் கலர் படச்சுருள் ஒன்றை கரிபாபுவுக்கு வாங்கிக்கொடுத்த அறிவு, கூட்டத்துக்கு வரும்பொழுது புகைப்படக்கருவியையும் கொண்டுவரும்படி கூறி

னர். அத்துடன் அடுத்தநாள் அரை நாள் ஓய்வுபெற்றுக்கொண்டு மாலை3.00 மணிக்கு வில்லிபாக்கத்திலுள்ள அவரது வீட்டில் இருக்குமாறு நளினிக்குச் சிவராசன் கூறினார்.

கொடுங்கையூரிலுள்ள ஜெயக்குமாரின் வீட்டில் சிவராசன் குர்தா பிஜாமா உடை மாற்றிக்கொண்டார். ஜெயக்குமாரின் மனைவி சாந்தியால் தைக்கப்பட்ட ஒரு துணிப்பைக்குள் வைக்கப்பட்டிருந்த 9 .மில்லிமீற்றர் கைத்துப்பாக்கியையும் (Pistol) சிவராசன் எடுத்துக் கொண்டார். அங்கிருந்து சென்று கொடுங்கையூரிலுள்ள விஜயனது வீட்டில் தானுவையும், சுபாவையும் சந்தித்தார்.

சிவராசன் இங்கு வந்தபின்னர் தானுவும், சுபாவும் ஒரு பூட்டிய அறைக்குள் சென்று தங்கள் உடையை மாற்றிக்கொண்டனர். சுபா ஒரு சேலையை அணிந்துகொண்டாள். சுபாவின் உதவியுடன் தானு இறுக்கமற்ற சுரிதாரை தனது அரையில் அணிந்திருக்கும் பட்டியிலுள்ள குண்டு தெரியாதவண்ணம் அணிந்துகொண்டாள். இந்த சுரிதார் சென்னை 7 புரசைவாக்கத்திலுள்ள ஒரு கடையில் தைக்கப்பட்டதாகும்.

## காத்திருத்தல்

வில்லிபாக்கத்திலுள்ள நளினியின் வீட்டை இம் மூவரும் பிற்பகல் 3.15 மணிக்குச் சென்றடைந்தனர். பக்கத்திலுள்ள கோவிலில் வழிபாடு செய்த சிவராசன், தானு, சுபா, நளினி ஆகியோர் பிராட்வே மோவுசில் பேருந்து நிலையத்தை மாலை 5.00 மணியளவில் வந்தடைந்தபோது அங்கே காத்துக்கொண்டிருந்த கரிபாபுவைக் கண்டனர். இங்கிருந்து சிறிபெரும்புத்தூர் வழியாகக் காஞ்சிபுரம் செல்லும் பேரூந்தில் ஏறிய ஐவரும் மாலை 7.00 மணியளவில் சிறிபெரும்புத்தூரில் இறங்கினர்.

விசாகபட்டினத்திலிருந்து வந்த வானூர்தி தாமதித்து வந்ததால் திரு. ராஜீவ் காந்தி சிறிபெரும்புத்தூருக்கு வந்துசேர்வதில் தாமதமேற்பட்டது. கூட்டம் நடைபெற இருந்த இடத்துக்கு அண்மையில் இருந்த திருமதி இந்திரா காந்தியின் சிலைக்கு பி.ப. 10.10 மணிக்கு மாலையணிவித்த பின்னர் தனது வாகனத்திலிருந்து இறங்கி செங்கம்பளத்தின் மேலாக மேடையை நோக்கிச் செல்லும்போது தனக்களிக்கப்பட்ட மாலைகளையும், சால்வைகளையும் வாங்கிக்கொண்டு சென்றார். கோகிலாவினால் பாடப்பட்ட இந்திப்பாடலொன்றை

சுவைத்துக்கொண்டு அவளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு செல்லும்போது தானு பின்புறமாகச் சென்று ராஜீவ்காந்தி இருக்கும் இடத்தை அடைந்தாள். காந்திக்கருகே சென்றதும் தானு தனது பட்டியில் இருக்கும் வெடிகுண்டை வெடிக்க வைத்தாள். இதே நேரத்தில் பாரிய வெடிவிபத்து ஏற்பட்டு ராஜீவ் காந்தியையும், தானுவையும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் தேவைக்காகப் படம் எடுத்துக்கொண்டிருந்த கரிபாபுவையும் கொன்றது. மேலும் பதினேழுபேர் உடனடியாகவும்,மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும்,மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபின்பும் இறந்தனர்.

கரிபாபுவால் படம் எடுக்கப் பாவிக்கப்பட்ட புகைப்படக் கருவி எதுவிதசேதமுன்றி அவரது இறந்த உடலின்மேல் கிடக்கக் காணப்பட்டது. தானுவின் உடல் ஒன்றுதான் நாலாபக்கமும் சிதறுண்டுகிடக்கக் காணப்பட்டது. 44 பேர்களுக்கு மேல் காயமேற்பட்டது. தான் இறக்கு முன்னர் கரிபாபுவால் இந்தக் கொலை நடைபெற்ற இடத்தில் எடுக்கப்பட்ட 10 படங்களில் குற்றவாளிகளான சிவராசன், தானு, சுபா, நளினி ஆகியோரின் படங்களும் வெடிகுண்டு வெடிக்கும் போது ஏற்படும் தீச்சுவாலை அடங்கிய படமும் காணப்பட்டது.

திரு. ராஜீவ் காந்தியின் கொலையை வெற்றிகரகமாகச் செய்து முடித்த பின்னர் சிவராசனும், சுபாவும்' நளினியும் திரும்பவும் சந்தித்து அந்தக் கொலை நடந்த இடத்தை விட்டகன்றார்கள். அவர்கள் போகும்வழியில் அண்மையிலுள்ள வீடொன்றில் நீர் குடித்த பின் அந்த வீட்டில் உள்ளோருக்கு திரு. ராஜீவ் காந்தி இறந்துவிட்டார் எனத் தெரிவித்துவிட்டுச் சென்றனர். இவர்கள் மூன்று ஆட்டோக்களில் மாறிமாறிச் சென்று சென்னையை அடைந்தனர். கொடுங்கையூரிலுள்ள ஜெயக்குமாரின் வீட்டைஇவர்கள் அடைந்தபோது சாந்தன் என்றழைக்கப்படும் சுசேந்திரராசா இங்கு இவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். அன்பு என அழைக்கப்படும் தானுவும், திரு. ராஜீவ்காந்தியும் இறந்துவிட்டதாகச் சாந்தனுக்குச் சிவராசன் கூறினார். அன்றிரவு இந்த மூவரும் ஜெயக்குமார் வீட்டில் தங்கினர். அடுத்த நாட் காலை பக்கத்துவீட்டுத் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட திரு. ராஜீவ் காந்தியின் சாவு நிகழ்ச்சியை இவர்கள் மூவரும் அக்கறையுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

21.5.91இல் நடைபெற்ற கொலை நிகழ்ச்சியையிட்டுப் புலன் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும், இதில் முன்னேற்றங்கள் காணப்படுவதாகவும் தினசரிப்பத்திரிகைகளில் விபரங்கள் வரத்தொடங்கின. கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு நாடுமுழுவதும் நடவடிக்கைஎடுக்கப்பட்டது. இதனால் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நாளுக்கு நாள் இடத்துக்கிடம் மாறி காவற்றுறையினரை ஏமாற்றி வந்தனர். பாக்கியநாதனின் அச்சுக்கூடத்தில் முருகனும் அறிவும் மறைந்திருந்தனர்.

## முதல்முறை

கொலையாளியான தானு கையில் மாலையுடன் காணப்படும் புகைப்படம் முதன்முறையாக 24.5.91 அன்று பத்திரிகைகளில் வெளிவந்தது. சிவராசனின் படம் இந்துப் பத்திரிகையில் 29.5.91 அன்று வெளிவந்தது. மற்றைய செய்தித்தாள்களில் 30.5.91 அன்று வெளிவந்தது. 2.6.91க்கும் 4.6.91க்குமிடைப்பட்ட காலத்தில் மகேஸ் என்றழைக்கப்படும் சுரேந்திரன் சுபாவை திருச்சூர், கொச்சின், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று திரும்பவும் பொள்ளாச்சியை 4.6.91ல் வந்தடைந்தார்.

சிவராசன், சாந்தன், ரவிச்சந்திரன் ஆகியோர் தங்களது பாவனைப் பொருட்கள் சிலவற்றை கொட்டிவாக்கத்தில் வசிக்கும் சிவராசனின் ஊரைச்சேர்ந்த ஒருவரது வீட்டுக்கு 10.6.91 அன்று அப்புறப்படுத்தினார். சிவராசனினதும், சாந்தனினதும் ஏனைய பாவனைப் பொருட்களும். சிவராசனின் நாட்குறிப்பேடுகளும் இந்த வீட்டிலிருந்து 22.7.91 அன்று கைபபற்றப்பட்டது. சிவராசனின் இந்த நாட்குறிப்பேட்டிலிருக்கும் குறிப்புகளிலிருந்து இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் பங்களிப்பும், இந்த நடவடிக்கைக்காக அவர்கள் அதிகபணம் செலவழித்ததும் தெரியவருகின்றது. தங்க பிஸ்கட்டுகளை விற்றுப் பணமாக்குபவரும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும், விடுதலைப் புலிகளின் தொழிலாளர்களுக்குப் பணம் கொடுப்பவருமான தம்பி அண்ணாவிடமிருந்து சாந்தன் பணம் பெற்றுவந்தார். சிவராசன் தன் கைத்துப்பாக்கியை மறைத்து எடுத்து செல்ல பயன்படுத்திய உள்ளே வெட்டப்பட்ட அகராதி, கைத்



தேர்ந்த

துப்பாக்கிக்குரிய ரவைகள், அவரது பொய்க்கண், நாட்குறிப்பேடுகளும் ஏனைய ஆவணங்களும் ஜெயக்குமாரினதும் அவரது மனைவி சாந்தியினதும் வீட்டில் இருந்து 7.7.91 அன்று கைப்பற்றப்பட்டன.

## ஆதரவாளர்கள்

விடுதலைப் புலிகளின் அரசியற் துறையைச் சேர்ந்த திருச்சி சாந்தனுக்காக டிக்சனும், சிவராசனுக்காக சாந்தனும் பங்குபற்றிய ஒரு கூட்டம் 21 6.91 அன்று விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எடுத்த முடிவின்படி சாந்தனும், டிக்சனும் கொடுங்கையூரிலுள்ள விஜயனின் வீட்டுக்குச் சென்றனர். காயமுற்ற விடுதலைப் புலிப் போராளிகளைப் பேணுவதற்காக ஆழ்வார் திருநகரில் ஒரு வீட்டைச் சுரேஷ் மாஸ்டர் வாடகைக்கு அமர்த்தினார்.

23.6.91 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆழ்வார் திருநகரிலுள்ள சுரேஷ் மாஸ்டரின் வீட்டை சிவராசன், சுபா, நேரு ஆகியோர் வந்தடைந்தனர்.

ரங்கனும், அம்மானும் அந்த வீட்டுக்கு வருகை தருபவர்கள். 27.6.91 அன்று அம்மானையும், விக்கி என்றழைக்கப்படும் விக்னேஸ்வரனையும், தனசேகரனையும், தனசேகரனின் நிலநெய் ஏற்றும் லொறியில் சென்னைக்குச் சென்று சிவராசன், சுபா, நேரு ஆகியோரைச் சென்னையிலிருந்து பங்களூருக்குக் கொண்டு செல்லும்படி திருச்சி சாந்தன் அறிவுரை வழங்கினார்.

விக்கியும், அம்மானும், தனசேகரனும் 28. 6. 91 அன்று மேட்டூரிலிருந்து தனசேகரனது லொறியைக் கொண்டுவந்து ஆழ்வார் நகரிலிருந்த சிவராசன், சுபா, நேரு ஆகியோரை அந்த லொறியில் உள்ள வெற்றுத் தாங்கிக்குள் ஏற்றி மறைத்து வைத்து சென்னையிலிருந்து பங்களூருக்குக் கொண்டு சென்றனர். இவர்கள் பங்களூருக்குச் செல்லும்போது ஆழ்வார் திருநகரிலுள்ள வீட்டில் சுரேஷ் மாஸ்டர் இருந்தார்.

கோயம்புத்தூரிலுள்ள துடியலூர் காவல்துறையினரால் விக்கி கைது செய்யப்பட்டபின்னர் 28.7.91 அன்று கோயம்புத்தூரிலுள்ள வீடு காவல்துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது டிக்சன் இறந்ததும், சிவராசன், சுபா, டிக்சன் ஆகியோர்

பங்களூர் தொம்மலூரின் அண்மையிலுள்ள ஒரு வீட்டைச் சென்றடைந்தனர். அதன்பின்னர் இவர்கள் வேறு சிலருடன் புத்தகல்லிலுள்ள ரங்கநாத்தின் வீட்டை 2.8.91 அன்று சென்றடைந்தனர். இவர்கள் சென்றடைந்த காலத்தில் இந்திரா நகரிலுள்ள வீட்டைக் காவல்துறையினர் சுற்றிவளைத்தபோது குளத்தனும், அரசனும் இறந்துவிட்டனர்.

ரங்கநாதனின் உதவியுடன் பங்களூரிலுள்ள கோனாகுண்டில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி, சிவரா சன், சுபா, நேரு ஆகியோரும் மற்றவர்களும் 16.8.91 அன்று அங்கு குடியேறினர். சிவராசனும், சுபாவும் ஏனையோரும் இந்த வீட்டில் மறைந்திருப்பதை அறிந்த காவல்துறையினர் 18 8.91 அன்று இந்த வீட்டைச் சுற்றி வளைத்தனர். சுபா, நேரு, சுரேஸ் மாஸ்டர், அம்மான், சாரதி அண்ணா, மயிலி என்றழைக்கப்படும் யமுனா ஆகிய விடுதலைப் புலிப்போராளிகள் 19.8.91 அன்று சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டனர். சிவராசன் தன்னிடமிருந்த 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கியினால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சிவராசன், சுபா, நேரு, ரங்கநாத், சுரேஷ்மாஸ்டர் ஆகியோரையும் ஏனைய காயமுற்ற புலிப்போராளிகளையும் இடத்துக்கிடம் தனது மாருதிக் காரில் கொண்டு சென்று பங்களூர், முத்தாத்தி, பெரோட்டா ஆகிய இடங்களில் சுற்றித்திரிந்த ரங்கனை 28.9.91 அன்று சென்னையில் காவல்துறையினர் கைது செய்தனர்.

விடுதலைப் புலிகளுடன் நீண்டகாலம் தொடர்புள்ள சண்முகம் படைக்கலங்களையும், வெடிமருந்துகளையும் கோடிக்கரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல உதவியவர். தன்னுடைய வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் 121 பெட்டிவெடிமருந்துகளையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும், பெற்றோலையும் இந்தச் சூழ்ச்சிக்காரரின் தேவைக்காகப் புதைத்து வைத்திருந்தார்.

இந்த ஒன்பது பேரும் மற்றவர்களும் இந்தச் சூழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல உதவிகளையும், உபசரிப்புக்களையும் இவர் செய்துவந்துள்ளார். இவரைக் கைதுசெய்து, இந்தப் பொருட்களையும் கைப்பற்றிய போது இவர் தப்பியோடித் தற்கொலை செய்துகொண்டார்.



தேர்ந்த

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களின் கட்டளைப்படி சிவராசன், சுபா, சுரேஷ் மாஸ்டர் ஆகியோரைப் பேணிவந்த குண்டுசாந்தன் என அழைக்கப்படும் திருச்சி சாந்தன் இந்த வழக்குக்கென சிறப்பாக அமைக்கப் பட்ட சிறப்புக் காவல்துறையினரின் அழுத்தங்களை உணரத். தொடங்கினார்.

சிவராசனின் தொலைத்தொடர்பு சாதனம் சுரேஷ் மாஸ் டரிடம் இருந்தது. இதை விடுதலைப் புலிப்போராளியான வரதன் என அழைக்கப்படும் வரனிடமிருந்து தமிழ்நாடு திருச்சிமாவட் டத்திலுள்ள பசுபதிபாளையம் காவல்துறையினர் கரூருக்கு அரு காமையில் கைப்பற்றினர்.

விடுதலைப்புலிப் போராளிகளுடன் இணைந்த இந்திய ரான இரும்பொறையையும், வேறு சில காயமுற்ற விடுதலைப் புலிப் போராளிகளையும் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் அனுப்புவதற்குத் திருச்சி சாந்தன் முடிவெடுத்தார்.

தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு இரும்பொறை மூலம் ஒரு கடிதம் அனுப்பிய திருச்சி சாந்தன், அதனைத் தலைவரி டம் சேர்க்கும்படி அவருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தியிருந் தார்.

இரும்பொறைக்கு எழுதப்பட்ட கடிதத்தில் ராஜீவ் காந்தி யின் கொலையைப்பற்றி இரும்பொறைக்குத் தெரியுமென தலைவருக்குக் கூறவேண்டாமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

திருச்சி சாந்தனால் தனக்கும் தலைவர் பிரபாகரனுக் கும் எழுதப்பட்ட இரு கடிதங்களுடன் இரும்பொறை சென்று கொண்டிருக்கும் போது 3.10.91 அன்று அதிகாலை இந்தியக் கடற்படையால் வழிமறிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டதுடன் இந்த இரு கடிதங்களும் கைப்பற்றப்பட்டன. 13.11.91 அன்று அதிகாலை திருச்சிநகரிலுள்ள நாவல்பட்டு அண்ணாநகரில் திருச்சி சாந்தன் மறைந்திருந்த வீடு சிறப்புக் காவல்துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது அவர் சயனைட் நஞ்சருந்தி தற் கொலை செய்துகொண்டார்.

## கட்டளைகள்

சிவராசன் 10 லட்சம் ரூபாவுக்குமேல் ரவிக்குக் கொடுத்துள்ளதாக அவனது நாட்குறிப்பிலிருந்து தெரியவருகின்றது. சிவராசன் ஈடுபடவிருக்கும் ப ரிய நடவடிக்கைக்கு உதவும் படியும் தமிழ்த் தேசிய மீட்புப் படையை அமைத்து விடுதலைப் புலிகளால் பயிற்சியளிப்பதற்கு இந்தியர்களைச் சேர்க்கும்படியும் அறிவுறுத்தப்பட்டு மகேஷ் என்றழைக்கப்படும் சுசேந்திரனும், ரவியும் மற்றவர்களும் சிவராசனுடன் 1990ம் ஆண்டு டிசம்பர் திங்கள் பொட்டு அம்மானால் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிப்போராளிகள் மறைந்திருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் ரவியின் பொறுப்பாகும். சிவராசன் இறந்த பின்னர் வேறு சில போராளிகளுடன் யாழ்ப்பாணம் சென்ற ரவி, இந்தச் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தங்கபிஸ்கட்டுகள், வெடிமருந்துகள், கருவிகள் (ஆயுதம்) தொலைத்தொடர்பு சாதனங்கள், சயனைட் குப்பிகள் ஆகியவற்றுடன் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இந்தியா திரும்பினார். மகேஷ் கொடுத்த வாக்குமூலத்திலிருந்து ஆறு தங்க பிஸ்கட்டுகள் ஒரு 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, ஒரு கைக்குண்டு, ஒரு தொலைத்தொடர்பு சாதனம் 18, 9 மில்லிமீற்றர் சன்னங்கள் என்பன 22. 01.92 அன்று பொள்ளாச்சியிலும், இரண்டு கைக்குண்டுகளும் ஒரு தொலைத்தொடர்பு சாதனமும் 23. 1. 92 அன்று கோடிக்கரையிலும் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டையும், இறைமையையும் சீர்குலைப்பதை நோக்கமாகவும், மேற்படி குற்றவியல் சூழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும் விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டில் தமிழ்தேசிய மீட்புப்படையை உருவாக்கியுள்ளனர். 14. 5.92 அன்று வெளியாகிய இந்திய வர்த்தமானியின் 2ம்பகுதி, 3ம் பிரிவு, 2ம் உப பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள எஸ்.ஓ, 330 (ஈ) [SO 330 (E)] இலக்கங்கொண்ட 14. 5. 92 இன் அறிவித்தலின்படி 1967ம் ஆண்டின் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் சட்டத்தின் 3ம் பிரிவின் 1வது உபபிரிவின் படி விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கமாகுமென இந்திய அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

26443 C.C
88608

# அம்பாறை மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள்

—(ஐலன்ட் 26-7-92)

**கா**டுகளில் அதிரடிப் படையினரும் சிறப்புப் படையினரும் திட்டமிட்டு மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கும், மறைந்திருந்து தாக்கும் நடவடிக்கைகளுக்கும் இலக்காகி தங்கள் போராளிகள் அழிவுற்று வருவதனால், அம்பாறை மற்றும் மட்டககளப்புப் பகுதிகளுக்கு பொறுப்பான தலைவர்களுக்கு சிறு சிறு குழுக்களாக நடமாடவேண்டாமென விடுதலைப் புலிகளின் உயர்பீடம் எச்சரிக்கை விடுத்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஈழம் என்ற கோட்பாட்டை ஒழித்துக்கட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, கிழக்கில் ஒரு உறுதியான நிலையை உருவாக்கி அதை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, இந்தக் காடுகளிலிருந்து விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்க இச்சிறப்புப் படையினர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

பல இன மக்கள் வாழும் கிழக்கில், பெரும்பான்மையான மக்கள் விடுதலைப் புலிகளுக்குத் தாமாக முன்வந்து ஆதரவு கொடுக்கமாட்டார்கள் என்பதனால் யாழ்ப்பாணத்தைவிடக் கிழக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது இலகுவானதெனக்

கருதப்படுகின்றது. விடுதலைப் புலிப் போராளிகளில் குறிப்பிடத்தக்க தொகையினர் கிழக்கைச் சேர்ந்தவர்களாவர். அந்தப் பகுதியை விடுதலைப் புலிகளின் வல்லாண்மையிலிருந்து விடுவிப்பதன்மூலம், அவர்கள் அங்கிருந்து பெறும் மனித வளம் மற்றும் உணவு மருந்து போன்ற மற்ற வளங்களையும் தடுக்கமுடியும். மலைநாட்டில விடுதலைப் புலிகள் அக்கறை கொண்டுள்ளார்கள் என்ற தகவலின் பேரில் அங்கு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், கிழக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம் அவர்கள் மலைநாட்டிலும் நுழைவதைத் தடுக்கமுடியும் இதன் காரணமாகவே பெரியளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை பிரதேச தலைவர்கள் பேருந்துகளிலும், புகையிரதங்களிலும் பிரயாணத்தை மேற்கொள்ளும் இலகுவான இலக்குகளான பொதுமக்களைத் தாக்கி வருகின்றனர்.

அரசாங்கத்தைச் சார்ந்த தமிழ்க் குழுக்களினதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வேட்கையான கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைக்கவேண்டுமென்ற குறைந்தபட்சக் கோரிக்கையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு தங்கியுள்ளமை இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இந்த இணைப்பு காலப்போக்கில் ஈழம் உருவாக வித்திடுவதுடன் நாட்டின் 2/3 பங்கு கரையோரப் பகுதியையும், 1/3 பங்கு நிலப்பரப்பையும், 13 சத விதமான சிறுபான்மை மக்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வழிவகுக்கும் என்ற பொதுவான அச்சம் சிங்கள மக்களிடையே நிலவுகின்றது. தமிழ் மக்களிடையேயுள்ள மிதவாதிகளும் இணைப்பையே விரும்புவார்களாயின் அவர்களைத் திருப்திப்படுத்தாத - அவர்களை வேறுவகையில் திருப்திப்படுத்தாத இதைத் தவிர்ந்த வேறு எந்தத் தீர்வும் அவர்களுக்குச் சினத்தையும், அதிருப்தியையும் உண்டாக்குவதுடன் நீண்டகாலக் கிளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

சனாதிபதி பிரேமதாசா அவர்களைத் தலைவராகக் கொண்டதும் துணைப் பாதுகாப்பமைச்சர், படைத் தளபதிகள், காவல்துறை மற்றும் தேசிய புலனாய்வுத் துறையினர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்டதுமான கூட்டு நடவடிக்கைக் குழு வழமைபோல் புதன்கிழமை பிற்பகல் கூடியது. போர்முனையில் கடமையாற்றும் படைகளின் தளபதிகளான வடபகுதித் தளபதி

யும் அடுத்த ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இராணுவ அதிகாரிகளின் பிரதான மேலாளராகப் பதவியேற்க விரும்புபவரான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவே அவர்களும், கிழக்குப் பகுதித் தளபதியான மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா அவர்களும் இதில் கலந்துகொள்வதற்காகக் கொழும்புக்கு வந்திருந்தனர். பலராலும் எதிர்பார்க்கப்படும் பாரிய யாழ்ப்பாண நடவடிக்கை உட்பட வடக்கில் மேற்கொள்ளவிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய இறுதித் திட்டங்களும், இராணுவத்துக்குத் தேவையான நிதி மற்றும் தளபாடங்கள் பற்றிய விடயங்களும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. போதிய நிதி வசதியிருப்பின் எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இராணுவத்தின் தேவைகளைத் தாம் முழுமை செய்வதாக அரசாங்கம் அவர்களுக்கு உறுதியளித்துள்ளது. நிதி வசதியின்மையால் இராணுவம் தனக்குத் தேவையானவற்றைப் பெறமுடியாதிருக்கின்றது. உதாரணமாக இப்போது அதிக சுமைகளைக் கொண்டு செல்லும் வானூர்திகளுக்குப் பதிலாக போர்க்கால நடவடிக்கைகளின்போதும் சமாதான காலத்தின்போதும் அதிக சுமைகளைக் கொண்டு செல்லக்கூடியதும் கொடுக்கும் பணத்துக்கேற்ற பயனைக் கொடுக்கக்கூடியதுமான அமெரிக்க தயாரிப்பான சி-130 ரக கேர்க்குலிஸ் வானூர்திகளை வாங்குவதற்கு வான்படையினர் விரும்புகின்றார்கள். ஆனால் இந்த ரக வானூர்தியை வாங்குவதற்கு அரசாங்கத்திடம் போதிய நிதியில்லை. எனினும் இதுவரை காலமும் பாவனையிலிருந்த சியா மாசெட்டி வானூர்திகளுக்குப் பதிலாக ஒரு குவாட்ரன் புதிய ரக குண்டுவீச்சு வானூர்திகளை வான்படையினர் வாங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் தந்துள்ளது.

போர் தொடங்கிய பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பில்லியன் ரூபாவாகவிருந்த பாதுகாப்புச் செலவினம் இந்த ஆண்டு சுமார் 20 பில்லியன் ரூபாவாக உயர்ந்ததனால், குறிப்பாக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய போர் நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளை நீண்டகாலத்துக்கு மேற்கொள்ளமுடியாது என்ற அச்சம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. போருக்குச் செலவிடும் நிதி அதிகரிக்குமென்பதாலும் போரிலீடுபட்டிருக்கும் இரு பகுதியினருக்கும் உயிர் இழப்புக்கள் அதிகரிக்குமென்பதாலும், இந்தப் போர் நீடித்து நடைபெறுமாயின் இந்த நூற்றாண்டின் இறுதியில் நாடு நடமாடும் மருத்துவ மனையாக மாறுவதுடன் இறுதியில் ஈழத்தைக் கொடுக்கவேண்டிய

நிலையும் ஏற்படுமென முன்னாள் வான்படைத் தளபதியான கரி குணதிலக்கா போன்றோர் கருதுகின்றனர்.

"விதண்டாவாதம் பேசுவதை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கேற்ற காலம் வந்துவிட்டது" என எயர் வைஸ் மார்ஷல் கரி குணத்திலக்கா கூறுகின்றார். பயன்தரக் கூடிய பேச்சுவார்த்தையில் தமிழர்களுடன் ஈடுபடவேண்டுமெனவும், ஆனால் அதற்கு முன்னதாக பிரதான சிங்கள அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தங்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு ஒத்த கருத்துள்ள தீர்வொன்றைக் காணவேண்டுமெனவும் அவர் ஆலோசனை கூறியுள்ளார். இந்த இரண்டு சிங்களக் கட்சிகளின் தலைவர்களும் ஒருவருக்கொருவர் தான்தான் பெரியவர் எனக்கூறிக்கொண்டிராது கீழிறங்கி பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென அவர் கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினது தீர்வையோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினது தீர்வையோ தமிழ் மக்கள் வேண்டிநிற்கவில்லை. அவர்கள் சிங்கள மக்களின் தீர்வையே விரும்புகிறார்கள். சிங்கள மக்களில் 90 சதவீதமானோரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் அந்த இரு கட்சிகளும் ஒரு தீர்வுக்கான உடன்பாட்டுக்கு வரும் அதே வேளையில், தற்போது தமிழர்கள் முன்வைத்திருக்கும் குறைந்த கோரிக்கையான வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றி அதிக கவனஞ் செலுத்தவேண்டுமெனவும் அவர் கருதுகின்றார்.

ஈழப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாக இராணுவத்தினரும், அரசியல் வாதிகளும் பொய்யாகக் காலக்கெடு விதிப்பதும், இந்தக்காலக்கெடுவை இந்த ஆண்டு இறுதியெனக் கூறுவதும், யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்வதற்காக ஒரு பாரிய தாக்குதலைப் பற்றி பேசுவதும் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் செயலுரிமைபெறும் நோக்கமாகக் கொண்ட ஒரு கோட்பரப் புகையென முன்னாள் வான்படைத் தளபதி கூறுகின்றார். இந்த ஆண்டு முடிவுக்குள் போரை முடிவுக்குக் கொண்டுவர கூடுமென்பதில் நம்பிக்கையில்லையென்றும், அப்படி ஏற்படின் பொதுமக்களும், விடுதலைப் புலிகளும், படையினரும் ஆயிரக் கணக்கில் மடிந்துபோவார்கள் என்றும் இவர் கூறுகின்றார். தான் கூறுவதைத் தவறென அவர்கள் நிரூபிப்பார்களா என அவர் கேட்கின்றார்.

இராணுவ உயர் மட்டத்திலுள்ளவர்களிடையே நிலவும் தனிப்பட்ட சச்சரவுகள், கருத்துவேறுபாடுகள் மற்றும் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அரசியல் வாதிகள் கொடுக்கும் நெருக்குதல்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண படைவீரர்களும், போர்முனையிலுள்ள தளபதிகளுமேயாவர். வான்படையில் தனது இரு புதல்வர்களைச் சேவைக்கமர்த்தியுள்ள எயர் வைஸ் மார்ஷல் குணதிலக்கா 'நான் தந்தை என்ற முறையிலும், எல்லாப் படைவீரர்களின் குடும்பங்கள் சார்பிலும் பேசுகின்றேன்'' எனக் கூறுகின்றார். அரசியல் சிக்கல் ஒன்றுக்கு இராணுவத் தீர்வு எவ்விடத்திலும் இருக்கமுடியாது என நான் கருதுகிறேன்.'' என அவர் கூறுகின்றார்.

இந்தப் போரில் வெற்றிகொள்ள முடியுமென அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருந்தால், அது அதை விரைவாகச் செய்யட்டும், படைவீரர்கள் அரைமனதுடன் போராடாது இருப்பதற்காக இது வெற்றிபெறக்கூடிய போர் என்ற நம்பிக்கையையும் அது அவர்களிடையே உருவாக்கட்டும். இல்லையேல் போரை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கட்டும்.

போரைக் கொண்டு நடத்துவதற்கு காப்பு அமைச்சின் தலையீடு முற்றிலும் இல்லாததும், அரசியல் தலையீடு அற்றதுமான ஒரு கட்டுப்பாட்டமைப்பு இருத்தல் வேண்டுமென எயர் வைஸ் மார்ஷல் குணதிலக்கா கருதுகின்றார்: மேல்மட்டத்திலுள்ளவர்களுக்கும் போர்முனைத் தளபதிகளுக்குமிடையேயுள்ள முரண்பாடுகள் காரணமாக இன்னலுக்குட்படுத்தப்படுவோர் சாதாரண படையினராகும் இதை மனதிற்கொண்டு அரசாங்கம் போரைக் கொண்டுநடத்துவதற்கு ஒரு கட்டுப்பாட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். போரைக் கொண்டு நடத்துவதற்கு ஒருவரையும், ஆலோசனை கூறுவதற்கு வேறொருவரையும் அரசாங்கம் வைத்திருக்கக்கூடாது. ஒன்றில கூட்டுப்படைத் தலைமையகத்தைக் கலைத்துவிட்டு, முப்படைத் தளபதிகளைப் போரைக் கொண்டு நடாத்தவிடவேண்டும், அல்லது அவர்களை கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் கடமையாற்ற விடவேண்டும். நான் ஒருவருக்காகவும் பரிந்துபேச விரும்பவில்லை. ஒவ்வொருவருடைய விருப்பத்தையும் நிறைவேற்றமுடியாது.

எதிர்பார்க்கும் யாழ்ப்பாணத் தாக்குதலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம், அத்தாக்குதல் முடிந்தபின் எழக்கூடிய நிகழ்வுகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தை அல்லது அதன் சில முக்கிய பகுதிகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதன் மூலம் விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்டதாகக் கூறமுடியாதெனவும். அவர்கள் வன்னிக் காட்டுக்குள் சென்று பல ஆண்டுகாலம் தீவிரமான கரந்தடிப்

போரில் ஈடுபடுவார்களெனவும், ஆனால் அவர்களுக்குப் பலத்த அடியைக் கொடுப்பதன்மூலம் அவர்கள் பலமிழந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்களெனவும் இராணுவம் நம்புகின்றது, விடுதலைப் புலிகளிடமிருந்து தாங்கள் கைப்பற்றிய நிலப்பரப்பை தொடர்ந்தும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தங்களிடம் போதிய படையினர் உள்ளதாக இராணுவம் நம்புகின்ற போதிலும் மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

குறைந்த இழப்புக்களைச் சந்திப்பதற்கு இராணுவம் விடுதலைப் புலிகளை வெளிக்கொணர்ந்து அழிக்கமுடியாதுவிடின் அவர்களை காட்டுக்குள் கட்டுப்படுத்துவதே அடுத்த சிறந்த காரியமாகும் என எயர் வைஸ் மார்ஷல் குணத்திலக்கா கருதுகின்றார்.

யாழ்ப்பாணத்தை அரசாங்கம் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து அதை நிர்வகிக்கும்படி அரசு சார்புள்ள தமிழ்க் குழுக்களிடம் ஒப்படைத்தாலும் விடுதலைப் புலிகளுடைய கோரிக்கையான வடக்கு கிழக்கு இணைப்பை அவர்களும் கோரி நிற்பதால் இந்த விடயம் ஒருபொழுதும் முடிவுக்கு வரமாட்டாது. தங்களது ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும், தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் இவர்கள் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியைப் பெற்று தங்களுடைய நம்பகத் தன்மையை தமிழ் மக்களிடையே காட்டத் தவறின் விடுதலைப் புலிகள் திரும்பி வருவார்கள் அல்லது அவர்களைவிட கடும்போக்கான இயக்கம் ஒன்று தோன்ற இடமுண்டு. பயங்கரவாதத்துக் கெதிரான போர்களில் மக்களைக் கட்டுப்படுத்துவது அல்லது அவர்களுடைய ஆதரவைப் பெறுவது முக்கியமானதாகும் என இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. இவையில்லாது வெறுமனே நிலப்பரப்பை வெற்றிகொள்வதும் அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் பிரயோசனமற்றவையாகும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம், அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்குக் கட்டாயப்படுத்தப்படுவார்கள் எனச்சிலர் வாதிடும் வேளையில், அவர்களைப் பலவீனப்படுத்தி யாழ்ப்பாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாலும் ஈழத்துக்கான வேட்கையை இல்லாது செய்யுமட்டும் போர் முடிவு பெறாதென வேறு சிலர் கூறுகின்றார்கள்.

பிரபாகரனுக்குத் தமிழ் மக்களின் ஆதரவு இருக்கும்வரை அவர் கவலைப்பட ஒன்றுமில்லை என எயர் வைஸ் மார்ஷல் குணதிலக்கா கூறினார். ★



தேர்ந்த

# கட்டுப்பத்தை இராணுவ தங்ககத்தை விடுதலைப் புலிகள் தாக்கி 80 கருவிகளை கைப்பற்றியுள்ளனர்

ஐலன்ட் - 18-7-92

கட்டுப்பத்தை இராணுவ தங்ககத்தின் மீது விடுதலைப் புலிகள் சனிக்கிழமை மேற்கொண்ட திடீர்த்தாக்குதலின் போது, ஒரு மேலாளர் உட்பட 46 படையினர் கொல்லப்பட்டும், 2 படையினர் காணாமல் போயும் உள்ள அதேவேளையில், அவர்கள் 80 ஆயுதங்களையும், ஒரு 60மி மி. பீரங்கியையும், பெருந்தொகையான வெடிமருந்துகளையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர். இவர்கள் கைப்பற்றிய ஆயுதங்கள் 69, T 56 ரக துப்பாக்கிகள், 7 எஸ் எல். ஆர் துப்பாக்கிகள், 2, T-81 ரக துப்பாக்கிகள், மற்றும் 17, 303 ரக துப்பாக்கிகள் அடங்குமென கொழும்பு கிராமோதய நிலையத்தில் நடாத்தப்பட்ட அமைச்சரவைச் செய்தி மகாநாட்டின் போது கேணல் சரத்முனசிங்க பத்திரிகையாளர்களுக்குக் கூறினார்.

2 மேலாளர்களையும், 80 சாதாரண படையினரையும் கொண்டிருந்த இந்த தங்ககத்தின் தாக்குதலில் 300 பயங்கரவாதிகள் பங்குபற்றியதாகக் கேணல் முனசிங்க கூறினார். மூன்று திசைகளிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தங்ககத்தின் பின்புறமிருந்தே பயங்கரவாதிகள் தங்ககத்துள் நுழைந்திருக்கிறார்கள். அதிகாலை 5.15 மணிக்கு மாத்திரமே வான்படையினரின் உதவி கிடைக்கக்கூடியதாகவிருந்தது. படையினருக்கு உதவி

யாகத் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு அனுப்பப்பட்ட மேலதிக படையினரும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப் பட்டதுடன் ஒரு கவச வாகனமும் அமுக்கத்தினால் வெடிக்க வைக்கப்படும் ஒரு கண்ணிவெடியால் அழிக்கப்பட்டது. அந்த இடத்திலும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் சண்டை நடைபெற்றிருக்கின்றது.

இந்தப் பகுதியில் ஒன்றுக்கொன்று அண்மையாகவுள்ள பதினொரு சிற்றூர்களில் அமைக்கப்பட்ட முன்னணிக் காப்பு எல்லைகளில் இரு மேலாளர்களுடன் 234 படையினர் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்ததாக இவர் மேலும் கூறினார்.

கேள்வி: அவர்களால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண் ணிக்கை எவ்வளவு?

பதில்: இந்த விபரங்கள் தற்பொழுது என்னிடமில்லை.

கேள்வி: கொல்லப்பட்ட காப்புப்படையினரின் எண்ணிக்கை 52 என கொடுப்பட்டுள்ளதே?

பதில்: உயிருடன் இருப்பவர்களைக் கொன்றதாக எங்களால் கூறமுடியாது. ஒரு மேலாளர் உட்பட 46 படையினர் கொல்லப்பட்டதே சரியான எண்ணிக்கையாகும். ஆயு தத்துடன் ஒரு பயங்கரவாதியின் உடலும் கண்டெடுக் கப்பட்டதென அவர் கூறினார். கட்டுப்பத்தை இராணுவ தங்ககத்தில் படையினர் மேற்கொண்ட எதிர்த்தாக்கு தலின் போது கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கை தெரியவில்லை. அவர்களால் கைப்பற் பட்ட ஆயுதங்கள் யாவும் சிறிய ரகத்தைச் சேர்ந்தவை களே.

கேள்வி: கொல்லப்பட்டதும், காயப்பட்டதுமான காப்புப் படை யினரின் எண்ணிக்கையைவிட கைப்பற்றப்பட்ட ஆயு தங்களின் எண்ணிக்கை கூடுதலாகவிருப்பதற்கு என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: முழுப்பிரதேசமும் போர் அரங்கப்பிரிவாக பிரிக்கப் பட்டிருந்தது. இந்தப்பிரிவின் தலைமைப்பீடம் கட்டுப்பத் தையில் அமைக்கப்பட்டிருந்தது. இதைப் போன்ற இடங் களில் மேலதிகமான ஆயுதங்கள் இருப்பது வழக்கம். தாக்குதலை நடாத்தியவர்கள் ஆயுதக்களஞ்சியத்தில்

ருந்து ஆயுதங்களை எடுத்துள்ளார்கள். இராணுவ மேலாளர்களால் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன வில்பத்துக்காடுகளின் கிழக்கு எல்லைக்கோட்டில் கட்டுப் பத்தை அமைந்துள்ளது. பல படையினர் உயிர்தப்பி யுள்ளனர். தாக்குதல்களில் ஈடுபட்டவர்களின் எண் ணிக்கை சுமார் 300 பேராகும்.

கேள்வி: பயங்கரவாதிகள் இராணுவ தங்ககத்துக்குள் ஊடுரு வியிருந்தார்கள் என்பது உண்மையா?

பதில்: இல்லை, அது தவறானது. வில்பத்து வன காப்புப் பகுதி ஊடாக வந்து இராணுவ தங்ககத்தின் பின்புறமாக அவர்கள் உட்புகுந்துள்ளார்கள். உதவிக்கு வந்த படை யினர் மீதும், அவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொண்டுள்ளார்கள்.

கேள்வி: கொல்லப்பட்ட 46 படையினருள் துவக்குச்சூடு காரணத் தால் கொல்லப்பட்ட இராணுவத்தின் எண்ணிக்கை யாது?

பதில்: என்னிடம் இந்த விபரங்கள் இல்லை.

கேள்வி: விடுதலைப் புலிகளால் முன்னர் பிடிக்கப்பட்டுச் சித்திர வதை செய்யப்பட்ட இரு ஊர்காவற் படையினர் இரா ணுவ தங்ககத்தின் அமைப்பை அவர்களுக்கு கூறியிருந் தார்கள் என்பது உண்மையா?

பதில்: அப்படியிருந்திருக்கலாம். காட்டுக்குள் சென்ற எட்டுப் பேர் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டார்கள். இவர் களில் 6 பேர் விடுவிக்கப்பட்டு 2 பேர் தடுத்துவைக்கப் பட்டார்கள். இந்த விடயம்பற்றிய உண்மையை அறிய நாங்கள் ஆவன செய்துள்ளோம். இப்படியான தாக்குதல்கள் ஒன்றும் புதிதல்ல. இவை ஏற்படாதென் றும் கூறமுடியாது. இன்னும் இதுபோல் நடக்கலாம். குறிப்பாக படையினர் இலகுவாகத் தாக்குதலுக்கு உள் ளாகப்படககூடிய கிழக்கு மாகாணத்தில் இது நடக்க லாம். படையினர் அங்கு பாலங்களைக் காக்கவேண்டி யுள்ளது.

கேள்வி: வான்மூலம் உதவி கொடுப்பதில் தாமதம் ஏதும் இருந்ததா? இரண்டு மணித்தியாலம் தாமதத்தின் பின்பே உதவி கிட்டியுள்ளது.

பதில்: இல்லை. இரவு நேரங்களில் வான்மூலமான உதவி வழங்குவதை நாங்கள் விரும்புவதில்லை. இரவு நேரத்தில் வானூர்தியைச் செலுத்துபவர் எதைப் பார்க்க முடியும். இரவு நேரங்களில் வான்மூலமான உதவியைக் கொடுப்பதில்லை.

கேள்வி: ஒரு கவசவாகனம் தகர்க்கப்பட்டதாக நீங்கள் கூறியிருந்தீர்களே?

பதில்: ஆம், அமுக்கத்தினால் வெடிக்கவைக்கப்படும் கண்ணி வெடியினால் அது தகர்க்கப்பட்டுள்ளது. மிதிவெடியை விட இது பெரியதாகும். கவச வாகனத்தின் சில்லுகள் கழன்று வெளியே வந்துள்ளன. அமுக்கக் கண்ணி வெடிகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகின்றார்கள். அண்மைக் காலங்களில் நிலக்கண்ணி வெடிகளை மிதிவெடிகளுடன் அவர்கள் பொருத்திவைத்துள்ளார்கள். 1990ஆம் ஆண்டிலிருந்து இக்கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

கேள்வி: தகர்க்கப்பட்ட வை-8 ரக வான் ஊர்தியில் இருந்த வான்படை வீரர்கள் சிலரின் உடல்கள் மீட்கப்பட்டதா?

பதில்: ஆம், பத்து உடல்கள் மீட்கப்பட்டன. இவற்றுள் ஒன்பது உடல்கள் இனம்காணப்பட்டன. ஒன்று மாத்திரம் இனம் காணப்படவில்லை. படையினரே இவற்றை மீட்டெடுத்தார்கள்.

கேள்வி: இந்த விபத்தைப்பற்றி விசாரண என்ன நிலையில் உள்ளது?

பதில்: விசாரணையை வான்படையினர் மேற்கொண்டுள்ளனர். விசாரணை முடிவுற்றதும் அறிக்கையொன்று வெளியிடப்படும்.

கேள்வி: இரத்மலானையில் மீப்பாக் குண்டுகள் பகிரங்கமாகத் தயாரிக்கப்படுவது உண்மையா? இந்தக் கேள்விக்கு



தேர்ந்த

வான்படை மேலாளர் ஒருவர் பதில் தருவதை நாம் விரும்புகின்றோம்.

பதில்; எங்கள் அடுத்த சந்திப்பின்போது ஒரு வான்படை மேலாளர் இங்கு இருப்பதற்கு ஆவன செய்யப்படும்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க; இதற்காக வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

கேள்வி: இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன் படையினர் சோதிடர் ஒருவரைக் கலந்தாலோசிப்பதுண்டா?

கேணல் முனசிங்கா: அப்படி ஒன்றுமில்லை. படையினர் சாதகம் பார்த்து போர் புரிவதில்லை. போர் முனையிலுள்ள படைத் தளபதி ஒருவர் தனது சாதகத்தை பார்க்கின்றாராகில் அது அவருடைய சொந்த விடயமாகும்.

கேள்வி: வடக்கில் வான் பிரதேசத்திலிருந்து வீசப்படும் துண்டுப் பிரசுரங்கள் யாரால் தயாரிக்கப்படுகின்றன?

பதில்: கூட்டுப்படை இணைப்பு மேலாளரின் செயலகத்தினாலேயே இவை தயாரிக்கப்படுகின்றன.

கேள்வி: இப்படியாக வீசப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் இந்த ஆண்டு இறுதிக்குள் போர் முடிவுக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளதே ?

பதில்: இதைப்பற்றிய உண்மை நிலையை அறிய நான் ஆவன செய்வேன்!

கேள்வி: அந்தச் சோதிடர் யாரென அறிய நாங்கள் விரும்புகிறோம்.

திரு. விக்கிரமசிங்க; பொதுமக்கள் மற்றும் போராளிகளின் கவனத்திற்குப் பலதரப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் காலத்துக்குக் காலம் வீசப்பட்டு வருகின்றன.

# யாழ்குடாநாட்டை நெருக்குதலுக்குள்ளாக்குதல்

—றோகன் குணசேகரா—
-ஐலண்ட் 19-7-92

அண்மையில் முடிவடைந்த இரண்டாவது பலவேகய நடவடிக்கை யாழ் குடாநாட்டை நெருக்குதலுக்குள்ளாக்கியதுடன் விடுதலைப் புலிகள் குடாநாட்டுக்குள்ளேயும் வெளியேயும் ஊடுருவிச் செல்லும் வடக்குத் தெற்குப் பாதை துண்டிக்கப்பட்டமை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணத் தாக்குதல் நடவடிக்கைக்கு வழிவகுத்துள்ளது. 1990ம் ஆண்டு யூன் திங்கள் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சண்டை மூண்ட பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றி அங்கு அரசின் கட்டுப்பாட்டை நிலை நிறுத்த வேண்டுமென்பது இராணுவத்தின் மனத்தில் வேரூன்றியிருக்கின்றது.

1990-ம் ஆண்டின் நடுவிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக எடுக்கவிருந்த நடவடிக்கைகள் இராணுவத் தளபாடங்களினதும், படைவீரர்களினதும் பற்றாக்குறையிலும், ஏனைய இடங்களிலும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகக் கொடுத்துவரும் தாக்கங்களாலும் தடைப்பட்டுள்ளது. வன்னிக்கும், கிழக்குக்கும் தங்கள் வீரர்களையும், இராணுவத் தளபாடங்களையும் சுலபமாகக் கொண்டு செல்லும் விடுதலைப் புலிகளின் தரைப்பாதை

களையும் கடலேரிப் பாதைகளையும் துண்டித்துக் குடாநாட்டை நாட்டின் முதன்மை நிலப்பரப்புடன் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பைக் கைப்பற்றிப் போக்குவரத்தை முற்றுமுழுதாகத் துண்டித்துக் தமது குறிக்கோளை அடைந்துவிட்டதாகச் சென்றவாரம் இரா ணுவம் கூறியுள்ளது.

சென்ற ஆண்டு, முதலாவது பலவேகய நடவடிக்கையின் போது கடல்வழியாகவும், தரைவழியாகவும் படைகளை இறக்கி வெற்றிலைக்கேணியிலுள்ள கடற்கரைப் பகுதியை கைப்பற்றி ஆனையிறவு மீதான விடுதலைப் புலிகளின் முற்றுகையைத் தகர்த்தெறிந்ததோடல்லாமல் அதை மீட்டதுடன், வலம்புரி நடவடிக்கை மூலம் குடாநாட்டுக்கு மேற்கேயுள்ள தீவுகளையும், பூநகரியையும், சங்குப்பிட்டிப் பாதையையு இராணுவம் கைப்பற்றியது. இது யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ நடவடிக்கைக்கு வழிவகுத்ததோடல்லாமல் குடாநாட்டையும் தனிமைப்படுத்தியுள்ளது. தீவுகளிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டியடித்ததன் மூலம் இந்தத்தீவுகள் இராணுவக் கோட்டைகளாக மாற்றம்பெற்று, இ ரா ணு வ த் தி ன் ஒரு பிறிகேட் (Brigade) படைப்பிரிவு, கடற்படையி ா தரைப்படைப்பிரிவின் உதவியுடன் இங்கிருந்து இப்பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது.

இந்தத் தீவுகளும், பூநகரி மற்றும் சங்குப்பிட்டிப்பாதையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததனால், விடுதலைப் புலிகளின் படகுச்சேவைகள் யாழ்ப்பாணக் கடலேரியில் நடைபெறுவது கடினமாக்கப்பட்டது. இரண்டாவது பலவேகய நடவடிக்கையால் ஊரியான், கட்டைக்காட்டுப் பா தை க ள் தடைப்பட்டதன் காரணமாக ஆனையிறவுக்குச் சற்று மேற்கேயுள்ள ஆழமான கடலேரி வழியாக மக்கள் பிரயாணஞ் செய்யத்தொடங்கினர். இந்தப் பாதை தடைசெய்யப்பட்ட நீர்ப்பரப்பாகவும், இந்தப்பாதையை உபயோகிக்கும் மக்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் எனவும் அரசாங்கத்தால் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மே திங்கள் நடைபெற்ற சண்டமாருதம் நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் தொலைத்தொடர்புகளை ஒட்டுக்கேட்ட இராணுவத்திலுள்ள மின் இயல் வல்லுநர்கள் இரண்டாவது பலவேகய நடவடிக்கைக்கு வெற்றிலைக்கேணியில்

படை குவிப்பதைப்பற்றி அவர்கள் அறிந்துள்ளதாகவும், இதனால் யாழ்குடாநாடு, நாட்டின் முதன்மை நிலப்பரப்பிலிருந்து துண்டிக்கப்படும் ஆபத்து உண்டென்பதும் அவர்களுக்குத் தெரியும் என்பதும் தெரியவந்துள்ளது எனக்குறிப்பிட்டுள்ளனர். வெற்றிலைக் கேணியில் படைகுவிப்பதைத் தடுக்கும் முகமாகவோ அல்லது தாமதப்படுத்தும் முகமாகவோ விடுதலைப் புலிகள் வெற்றிலைக்கேணியிலுள்ள தங்ககத்தின் மீது எறிகணைத் தாக்குதல்களைத் தொடங்கியமையினால் இந்தத்தளத்தை வைத்திருப்பதற்காக இராணுவத்தினர் முழு அளவிலான நடவடிக்கைக்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவேண்டியதாயிற்று இவ்வேளை விடுதலைப் புலிகள் காப்பரண்களையும், தளங்களையும் அமைத்ததோடல்லாமல் கண்ணிவெடிகளையும் புதைத்து இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் முன்னேற்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்டனர்.

மன்னார், காங்கேசன்துறை, புல்மோட்டை, முல்லைத்தீவு, அலம்பில், திருக்கோணமலைஆகியமுன்னணித் தளங்களில் இருந்து யூன் திங்கள் இரண்டாவது வாரம் படைகுவிப்புத் தொடங்கியது. விடுதலைப்புலிகளின் எறிகணைத்தாக்குதல்களை முறியடித்துக் கடற்கரைப் பக்கத்தைக் காப்பாற்றும் ஏழாவது பிரிகேட்டின் கீழுள்ள முதலாவது பட்டாலியனான கஜபாகு அணியினரும், ஆறாவது பட்டாலியனான கெமுனு காவற்படை அணியினரும் ஈடுபட்டனர். இவர்கள் யூல் (Yul) கோட்டையையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதும் வீடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்ற இந்நோத்தில் அதிரடிப்படைப்பிரிவினரும், இரண்டாவது டிவிசன் போர்த் தந்திரோபாயத் தலைமைக் கட்டுப்பாட்டுப் பிரிவும், வெற்றிலைக் கேணிக்குச் சென்றது.

ஆறாவது பிரிகேட் பிரிவின் கீழ் கெமுனு காவற்படையின் ஆறாவது பட்டாலியன் முள்ளியானிலுள்ள கோவில் பகுதியில் ஒரு முன்னணிக் தளத்தைக் கடும் சண்டையின் பின்னர் உருவாக்கியது. கெமுனு படைப்பிரிவினருக்குப் பதிலாக வந்த ஏழாவது பட்டாலியனான சிங்க றெஜிமென்ட் படைப்பிரிவினர் விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுப் பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்ததோடல்லாமல் கண்ணிவெடியிலும் சிக்கினர். தங்களுக்கு உதவிகோரிய விடுத

லைப் புலிகள் ஒரு சமயத்தில் முன்னேறிய படையினரின் முயற்சியை முறியடித்தனர். மேலதிக படையினரின் உதவியுடன் மீளவும் சண்டையிட்ட படையினர் இந்தப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

## பலப்படுத்தப்பட்ட தளங்கள்

அடுத்தபடியாக ஆறாவது, ஏழாவது பிரிகேட்டைச் சேர்ந்த அதிரடிப்படைவீரர்கள் இடுக்கிப்பொறித் தாக்குதல் மூலம் இரு முனைகளில் நித்திய வெட்டி, பொத்துநாகன், புல்லாவெளி ஆகிய இடங்களில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பலப்படுத்தப்பட்ட தளங்களைத் தாக்கத் தொடங்கினர். இந்தத் தாக்குதல்களில் முதலாவது கஜபாகு பிரிவைச் சேர்ந்த வீரர்களும் ஆறாவது கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்களும் பங்கேற்றனர். சிங்கப்படைப்பிரிவின் ஏழாவது பிரிவு வீரர்களும் கெமுனு படைப்பிரிவின் ஆறாவது பிரிவு வீரர்களும் இவர்களுக்கு உதவியாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். விடுதலைப்புலிகள் பலத்த எறிகணைத் தாக்குதல்களுடன், பலத்த எதிர்ப்பையும் இரு முனைகளிலும் காட்டினர். இத்தாக்குதலின் போது ஆறாவது பிரிகேட் பிரிவைச் சேர்ந்த கணிசமான வீரர்கள் மிதிவெடிகளில் அகப்பட்டுத் தங்கள் கால்களை இழந்துள்ளனர். விடுதலைப் புலிகளால் பலப்படுத்தப்பட்ட பொத்துநாகன் ஊர் அடுத்த நாள் ஆறாவது கெமுனு காவற்படையினரின் கைகளில் வீழ்ச்சியுற்றது. இதன் பின்பு இரண்டாவது பிரிகேட் பிரிவின் கீழுள்ள முதலாவது சிறிலங்கா இலகு காலாட்படை முள்ளியான் பக்கம் தாக்குதல்களைத் தொடங்கி பொத்துநாகன், புல்லாவெளி ஆகிய இடங்களை இணைத்து விடுதலைப்புலிகளின் வடக்குத் தெற்குப் பாதையைத் தடைசெய்தது.

அதன் பின்னர் முதலாவது பட்டாலியனின் கெமுனு காவற்படையினர் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பை ஆனையிறவுக் கடலேரிவரை விரிவுபடுத்தினர். இடுக்குப்பொறித் தாக்குதல் முறைமூலம் அதிரடிப்படையினர் பச்சிலைப்பள்ளி, கோவில்வயல் ஆகிய நிலப்பரப்புக்களைக் கைப்பற்றினர். இத்தாக்குதலின் போது ஒருமுறை சமரில் ஈடுபட்ட வீரர்கள் இரவில் முன்னேறித் தீவிரவாதிகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கினர். தாங்கள் சுற்றிவளைக்கப்படுவார்கள் என்பதை அறிந்த விடுத

லைப் புலிகள் மூன்று மணித்தியால சமரின் பின்னர் பின் வாங்கிச் சென்றனர். இதனால் அடுத்தபடியாக சங்கத்தார் வயல் வீழ்ச்சியுற்றது.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வீதியில் சாவகச்சேரிக்கு முன்னுள்ள இயக்கச்சி கூடல் (சந்தி) சுற்றிவரப் பலப்படுத்தப் பட்டிருந்ததோடு அல்லாமல் அங்கே தாங்கி எதிர்ப்புக் கண்ணி வெடிகளும், மிதிவெடிகளும் புதைக்கப்பட்டிருந்தன. ஐந்து மணித் தியாலக் கடும் சமரின் பின்னர் இராணுவம் தன்னுடைய தேவைக்கு உபயோகிக்கும் என்ற எண்ணத்தில் 'கம் உதாவ' தொடர்மாடிக் கட்டிடத்தை இடித்து வீழ்த்தியபின் விடுத லைப் புலிகள் இயக்கச்சி கூடலிலிருந்து விலகிச் சென்றனர். தனிமைப்படுத்தப்பட்ட ஆனையிறவுத் தளத்துக்குத் தண்ணீர் வழங்கும் கிணறுகளுள்ள இயக்கச்சியைக் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததன் பயனாக ஆனையிறவு இராணுவத் தளத்துக்கு நன்னீர் பெறும் சிக்கல் தீர்ந்தது. ஆறா வது பிரிகேட் பிரிவு இயக்கச்சிக்கு மேற்கேயுள்ள நிலப்பரப்பை தங்கள் கைக்குள் கொண்டுவந்ததோடல்லாமல் ஆனையிறவுத் தளத்திலிருந்து வந்த ஐந்தாவது கெமுனு காலாட்படை அணி யுடன் இணைந்துகொண்டது.

## கடற்படை

எட்டுக் காலாட்படைப் பட்டாலியன்கள் கவசவாகனப் படைப்பிரிவு, பீரங்கிப் படைப்பிரிவு, சமிக்கைப்பிரிவு, பொறியியல் பிரிவு ஆகியவற்றின் துணையுடன் இந்தச்சமரில் ஈடுபட்டனர். சண்டையில் ஈடுபடும் மூன்று பிரிகேட்டுடன், கைப்பற்றிய நிலப் பரப்புக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஒரு பிரிகேட்டும் ஈடுபடுத்தப்பட்டது. குடாநாட்டின் கழுத்துப் போன்ற இந்தப் பாரிய நிலப்பரப்பில் 60 கிலோ மீற்றர் தூரம் வரை இந்த நடவடிக்கையின்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண் டுவரப்பட்டது. கிழக்கு, வடக்குப் பிராந்தியக் கடற்படைக் கப் பல்கள் சிறப்புப்படையினரை நடவடிக்கையில் ஈடுபடும் நிலப்ப ரப்பில் இறக்கியதோடல்லாமல் பீரங்கி மற்றும் எறிகணைத் தாக்குதலிலும் ஈடுபட்டன. அத்தோடு எஸ். எப் 260 ரக சியா மாசெற்றி வானூர்திகளும் குண்டு வீசுவதற்காக மாற்றம் செய் யப்பட்ட வை12 ரக வானூர்திகளும் பீரங்கி பூட்டப்பட்ட



தேர்ந்த

உலங்கு வானூர்திகளும், செசுனா ரக கண்காணிப்பு வானூர்திகளும் இந்தச்சமரில் ஈடுபடுத்தப்பட்டதோடு, காயமடைந்தவர்களை அப்புறப்படுத்துவதற்கும் உதவின. இராணுவ மருத்துவ நிபுணர்களும், பொது மருத்துவ நிபுணர்களும் காயமடைந்தவர்களைக் கொண்டுவந்து வைத்திருக்கும் நிலையங்களில் அவர்களுக்குச் சிகிச்சையளித்தனர். ஒரு ரீ 55 ரகத்தாங்கி விடுதலைப் புலிகளின் ஆர். பி. ஜி தாக்குதலுக்குள்ளாக்கி அழிக்கப்பட்டதோடல்லாமல் ஒரு வை 8 ரக வானூர்தியும் வீழ்ந்து நொருங்கி எரிந்துபோயிற்று.

இயக்கச்சிப் பகுதிப் பொறுப்பாளரான நித்தியா மற்றும் யாழ்ப்பாண இராணுவத் தளபதி தினேஷ் அவர்களுடைய தலைமையின் கீழ் ஆயிரம் போராளிகளை விடுதலைப் புலிகள் இந்தச் சமரில் ஈடுபடுத்தியிருந்தனர் என்பதை விடுதலைப் புலிகளின் தொலைத் தொடர்புச் செய்திகளை இடைமறித்துக் கேட்டபோது தெரியவந்தது: வடபகுதியிலிருந்து குடாநாட்டைப் பிரித்தெடுக்கும் சமரின் இறுதிக் கட்டத்தின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் அங்கிருந்து மாங்குளம் காட்டுக்குள் இரகசியமாகச் சென்றடைந்துள்ளார் என இராணுவம் கூறுகின்றது.

விடுதலைப் புலிகளின் பலத்தைப் பலவீனப்படுத்திக் கிளர்ச்சியின் தாக்கத்தைச் சகிக்கக் கூடிய ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்காகப் புதிய தாக்குதல்களில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் ஆயத்த நிலையில் இருக்கின்றனர் இந்தத் தரைப்படையினரை யாழ்ப்பாணத்துக்குள் அனுப்புவதற்கு முன்னர் அவர்களது இழப்புக்களைக் குறைக்கும் வகையில் அங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் பல இலக்குகளை வான் படை குண்டுவீசி அழிக்கும். ★

சுவர்க்கம் நம்மைக் காக்கட்டும் என்பது பழைய மதம். நாம் (மனிதர்கள்) ஒருவருக்கொருவர் காத்துக் கொள்வோம் என்பதே புதிய மதம்.

-ஜார்ஜ் எலியட்

# வை 8 வானூர்தியின் பேரிழப்பின் பின்னணியிலுள்ள துன்பியல் நாடகம்

*- சர்மல் விஜேவர்த்தனா-* (சண்டே ரைம்சு 12-7-92)

*சென்ற ஞாயிறு ஆனையிறவில் நிகழ்ந்த வை 8 (y 8) வானூர்தி விபத்தின் காரணங்கள் புரியாத புதிராகவே இருக்கும்.*

*தன்னால் கட்டுப்படுத்த முடியாதவற்றையெல்லாம் ஊழ் என்று சொல்லி ஆறுதல் அடைவது மனித இயல்பு. சென்ற வாரம் யாழ்ப்பாண வான் பிரதேசத்தில் வான்படையினரின் வானூர்தி ஒன்று 19 பேர்களுடன் விழுந்து நொருங்கிய நிகழ்ச்சியை ஊழ், தெய்வத்தின் தீர்ப்பு, அல்லது நடப்பது நடந்தே தீரும் என்று சொல்லி ஆறுதல் அடையவேண்டிய நிலையில் உள்ளோம். போரினால் ஏற்பட்ட வான்விபத்து தேசத்தின் விடை காண முடியாத முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே இருக்கும்.*

*''என்ன நடந்தது என எங்களால் கூறமுடியாத நிலையில் உள்ளோம். அந்த நேரத்தில் இந்த வானூர்தியில் வெடிமருந்துகள் இருந்தமையால் ஏதாவது நடந்து இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம்'' எனக்கூறும் வான்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா அவர்கள், ''சீர்கெட்ட காலநிலை காரணமாகவோ அல்லது வானூர்தியில் இயந்திரக்கோளாறு ஏற்பட்டதாலோ அல்லது வானூர்திக்குப் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டதாலோ இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம்'' என மேலும் கூறினார்.*

விடுதலைப் புலிகள் இந்த வானூர்தியைச் சுட்டு வீழ்த்த வில்லையெனவும், இந்த வானூர்தி வீழ்ந்து நொருங்கியதற்கு நாசவேலை காரணமில்லை எனவும் வான்படை மேலாளர்கள் திட்டவட்டமாக மறுத்துக்கூறுகின்றனர். விபத்து நடந்த நேரத்தில் இந்த வை 8 ரக வானூர்தியிலும் பார்க்கக் குறைந்தளவு உயரத்தில் எதிரிகளின் பிரதேசத்துக்குள் பறந்து கொண்டிருந்த ஏனைய வானூர்திகள் பாதுகாப்பாக இருந்துள்ளன என நியாயம் கற்பிக்கின்றார்கள். இந்த விபத்து நடைபெற்ற நேரத்தில் விடுதலைப் புலிகள் தங்கள் நிலைகளைப் பலப்படுத்துவதிலேயே கவனஞ்செலுத்தியிருப்பார்களே தவிர வானூர்திகளைச் சுடும் துப்பாக்கிகளை ஆகாயத்தை நோக்கி உயர்த்தி இருக்கமாட்டார்கள் எனவும் வாதாடுகின்றனர்.

இந்த விபத்தைப் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த விசாரணை அறிக்கை மூலம் விபத்திற்கான உண்மையான காரணத்தை அறிய முடியும் என்ற நம்பிக்கை வான்படைத் தளபதிக்கு இல்லை. ஊழோ அல்லது கடவுளின் சோதனையோ இந்த விபத்தில் சிக்கிய வானூர்தியின் பாகங்கள் எதிரியின் பிரதேசத்திலேயே வீழ்ந்துள்ளதால் இது எங்கள் கைக்குக் கிடைக்கப்போவதில்லை. ஆதலால் ஆற்றல் மிகுந்த நோக்கிகள் மூலமே இந்தச் சிதைவுகளைப் பார்க்கமுடியும்.

## சிதைவுகள்

அதி உயரத்தில் இருந்து எடுக்கப்பட்ட படத்தைப் பார்க்கும்போது இந்த வானூர்தியின் சிதைவுகளான ஒரு சிறகும், வாலும் விடுதலைப் புலிகளின் தங்ககமொன்றிற்கு மிக அருகாமையில் இருப்பதைக் காண முடிகின்றது. பற்றைகள் அடங்கிய பிரதேசத்தில் காணப்படும் நீண்ட, அகலமான கறுப்புக்கறை இந்த விமானம் விழுந்த இடத்தைக் காட்டுகின்றது.

''இந்த எரிந்த நிலையிலுள்ள வானூர்தியைப் பார்க்கும்போது இதில் பயணஞ்செய்தவர்கள் எவரும் உயிர்தப்பியிருப்பார்களா எனக் கூறமுடியாது. பொய்யான நம்பிக்கையை ஊட்டுவது தேவையற்றதாகும்'', எனக் கூறுகின்றார் எயர் மார்சல் குணவர்த்தனா அவர்கள்.

தரையில் நின்று போராடும் படைகளுக்குத் தேவையான அனைத்தையும், வான்படை, தனது வசமிருக்கும் அதி சுமை

யைக் கொண்டு செல்லக்கூடிய வை 8 ரக வானூர்தி மூலம் தொடர்ந்தும் செய்துவரும். விபத்துக்குள்ளான இந்த வானூர்தியின் பெறுமதி, அது வாங்கும் போது 4 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும் (இலங்கை நாணயத்தில் ரூபா 172 மில்லியன்களாகும்) இந்த வானூர்திதான் விழுந்து நொருங்கும்வரை ஐந்து ஆண்டுகள் கடமையாகச் சேவை செய்து வந்துள்ளது. அதிக பாரத்தைச் சுமந்து செல்லக்கூடியதும், போர்க்காலத்திலும் சமாதானக் காலத்திலும் உபயோகிக்கக்கூடிய இதேபோன்ற வானூர்தியை வாங்குவதற்கு வான்படை முயற்சிக்கின்றது.

இப்போது இப்படிப்பட்ட வானூர்திகளை வாங்குவதாயின் 6 மில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படும். ஆனால் நன்கு பயிற்சிபெற்ற 19 வான்படை மேலாளர்களின் பெறுமதி என்ன?

"மனிதனின் உயிருக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். நாம் எப்பொழுதும் விபத்தைத் தவிர்க்கவே விரும்புகின்றோம். ஆனால் நினையாப் பிரகாரமாகச் சில செயல்கள் மனிதனின் ஆற்றல்களை மீறி நடந்துவிடுகின்றன. "போர்ச் சூழ்நிலையின் போது நாம் எதிர் பாராதது நடந்துவிடுகின்றது. எதுவும் நடக்கலாம் என்பது எமக்குத் தெரியும்" இதுதான் இப்பொழுது 19 பேர்களை ஒரு விபத்தில் இழந்த தேர்ச்சிபெற்ற நடைமுறைச் சிக்கல்களை அறிந்த, போற்றத்தக்க ஏயர் மார்சலின் கூற்றாகும். இறந்த ஆறு மேலாளர்களையும் மிகச்சிறந்த வீரர்கள் என்றும் இறந்த மற்றையோரை குறைத்தும் மதிப்பிடமுடியாது. வானூர்தியில் ஏறிவிட்டால் பதவிகள் பொருட்டல்ல எல்லோரும் கூட்டாக ஓட்டுனர்களாகவே கணிக்கப்படுபவர்" என வான்படைத்தளபதி திரு. குணவர்த்தனா கூறினார்.

## பேராவல்

இந்த வானூர்தி புறப்படும் போது அதன் தலைவனாக (Captain) இருந்த ஸ்குவாட்ரன் லீடர் பைசால் கசீர் (Squadren Leader Faiser Casseer) அவர்களும் அவரது துணை ஓட்டுனராக கடமையாற்றிய (Co-Pilot) திரு. பிரியந்தா பர்னாந்து அவர்களும் சிறந்த நண்பர்களும் தமது மேலாளர்களிடமும், தமக்குக் கீழ் உள்ளவர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றவர்களும் ஆவர். "இவர்கள் இருவரும் சிறந்தவர்கள். மற்றவர்களின் துய

ரத்திலும், துன்பத்திலும் அக்கறையுடையவர்கள். அவர்கள் அடிமட்டத்திலுள்ளோருக்கும் உதவி செய்யத்தயங்காதவர்கள்'' எனக் கூறுகின்றார் இவர்களின் தோழர்களில் ஒருவர்.

மொரட்டுவவிலுள்ள பிரின்ஸ் ஒப்வேல்ஸ் கல்லூரியில் மாணவனாக இருந்த காலந்தொட்டுத் தான் ஒரு வானூர்தி ஓட்டியாக வரவேண்டுமென்று திரு. கசீர் பேராவல் கொண்டார். ஒரே நாளில் கடற்படைக்கும், வான் படைக்கும் நேர்முகப்பரீட்சைக்கு வரும்படி இவருக்கு அழைப்பு வந்தபோது வான்படையில் பணிபுரிவதையே இவர் விரும்பினார். வான்படையில் பணிபுரியும் ஒரேயொரு தகுதியான வானூர்தி ஓட்டி திரு. கசீர் அவர்கள் மட்டுமே ஆவர். முப்பத்திரண்டு வயதான இவர் திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தையானவர். ஆடல் பாடல்களிலும் சிரித்து மகிழ்வதிலும், சிலேடை, சேட்டைகள் விடுவதிலும் தனது ஓய்வு நேரங்களைக் கழிப்பவர். கிற்றார் வாசித்தும், மேளம் அடித்தும் தன்னைச் சூழ இருப்பவர்களை கலகலப்பாக இருக்கச் செய்பவர்.

நண்பர்களின் கூற்றுப்படி திரு. பிரியந்தா கருமமே கண் என்ற கோட்பாடு உடையவர். கலகலப்பாகப் பேசுவது குறைவானாலும் இவரை எல்லோரும் நேசிப்பார்கள். சிரித்து மகிழ்வார். ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு வரையறை இருந்தது. ஏதேனும் குறைகண்டு அவரைக் கண்டித்துவிட்டால் சிரித்து மழுப்பி விடுவார். அதனால் அவரில் குற்றங்காண்பது, குற்றங்காண்பவரது உள்ளத்தையே உறுத்தும் எனக் கூறுகின்றார் அவருடைய மேலாளர் ஒருவர்.

விங்கொமாண்டர் (Wing Commander) திரு. இரவி அருந்தவநாதன் அவர்களும் திரு. ஜயலத் வீரக்கொடியும் இவர்கள் இருவரிலும் நல்ல மதிப்பை வைத்திருப்பவர்கள். இவர்கள் இருவரும் முதல்தரமான ஓட்டுனர்கள். செயல்முறைப் பயிற்சி மூலம் உன்னத நிலைக்கு வந்தவர்கள். அத்தோடு நற்குணம் படைத்தவர்கள் என இவர்கள் இருவரைப் பற்றியும் திருவாளர்கள் அருந்தவநாதனும், ஜயக்கொடியும் கூறுகின்றனர். ஒரு சரியான ஓட்டுனருக்குத் தன்னம்பிக்கை (Self Reliance) அதிகளவில் இருக்க வேண்டும். ஆனால் பைசாலிலும், பிரியந்தாவிலும் தன்னம்பிக்கை சராசரிஓட்டுனர்களிலும் பார்க்க கூடுதலாக இருந்தது, தங்கள் பிரிவுக்குக் கட்டுப்பாட்டு மேலாளராக வருவதற்கான வாய்ப்புக்கள் இவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன''. என மேலும் இந்த இருவரும் கூறுகின்றனர்.

நலன்கள்

இருபத்தெட்டு வயதான சுரேஸ் மென்டிஸ் சென்தோமசு கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் மணமுடித்து மொறட்டுவையில் வாழ்ந்து வந்தார். இவர் ஒரு தகுதிவாய்ந்த மேலாளர். மின்இயல் துறையிலும் அதைச்சார்ந்த துறைகளிலும் நாட்டமுடையவர்.

திருவாளர்கள் எம். வி. கே. பி. எச். விஜயக்கோன், ஆர். ஆர். எம். எஸ். இரத்னாயக்கா, என். ஜே. பிரேமரத்தினா ஆகிய மூவரும் கொத்தலாவலை காப்புக் கல்லூரியில் பயின்றவர்கள்.

வானூர்தி மேலாளரான (Flying Officer) இருபத்தைந்து வயதான விஜயக்கோன் இறக்கும்வரை மணம் முடிக்காதவர். கொத்தலாவலைக் காப்புக் கல்லூரியில் காப்புத்துறையில் பட்டம் பெற்ற இவர் அக்கல்லூரியின் துடுப்பெடுத்தாட்ட வீரராகும்.

இருபத்தெட்டு வயதான சமந்தா இரத்னாயக்கா மணம் முடித்தவர். மாதம்பையிலுள்ள மெதகம மகாவித்தியாலய மாணவரான இவர் கொத்தலாவலை காப்புக் கல்லூரியில் காப்புத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர்.

ஆனால் இருபத்திநான்கு வயதான வானூர்தி மேலாளரான நுவான் ஜீவக பிரேமரத்னாதான் மிகத்திறமை வாய்ந்தவர் என எல்லோராலும் போற்றப்படுபவர். இவர் சென்தோமசு ஆரம்பப் பாடசாலையினதும், ஆனந்தாக் கல்லூரியினதும் பழைய மாணவராவார். கொத்தலாவலை காப்புக் கல்லூரியில் இராணுவ ரீதியிலும், ஏனைய துறைகளிலும் மற்றெல்லோரிலும் பார்க்கச் சிறந்தவர் எனக் கணிக்கப்பட்டவர். ஆறடிக்கு மேற்பட்ட உயரத்தையுடைய பிரேமரத்தினா உதைபந்தாட்டம், றக்பி உதைபந்தாட்டம், கூடைப் பந்தாட்டம் ஆகியவற்றில் கொத்தலாவலை காப்புக் கல்லூரியில் விளையாடிப் பரிசில்கள் பெற்றவர். இக்கல்லூரியிலிருந்து காப்புத்துறையில் முதல் வகுப்பில் தேறி கலைமாணிப் பட்டம் பெற்றவர். இவர் கல்வியில் மிகச் சிறந்து விளங்கினார். இந்தஆண்டு ஜனவரித் திங்கள் கொத்தலாவலை காப்புக் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்பட்ட பதினொரு பரிசில்களில் ஐந்து பரிசில்களைப் பெற்றுக்கொண்டவர். மிகஅண்மைக் காலத்தில் இருந்த மாணவர்களுள் மிகச் சிறந்தவர் எனக் கொத்தலாவலை காப்புக் கல்லூரி மேலாளர்களினால் போற்றப்பட்டவர்.



தேர்ந்த

இந்தப் பேரச்சம் தரும் நிகழ்ச்சியில் உயிர் நீத்தவர்களை யிட்டுக் கவலைப்படும் நெருங்கிய உறுப்பினர்களுக்குக் கைய ளிக்கப்பட்ட பிரேதப் பெட்டிகளில், இறந்தவர்களின் சடலங்கள் இல்லை என்பதை அறிந்ததும் அவர்கள் தாங்கமுடியாத துக்கத் துக்கு ஆளாகி இருப்பார்கள், இறுதி மரியாதைகள் குடும்பத் தினராலும் உறவினர்களாலும் செலுத்தப்பட்டாலும், இறந்தவர் களின் பெற்றோர்களுக்கும், மனைவிமார்களுக்கும், தங்கள் செல் வக் குமாரர்களும், கணவன்மார்களும், போரின் நடுவில் ஆயிரம் அடி உயரத்தில் காணாமல் போனதை நினைத்துப் பார்க்கவே முடியாமலுள்ளது. எல்லோரும் இவர்கள் இறந்துவிட்டார்க ளென்றே கணிப்பீடு செய்கின்றனர்.

## அசாதாரணமானது

பைசால் அனர்களின் மனைவியின் பெயர் செறினா கசீர் ஆகும். இருபத்தெட்டு வயதான செறினாவுக்கு இரண்டு வயது டைய மகள் ஒருவர் இருக்கின்றார். விரைவில் இன்னுமொரு குழந்தையை பெற்றெடுக்கப் போகின்றார். பைசால் நல்ல ஒரு குடும்பத் தலைவர் என அவரை சோகத்துடன் நினைவுகூருகின் றார்.

செறினா இரத்மலானை வானூர்தி நிலையத்தில் வானூர்தி கட்டுப்பாட்டு மேலாளராகக் கடமையாற்றுகிறார் அவளுடைய கணவனின் உடல் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதால், அவன் உயிருடன் இருக்கக்கூடும் என்று நம்பிக்கை வைத்துத் தன்னைத் தானே ஏமாற்றிகொள்ள அவள் விரும்பவில்லை. நான் இந்தத் திணைக்களத்தில் நெடுங்காலமாக இருக்கின்றேன். எனக்கு நல் லது கெட்டது நன்றாக விளங்கும் என அவள் கூறினாள். இரு வரும் ஒரே திணைக்களத்தில் தொழில் புரிவதால் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவளது கணவருக்கு தொழில் ரீதியாக ஏற்படும் ஒவ்வொரு இடர்களையும் அவள் நன்கு அறிந் திருந்தாள். ''அவருக்கு ஏற்படும் இன்னல்களைப் பற்றி எங்கள் இருவருக்கும் நன்றாக விளங்கும். ஆனால் இந்த இடர்மத்தியிலும் அவர் தொழில் புரிவதையிட்டு கலங்காமல் நான் இருந்து வந் துள்ளேன். அவரின் பெறுமதி கணக்கிட முடியாதது. நான் எனது இன்னல்களைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை'' எனக் கூறு கிறாள் செறினா கசீர்.



PUBLIC LIBRARY,
JAFFNA.

காணாமல்போயுள்ள வான்படையைச் சேர்ந்தவர்களின் உடல்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் செறினாவும் அவளைப் போன்ற ஏனையோர்களும் இந்த உடல்கள் கண்டுபிடிக்கப்படும் என்னும் நம்பிக்கையில் வாழ விரும்பவில்லை. ''பொய்மையான நம்பிக்கையில் நான் வாழ விரும்பவில்லை. அது எனது குழந்தைக்கு உகந்ததல்ல''. எனக் கூறினாள் செறினா. பைசால் தனது மகள் அமரந்தாவில் பாசத்தைக் கொட்டி வைத்திருந்தார். அந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு அவளது தந்தை காணாமற் போய்விட்டார், அனேகமாக இறந்துவிட்டார் எனக் கூறுவதுதான் கடினமாக இருக்கிறது. ''தந்தை சுகவீனமுற்றிருக்கிறார் எனக் கூறியுள்ளேன், ஆனால் அவளுக்கு மறைவையிட்டு சொற்பகாலத்தில் கூறப்போகின்றேன்.''

செறினாவுக்கும் அவளைப் போன்றோருக்கும் ஏற்பட்ட துயரத்தின் தாக்கம் இன்னமும் நன்றாக ஓயவில்லை, அதிர்ச்சி, சோகம், இன்பதுன்பமற்ற நடுநிலை ஆகியவற்றின் மத்தியில் காணாமல் போனவர்களின் உறவினர்களும் நண்பர்களும் தங்களுக்கு ஏற்பட்ட துன்பநிகழ்ச்சியையிட்டு யாரையும் குறைகூற விரும்பவில்லை. ''இந்த நடைமுறை முழுவதிலுமே தவறு உண்டு. இது யாரையும் காப்பதில்லை'' எனக் கூறுகின்றார் கொத்தலாவலை காப்புக் கல்லூரியைச் சேர்ந்த பட்டறிவு மிக்க மேலாளர் ஒருவர். இந்தப் பத்தொன்பது பேருக்கும் நடந்தது என்ன என்பது புதிராகவே உள்ளது என்பதில் ஒருமித்த கருத்தை எல்லோரும் வெளியிடுகின்றனர். இவர்கள் இறந்திருப்பார்களா? அல்லது போர்க் கைதிகளாக உள்ளனரா என அங்கலாய்க்கின்றனர். ஆயிரம் ஆயிரம் போர் வீரர்கள் போர்முனையில் இறந்துகொண்டிருக்கும் பொழுது இந்தத் தனி நிகழ்ச்சியையிட்டு ஏன் இவ்வளவு அலட்டிக் கொண்டிருக்கின்றார்கள்?. ஏனெனில் இந்தத் தனி நிகழ்ச்சியில் விட்ட குறைகளும், தொட்ட குறைகளும் அத்துடன் விபரம் புரியாத காரணிகளும் இந்தத் துன்பியல் நாடகத்துக்குத் தேசத்தின் அனுதாபத்தைத் தேடிக்கொடுத்துள்ளது.

❀ ❀ ❀

---

எந்தப் பக்கமும் சாயாமல் மதில் மேல் அலங்காரமாக உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்க்கும் கலை ஒரு காலத்திலும் முழுமையான கலையாக முடியாது.

—சாமுவேல் பட்லர்

# கிரோசிமா - இன்றும் மறக்கப்படவில்லை

–சித்திக் கவுச–
(ஐலன்ட் 7-8-92)

**1945-ம்** ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6-ம் திகதியன்று என்றும்போல் கதிரவன் யப்பானியப் பட்டினமான கிரோசிமா பட்டினத்தில் உதித்தான். போர் நடந்துகொண்டிருந்த வேளையிலும் உவுமிக்கோ (Fumiko) என்னும் குடும்பப்பெண் தனது அன்றாட வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தாள். கிரோசிமாவிலிருந்து 40 மைல்களுக்கப்பால் இட்சுகோ (Itsuko) என்ற பன்னிரண்டு வயது பாடசாலை மாணவி தனது தாயாருடன் சேர்ந்து வயலில் வேலை செய்து கொண்டிருந்தாள். இப்போர்க்காலச் சூழ்நிலையில் நாளாந்தச் சீவியத்தை நடத்த இவளது உழைப்பும் அவசியமாகவிருந்தது.

இவ்வேளையில் ஐக்கிய அமெரிக்காவின் வான்படைக்குச் சொந்தமான பீ. 29 ரகக் குண்டு வீச்சு வானூர்தியான "இனோடா கிறே" (Enoda Gray) என்ற வானூர்தியின் ஓட்டுனரான கேணல் ரிப்பெற்ஸ் ((Caronel Tibbets) பெயர் குறிப்பிடாத ஒரு வான்படைத் தளத்திலிருந்த தன்னுடைய தோழர்களைக் கட்டுப்பாட்டு நிலையங்களைக் கவனிக்கும்படி கூறி விட்டு 20-ம் நூற்றாண்டில் மனித குலத்துக்குப் பேரழிவை ஏற்படுத்திய குண்டு வீச்சை நடாத்துவதற்காகப் புறப்பட்டுச் சென்றார்.

## தென்பட்டது

தெளிவான வானத்தையும், பலகணியூடாக வரும் தென்றற்காற்றையும் அனுபவித்துக்கொண்டிருந்த உவுமிக்கோ, அமெரிக்க பீ. 29 ரக வானூர்தியொன்று தென்பட்டதாகவும் அது கிரோசிமா நோக்கி விரைவதாகவும் வானொலி அறிவித்ததைச் சடுதியாகக் கேட்டாள்.

பட்டினத்திற்குக் கடைகளுக்குச் சென்றுள்ள அவள் மகன் காப்பாக அங்குள்ள பதுங்கு குழிக்குச் சென்று காப்பைத் தேடிக் கொள்வான் என வழிபட்டுக் கொண்டு, அடிக்கடி குண்டு வீசப் படும் நேரங்களில் காப்பைத் தேடிக்கொள்ளும் அருகிலுள்ள பதுங்கு குழிக்குத் தனது குடும்பத்துடன் சென்றாள். அப் பதுங்கு குழியிலுள்ள சிறு துவாரத்தினூடாகத் தூரத்து வானில் ஒரு ஒளிபோன்று தோன்றிய ஒரேயொரு அமெரிக்க பீ. 29 ரகக் குண்டு வீச்சு வானூர்தியைக் கண்டதும் குண்டு வீச்சு சொற்ப நேரம்தான் நடக்கும் என மன நிறைவு எய்தினாலும் அமெரிக்கர்கள் எப்பொழுதும் பட்டினங்களையே குண்டு வீசித் தாக்குவதையிட்டு கலவரமடைந்தாள்.

அந்த பீ. 29 ரகக் குண்டு வீச்சு வானூர்தி ஒரேயொரு குண்டை விசியதும், தான் பார்த்ததைத் தன் குடும்பத்துக்கு அறிவிக்க உவுமிக்கோ திரும்பிய போது ஒரு பாரிய வெளிச் சத்தினால் முழுப் பிரதேசமும் ஒளிமயமாகியது. தனது முதுகுப் புறத்தில் எரிவு ஏற்படுவதை உணர்ந்தபோது அப்பதுங்கு குழியிலுள்ள சிறு தூவாரத்தினூடாகப் பாரிய கரங்களினால் தூக்கி வீசப்பட்டது போல் அவள் வீழ்ந்தாள். அப்போது நேரம் காலை 8.11 மணியாகும். இத்துடன் உலகில் அணு யுகத்துக்கு முந்திய காலம் முடிவடைந்தது.

உலகில் ஜனநாயகம், சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகளுக்காக முன்னின்று பாடுபடும் தலைவன் தான் எனத் தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்கா ஒரு சுறுசுறுப்பான கடற்பட்டின மான கிரோசிமாவுக்கு மேலாக குண்டுவீசி அழித்து அப்பட்டினத்ை த இறந்தோரின் பட்டினமாக ஆக்கி விட்டது.



தேர்ந்த

இந்தக் குண்டு வீசப்பட்டவுடனேயே ஒரு இலட்சம் மக்கள் இறந்தனர். இதில் முதியோரும், மருத்துவ மனையிலிருந்த நோயாளிகளும் அடங்குவர். அத்தோடு ஆயிரக்கணக்கான மக்கள் காயமுற்று இன்றுவரை நாளுக்கு நாள் இறந்துகொண்டே இருப்பதால் இறப்போரின் தொகை அதிகரித்து வருகின்றது.

நாற்பது மைல்களுக்கப்பாலிருந்த பன்னிரண்டுவயதானஇட்சுகோ என்ற மாணவிஇந்த அழிவு நாளில் தான் கண்டதைப் பற்றிக் கூறும்போது இந்தப்பட்டினம் முழுவதும் தீயினால் எரிக்கப்பட்டு ஒரு சுடுகாடுபோல் தோன்றியது எனக் கூறுகிறாள். கத்தோலிக்க மதத்தினளான இட்சுகோ, ஞாயிறுதோறும் நடக்கும் மத போதனைகளின்போது அவருக்கு அடிக்கடி போதிக்கப்படும் அழிவு நாள் வந்துவிட்டது எனத் தான் நினைத்ததாகக் கூறினாள்.

கிரோசிமாவில் யப்பானியப் பெண்ணொருத்தி தன்னுடைய வீடிருந்த இடத்தில் குவித்திருந்த கற்குவியலுக்குள் தன்னுடைய கணவனைத் தேடிக்கொண்டிருந்தாள். தலைமுறை புதை [குழிக்குள்] அடக்கஞ் செய்ய ஒரு பிடி சாம்பலும் ஒரு எலும்புத் துண்டும் மாத்திரம் அவளுக்குக் கிடைத்தது. ஐயனே! இது என்ன பேரழிவு! தொண்ணூறுகளில் ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்க நினைக்கும் ஒரு நாடு நாற்பதுகளில் ஆசியாவிலிருக்கும் ஒரு நாட்டுக்கு எதிராக உலக வரலாற்றில் மன்னிக்க முடியாத பெருங்கேடுடைய செயலைச் செய்துள்ளது.

ஒரு அணுகுண்டு வெடிப்புச் சில விநாடிகளில் ஏற்படுத்தும் வெப்பம் கதிர்வீச்சு கதிரவன் மையத்திலுள்ள வெப்பத்திலும் பார்க்கப் பத்து மடங்கு அதிகமாக இருக்கும்.

இந்தப் பேரழிவுகளையும், மனிதனின் சதைகள் எரிவதையும் பார்த்துப் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் மனநோயால் பீடிக்கப்பட்டார்கள். இந்தகுண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு சில விநாடிகள் நாலாபக்கமும் இருந்து வந்த ஊழிக் காற்றினால் ஏற்பட்ட தாக்கமானது மனித மனதாலே எண்ணிப்பார்க்க முடியாததாகும்.

பவன அமுக்க மாற்றத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பாரிய வெப்ப நிலைக்குள் அகப்பட்ட மக்கள் எரிந்து சாம்பராயினர். இதனால் விடுவிக்கப்பட்ட ஒளிக்கதிர்கள் கிரோசிமா

மக்களின் பிரதிபிம்பங்களை அங்கேயுள்ள கடினமான நிலப் பரப்பிலும் சுவர்களிலும் தோற்றுவித்ததோடு அவர்கள் இறந்து கொண்டிருப்பதையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

குண்டு வெடித்த இடத்துக்கு நேரே உள்ள நிலப்பரப்பில் (Ground Zero) வசித்த துரதிர்ஷ்டமான மக்களுக்கு என்ன நடந்தது என்பது புரியாது. அவர்கள் நினைக்கவோ, உணரவோ முடியுமுன்னர் அதிகளவு கதிர் வீச்சினால் தாக்கப்பட்டு உடனடியாகக் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் விரைவாக இயங்கும் கதிர் வீச்சுக்களோடு மெதுவாக இயங்கும் கதிர் வீச்சுகள் இணைந்தவுடன் மக்கள் உடல்கள் எரிந்து சாம்பராயினர்.

முதலாவது குண்டு வீச்சினால் ஏற்பட்ட அழிவுகளை அறிவியல் ரீதியாக விளக்க முடியாது. ஏனெனில் மக்கள் பட்ட அவலங்களையும், துன்பங்களையும் இவர்களால் அறிந்துகொள்ள இயலாது. இது ஒரு துரதிர்ஷ்டவசமான கணிப்பீடாக இருந்தாலும் இதில் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்களிலும் பார்க்க இறந்தவர்கள் நன்மையடைந்துள்ளார்கள். கதிர் வீச்சிலிருந்து உயிர் தப்பியவர்களும் அதன் தாக்கத்தில் இருந்து தப்ப முடியாது.

கதிர்வீச்சினால் சிலருக்குப் பாரிய உருமாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்தக் குண்டு வெடிப்பினால் தோன்றிய ஒளிக்கீற்று அநேகமானவர்களைக் குருடர்களாக ஆக்கியுள்ளது. இந்த அழிவுகளினால் கிரோசிமாவிலுள்ள மக்களில் அதிகளவு பாதிக்கப்படாத மக்களும் திருமணஞ் செய்து கொள்ளத் தயங்குகின்றார்கள். ஏனெனில். தங்கள் குழந்தைகளும் இதன் தாக்கத்தால் பாதிப்படைவார்கள் என்ற எண்ணமாகும்.

## கண்டுபிடிப்பு

இந்த இயற்கை அழிவை ஏற்படுத்தும் பொருளைக் கண்டுபிடித்த அறிவியலாளர்களும், பொறியியலாளர்களும். நினைத்துப் பார்க்க முடியாத இதன் அழிவுத் திறனைத் தங்கள் மனத்திலிருந்து அகற்றுவதற்காக இதற்குக் ''குண்டு'' எனப் பெயரிடாமல் ஒரு 'கருவி' என அழைத்தனர். இந்தக் கருவியை 1945ம் ஆண்டு யூலை மாதம் 16ம் திகதி நியூ மெக்சிக்கோ (New Mexico) விலுள்ள பாலைவனத்தில் பரீட்சித்துப் பார்த்தபோது இந்த பரீட்சார்த்த குண்டே பல ஞாயிறுகளில் இருந்து வருவது


தேர்ந்த

PUBLIC LIBRARY.
JAFFNA.

போல பெருமளவு ஒளியைத் தந்து பூமியை அதிர்ச்சியடைய வைத்தது. காளான் போன்ற தோற்றம் கொண்ட முகில் கூட்டம் ஏழு மைல் உயரத்திற்கு எழுந்தது.

இன்றுடன் 47 ஆண்டுகள் முடிந்துவிட்டது. அது நீண்ட காலமாகத் தோன்றினாலும், கிரோசிமாவின் அழிவுகள் நினைவிலிருந்து மறையக்கூடியளவுக்கு நீண்ட காலமாகத் தோன்றவில்லை. உலக அரசியலில் தங்களுக்கு மாற்றீடாக ஒருவரும் இல்லை என்பதைத் தோற்றுவிப்பதற்காக ஐக்கிய அமெரிக்கா இந்த அணுகுண்டைப் பாவித்தது. போரில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் போரை முடித்துக்கொண்டு சமாதானத்தில் ஈடுபடுவதற்காக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அமெரிக்கா நிர்வாகத்தினர் கூறுகின்றனர். யப்பானியரைக் கட்டாயப்படுத்தி சரணாகதியடையச் செய்வதே தங்கள் நோக்கமென்றும் கூறுகின்றனர்.

கிரோசிமா என்ற ஒரு பட்டினத்தின் மேல் அல்லாது இரண்டு பட்டினங்களின் மேல் குண்டு வீசி அழித்தது போல் எந்த நாட்டில் செய்தாலும் அந்த நாடு மண்டியிட்டிருக்கும். ஆனபடியால் இவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. நாடுகளையும், அரசாங்கங்களையும் அடிபணிய வைக்க மக்களைக் குண்டு வீசி அழிப்பதுதான் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கையா? பழைய கால வரலாற்றையும், தற்போது நடைபெற்று வருபவைகளையும் உற்று நோக்கின் இதற்கு ஆம் என்றே பதிலளிக்க வேண்டியுள்ளது. பாக்தாத் நகரத்தை குண்டு வீசி அழித்தமை இதன் தற்கால நடவடிக்கைகளுக்கு ஒரு உதாரணமாகும்.

இதுதான் இவர்களின் கொள்கையெனில் இக்கொள்கையை ஆசிய நாடுகளில் ஏன் பரீட்சித்துப் பார்க்கின்றார்கள். அதாவது கிரோசிமா, நாசாகி கம்போடியா, கொரிய, வியட்னாம், லாவோஸ் ஆகிய நாடுகளில் பரீட்சித்துப் பார்க்கின்றார்கள். இந்தக் கொள்கையைச் சேர்பியாவில் ஏன் பரீட்சித்துப் பார்க்கவில்லை? இது ஒரு ஐரோப்பிய நாடு என்பதாலா? இக்கேள்விகளுக்கு அமெரிக்க நிர்வாகம்தான்

பதிலளிக்க வேண்டும்.

அமெரிக்க மண்ணில் அணு ஆயுத உற்பத்திக்கு எதிராக பல இயக்கங்கள் போருக்கு பின் தோன்றின என்பதை குறிப்பிட வேண்டும். இந்த இயக்கங்கள் தோன்றியமைக்கு அடிப்படைக் காரணங்கள் கிரோசிமாவின் அழிவுகளேயாகும். ''எல்லா அணு ஆயுதங்களையும் தடை செய். அல்லது கிரோசிமாவில் ஏற்பட்ட அழிவு மீண்டும் ஏற்படும்'' என இந்த இயக்கங்கள் அமெரிக்க நிர்வாகத்துக்கு அறைகூவல் விடுக்கின்றன.

''இதில் ஒருவரும் வெற்றியடையப் போவதில்லை. எல்லோரும் தோல்வியடைவார்கள். உலகில் எஞ்சி நிற்பது கிரோசிமா போன்ற அழிவுகள்தான்.''

இந்த அறைகூவல்கள் அமெரிக்காவை மாத்திரம் நோக்கி விடப்படவில்லை. அது ரூசியாவாகவிருந்தாலென்ன, பிரித்தானியாவாக இருந்தாலென்ன, சீனாவாகவிருந்தாலென்ன அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் எல்லா நாடுகளுக்கும் இந்த அறைகூவல் விடப்படுகின்றது.

★ ★ ★

*வளரும் நாடுகளில் இருந்து தொழில்நுட்ப அறிவுடையவர்கள், வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதை திறமை வெளியேற்றம் எனலாம். இதன் காரணமாக வளரும் நாடுகள் மனித மூலதனத்தை இழக்கின்றன. அவர்கள் சென்றடையும் நாடுகளோ கல்விக்குப் பணம் செலவழிக்காமலேயே கற்றறிந்தவர் தொகையை பெருக்கிக் கொள்ள முடிகிறது.*

—கூரியர் 79.



தேர்ந்த

# செயலுரிமையை கைப்பற்ற அமைதியாகக் காத்திருக்கும் பொல்பொட்

(பினான்சியல் ரைம்ஸ்-18-07-92)

இரண்டாயிரம் கம்போடிய கரந்தடிப் படையினரின் ஆயுதங்களைக் களையும் நிகழ்ச்சியின்போது பறக்கவிடப்பட்ட சமாதானப் புறாக்கள் தூய வெள்ளை நிறமானவையல்லாமல் கறுப்பும், வெள்ளையும் கலந்திருந்ததோடு அவை, தங்கள் கூண்டிலிருந்து சில யார் தூரம் மட்டுமே பறந்து செல்லக் கூடியவையாக இருந்தமை ஒரு அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியல்ல.

கம்போடியாவில் சண்டையிலீடுபட்டு வந்த நான்கு பிரிவினரும், சகல வல்லரசுகளும் சேர்ந்து சென்ற ஆண்டு தயாரித்த ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத் திட்டம் இடதுசாரிகளான கெமர் ரூச் (Kmher Rouge) பிரிவினர் ஒத்துழையாமையால் இதற்கு முன்னர் ஏற்பட்ட சமாதானத் திட்டங்களைப் போல் வலுவிழக்கும் நிலைக்கு வந்துள்ளது. இதுபோல வடக்குக் கம்போடியாவில் நடைபெற்ற கெமர் மக்கள் தேசிய விடுதலை இராணுவத்தின் (KPNLAF) ஆயுதங்களைக் களைவதற்கான நிகழ்ச்சியும் மன நிறைவைக் கொடுக்கவில்லை.

1.7 பில்லியன் டாலர்கள் செலவை ஏற்படுத்துமென மதிப்பீடு செய்யப்பட்ட திட்டத்தின்படி நான்கு பிரிவினரைச் சேர்ந்த 450,000 இராணுவத்தினரும் தீவிரவாதிகளும் தங்கள் படையினரை யூலைத் திங்கள் 11ம் திகதிக்கு முன்னர் ஒன்று திரட்டி ஒவ்வொரு பகுதியாக வைத்திருக்க வேண்டுமென ஒத்

துக் கொண்டிருந்த போதிலும் கெமர் ரூச் பிரிவினர் தங்கள் படைகளை ஒன்று திரட்டும் நடவடிக்கையில் இறங்காததுடன்' கம்போடியாவிலிருக்கும் ஐ. நா. சபையின் இடைக்கால செயலுரிமை சபையினரின் இராணுவத்தைத் (UNTAC) தங்கள் நிலப்பரப்புக்குள் செல்ல ஒப்புதல் வழங்காதிருக்கின்றனர்.

சென்ற அக்டோபர் திங்களில் பாரிசில் (PARIS) கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னரும் கெமர் ரூச் பிரிவினர் அடிக்கடி போர் நிறுத்தத்தை மீறியுள்ளனர். 1978ம் ஆண்டில் கெமர் ரூச் அரசாங்கத்தைத் தோற்கடித்த வியட்னாமியரால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆறு ஊர்களை பல தாக்குதல்களை நடத்தி இவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஐ. நா. சபைக்குச் சொந்தமான வானூர்திகளைச் சுட்டு வீழ்த்தும் கரந்தடிப் படையினருக்கு கெமர் ரூச் தலைமைப்பீடம் பெருந்தொகையான சன்மானங்கள் வழங்கி வருவதை ஐ.நா.சபையின் மேலாளர்கள் அறிந்துள்ளனர். இதுவரையும் ஏழு வானூர்திகள் சுடப்பட்டுள்ளன.

கெமர் மக்கள் விடுதலை இராணுவத்தினரால் கையளிக்கப்பட்ட ஆயுதங்கள் துருப்பிடித்தவையாகவும், பாவனைக்குதவாதவையாகவும் இருப்பதோடு, இந்த இராணுவத்தைச் சேர்ந்த தளபதிகள் தங்கள் தற்காப்புக்கு நல்ல ஆயுதங்களை வைத்திருக்க வேண்டும் என்று கூறுவதையிட்டு ஐ.நா.சபையின் மேலாளர்கள் வியப்படையவில்லை.

இதுவரை காலமும் நடைபெற்ற ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளிலும் பகுதி பகுதியாகப் படையினரை குறிப்பிட்ட இடங்களில் வைத்திருக்கும் நடவடிக்கைகளிலும் பல தில்லுமுல்லுகள் நடைபெற்றிருப்பதாக ஐ. நா. சபையினர் சந்தேகிக்கின்றனர்.

எல்லோரும் சிறந்த வீரர்களை மறைத்து வைத்துக்கொண்டு பழைய ஆயுதங்களுடன் பயிற்சி எடுக்காத இளைஞர்களை இக்குறிப்பிட்ட பகுதிக்கு அனுப்பி இருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள்.

ஐ. நா. சபையின் இடைக்கால செயலுரிமை சபையின் தலைவரான திரு. யசூசி ஆகாசி (Yasushi Akashi) அவர்களும், மற்றும் ஐ. நா. சபையின் மேலாளர்களும் காலம் விரயமாகிக் கொண்டிருக்கின்றது எனக் கெமர் ரூச் பிரிவினரை அடிக்கடி எச்சரிக்கை செய்து வந்தபோதும் அதனால் எவ்வித பலனொன் றும் ஏற்படவில்லை. சமாதானத் திட்டத்தை நடைமுறைப்ப டுத்துவதற்கு கெமர் ரூச் பிரிவினரின் ஒத்துழைப்பைப் பெற முடியாமல் திணறுகின்ற இடைக்கால செயலுரிமைச் சபையின் நிலையினால் இந்தச் சமாதானத் திட்டத்தை நடைமுறைப்ப டுத்த வகுக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய அடுத்த ஆண் டின் முதல் ஆறு திங்களுள் நடத்தப்பட வேண்டிய தேர்தல் களை ஒத்திப்போட வேண்டிய நிலை ஏற்படுவதோடு ஐ. நா. சபையின் வரலாற்றிலேயே பாரிய செலவை ஏற்படுத்தும் பேர வாக்கொண்ட சமாதான நடவடிக்கையிலும் நம்பிக்கையின்மைத் தன்மையைத் தோற்றுவிக்கும்.

சமாதானத் திட்ட விதிமுறைகளுக்கமைய நடக்கத் தவ றியமைக்காக கெமர் ரூச் பிரிவினரைக் கண்டிக்கும் ஒரு தீர் மானத்தைக் கொண்டு வந்து அதன் மீது அழுத்தத்தைப் பிர யோகிப்பதே ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அடுத்த கட்ட நட வடிக்கையாக இருக்கலாம். ஆனால் கெமர் ரூச் பிரிவினரின் முக் கிய சார்பாளராக இருக்கும் சீனா, ஐ. நா. காப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக இருப்பதால் இந்தக் கண்டனத் தீர் மானத்தின் கடினத்தைக் குறைக்க அது தனது செல்வாக்கைப் பிரயோகிக்கலாம்.

கரந்தடிப் படையினருக்குப் பொருளாதார நெருக்கடிக ளைக் கொடுக்கும் வகையில் அயல்நாடான தாய்லாந்து அர சாங்கத்துடன் திரு. அகாசி பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருப்பது முக்கிய விடயமாகும். இந்த வார இறுதியில் அவர் பாங்கொக் சென்றடைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. தாய்லாந்து நாட்டு எல்லையூடாக கெமர் ரூச் பிரிவினர் ஏற்றுமதி செய் யும் உலர்வலய மரங்களும், இரத்தினக் கற்களும் அவர்கள் இறக்குமதி செய்யும் பொருட்களும் தாய்லாந்து இராணுவத் தின் கட்டுப்பாட்டிலேயே நடைபெறுகின்றதன்றி மக்கள் அர சாங்கத்தின் ஊடாக அல்ல. இதனால் இவரது பேச்சுவார்த்தை கள் பயனளிக்கப் போவதில்லை.

தேவையைக் கருதாமல் உள்ளெண்ணத்தின் நிமித்தம் கம்போடியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால செயலுரிமைச் சபை தாமதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைப் பற்றி விமர்சிப்பவர்கள், அது கெமர் ரூச் பிரிவினரின் திட்டத்துள் விழுவதற்கு வழிவகுப்பதாகக் கூறுகின்றனர்.

கெமர் ரூச் செயலுரிமையைத் தங்கள் பிடியில் வைத்திருந்தபோது 1975ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டு வரை நடைபெற்ற பேரச்சம் தரும் ஆட்சியின்கீழ் 10 லட்சம் கம்போடிய மக்கள் இறந்துள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பதற்காக இரண்டு நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் கெமர் ரூச் பிரிவினர் தற்போது பிரபலமடைந்துள்ளனர்.

முதலாவதாகக் கம்போடியாவில் வியட்னாமியப் படைகள் எதுவும் இருக்கக் கூடாதென்று தனது கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை பரிசீலனை செய்ய வேண்டுமென்பதும், இரண்டாவதாக வியட்னாமியர்களால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால செயலுரிமைச் சபையுடன் இணைந்து சமாதானத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள நான்கு பிரிவினரைக்கொண்ட உயர்தேசிய சபையிடம் (Supreme National Council) உண்மையான செயலுரிமையைக் கையளிக்க வேண்டுமென்பதும் அந்த நிபந்தனைகளாகும். அங்கு வியட்னாமியப் படைகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாதபோதிலும், கம்போடியாவின் மரபுவழி எதிரியான வியட்னாமாகும். போர் அழிவுகளினால் அதிகரித்திருக்கும் மறு சீரமைப்பு வேலைகளில் வேலை செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயிரக் கணக்கான வியட்னாமிய நிர்மாணத் தொழிலாளர்களும், மற்றும், சிற்பிகளும், கம்போடியாவுக்கு வருவதைக் கம்போடியர்கள் எதிர்க்கின்றார்கள்.

உயர் தேசிய சபையின் தகுதியைப் பற்றி இராசதந்திரிகள் கூறும் பொழுது கம்போடியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால செயலுரிமைச் சபையும், உயர்தேசிய சபையும் ஒரு பக்கச் சார்பற்ற பொதுவான நிர்வாகத்தை அமைப்பதில் தாமதம் காட்டி வருகின்றன எனக் கூறுகின்ற



தேர்ந்த

னர். உதாரணமாக; கம்போடியாவுக்கு வருகை தரும் வெளி நாட்டுப் பிரமுகர்கள் உயர் தேசிய சபைக்குப் பதிலாக பழைய அரசாங்கத்தினாலேயே இப்பொழுதும் வரவேற்கப்படு கின்றனர்.

கெமர் ரூச் பிரிவினரைத் தங்கள் வழிக்குக் கொண்டு வர ஐக்கிய நாடுகள் சபை எவ்வளவு காலம் தாழ்த்துகின்றதோ அக்காலத்தில் கெமர் ரூச் பிரிவினர் தங்கள் கட்டுப் பாட்டிலுள்ள நிலப்பரப்பில் இருக்கும் இரத்தினக்கல் சுரங்கங்களில் இருந்தும், காடுகளிலிருந்தும் போரைக் கொண்டு நடத்துவதற்கான செல்வத்தைத் தேடுவதோடு கம்போடிய அரசியலில் உரிமை கோரக்கூடிய பலத்தைப் பெறுவதற்கும் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

முதல் சகோதரர் என அழைக்கப்படும் கெமர் ரூச் பிரிவினரின் தலைவரான பொல்பொட் அவர்கள் மறைவாக அமைதியாக செயலுரிமையைக் கைப்பற்றுவதற்குக் காத்திருக்கின்றார். ''அவர்களிடம் பணமுண்டு, ஆயுதங்களுண்டு, ஆட்பலமுண்டு, அத்துடன் சீனாவினதும், தாய்லாந்தினதும் ஆதரவுமுண்டு.'' என அரச பரம்பரைப் பிரிவைச் சேர்ந்த வான்கின்பெக் (Funcenpec)கிலுள்ள திரு. எக்செறோவாத் (Ek Sereywath) கூறுகின்றார். ''பதவிக்கு திரும்பி வரும் காலத்தை எதிர்பார்த்து கெமர் ரூச் பிரிவினர் காத்திருக்கின்றனர்'' என அவர் மேலும் கூறுகின்றார்

— ✶ —

*எல்லோரும் அனுபவித்து மகிழக்கூடிய கலையே சிறந்தது; குறிப்பிடத்தக்க ஒரு சிறு கூட்டத்துக்கு உரிய கலை ஒரு விளையாட்டுப் பொருளேயாகும்,*

—சாமர் செட்மாம்

## ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் பாசிலோனா நகரில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் வரலாற்றில் பெருமைவாய்ந்ததாகும்

(டெயிலி நியூசு 22-7-92)

சாதனை வீரர்கள் உலக சாதனைப் பதிவுகளில் தமது திறமையை நிலைநாட்ட ஆயத்தம் ஆகின்றனர். அமைப்பாளர்கள் 21-ம் நூற்றாண்டின் ஒளி மயமான செயற்பாட்டினுள் பிரவேசிக்கின்றனர்.

பாசிலோனா ஒலிம்பிக் போட்டிகளில் பயன்படுத்தப் போகும் தொழில் நுட்பம், இதுவரையில் எங்குமே பயன்படுத்தப்படாத உயர்ந்த தொழில் நுட்பமாகும்.

''பாசிலோனா நகரில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் வரலாற்றிலேயே பெருமை வாய்ந்ததாகும்.''- இவ்வாறு அமைப்புக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜோசேப் மரியா வைலரீ கூறியிருக்கின்றார்.

மேலும், அவர் கூறுகையில், ''அறிவியலானது பாரியளவு முன்னேற்றம் கண்டுள்ளது. எவ்வாறு இதைப் பாவிக்கலாம் என்பதை நாம் அறிந்துள்ளோம்'' என்றார்.



தேர்ந்த

கடலான் (CATALAN) தலைநகர் தொடர்பு சாதனப் பொறிகள் 92 பில்லியன் பெஸ்ராஸ் (900 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவில் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாகவே பல்லாயிரக்கணக்கான தொடர்பு சாதனங்கள் நகரில் இயங்கவுள்ளன. ஆவணி 9-ம் திகதியின் பின் பாசிலோனா ஐரோப்பிய நாடுகளிலேயே ஒரு முன்னணி நாடாகத் திகழவுள்ளது.

கணணி நிறுவனங்கள் (Computer Firms) எல்லாம் தமது உபகரணங்களை விளையாட்டு மையங்களை நோக்கி நகர்த்தியிருக்கின்றார்கள்.

செய்தியாளர்கள் அங்கும், இங்கும் நடக்கும் விளையாட்டுத் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு வசதியாக 3,500 க்கு மேற்பட்ட கணணிகளை (Computers) அல்காரல் வழங்கியிருக்கின்றார்கள். அத்துடன் 3,000 மேற்பட்ட கணணிகள் 28 நிகழ்ச்சிகளின் வினாடிக்கு வினாடி செயற்பாடுகளைப் பதிவு செய்ய தயாராக இருக்கின்றன.

வழமையான நிகழ்ச்சி முடிவுகளை பரிமாற்றம் செய்யும் வேலையை இராங் சிரோக்ஸ்-(Rank Xerox) ஆக்கிரமித்துக் கொள்கின்றது. பாசிலோனாவில்600 மேற்பட்ட வர்ண ''மொனிற்றேர்ஸ்'' பிரதான செய்தித்தாள்களுக்கு செய்திகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றன.

கொல்செறொலா மலையின் மீது நிறுவப்பட்டுள்ள போஸ்ரர் கோபுரமும், மொன்யியுக்கில் அமைக்கப்பட்டுள்ள கொலட்டிராவாவும் தொழில் நுட்ப வளர்ச்சியின் சிகரங்களை கோடிட்டுக்காட்டிக்கொண்டுஇருக்கின்றன.மேற்படி கோபுரங்கள் சிற்றலை வரிசையின் சமிக்கைகளை கிரகித்து ''எரியுல் காட்'', இன்ரல் காட்'' ஆகிய இரண்டு செயற்கைக் கோள்களின் (Satellites) ஊடாக உலக நாடுகளுக்கு வழங்கிக் கொண்டு இருக்கின்றன.

மறுபுறத்தில் பாசிலோனா நகரின் போக்குவரத்து சேவைகளும் கணணிகளினூடாக கட்டுப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்தில் நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் சாரதிகளுக்கு புதுவகையான சமிக்கைகள் மூலம் நெருக்கடியைத் தவிர்க்கக் கூடிய வழிகள் காட்டப்படுகின்றன.

காற்றாலான் மின்சாரம் வழங்கும் நிறுவனமான பிஸ்கா (FESCA) நிறுவனம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் பகுதிகளுக்கு 76,538 கிலோ வாட்ஸ் ஆற்றலுள்ள மின்சாரத்தை வழங்குகின்றது. இது ஏறக்குறைய 200,000 மக்களை உடைய ஒரு நகருக்கு மின் வழங்குவதற்கு சமமானதாக இருக்கும்.

இத்தகைய போட்டிக்கு ஒருவரும் பசியுடன் இருந்து சேவையாற்ற முடியாது என்று ''கொமெம்கோஸ்'' (COEMCOS) நிறுவனத்தினரின் தரவு உறுதி செய்கின்றது. இந்த ஒலிம்பிக் உணவு விடுதி ஒரு நாளுக்கு 30, 000-45,000 வரையிலான உணவினை விளையாட்டு வீரர்களுக்கும், அலுவலகர்களுக்கும் வழங்கி உலக சாதனையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

*யார் வேண்டுமானாலும் கோபம் கொள்ளலாம். ஆனால், சரியான மனிதனிடம், சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான முறையில் கோபம் கொள்வது எளிதல்ல; இது எவருடைய ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது.*

—அரிஸ்டாட்டில்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# தமிழ் ஈழத்தின் பொருளாதாரம்

தாரகி
ஐலன்ட், -2-8-92

தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கு மூலாதாரமாக விளங்கவேண்டிய பொருளாதாரம், அந்த நாட்டின் தேசிய பொருளாதாரமாகச் செயற்படக் கூடியதாகவிருக்கவேண்டும். பிரிவினை கோரும் ஒரு பிரதேசத்தின் மக்கள் தாங்கள் பிரிந்து செல்லும் நாட்டினது தேசிய பொருளாதாரத்தில் பெரிதும் தங்கியிராது தங்களது உற்பத்தித்திறனைக் கொண்ட ஒரு தனித் தன்மையுடன் கூடிய பொருண்மிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

இரண்டாம் ஈழப்போரின் ஆரம்பத்திலிருந்து, நாட்டின் மற்றைய பாகங்களிலிருந்து தமிழீழத்தின் தேசிய பொருளாதாரத்தின் தொடர்பை இல்லாதாக்கி வடக்கு கிழக்கு பொருளாதாரத்தை விரைவாகக் கட்டியெழுப்பும் ஒரு பொருண்மிய கட்டமைப்பை உருவாக்கவேண்டுமென, ஈழம் என்ற எண்ணக் கரு தோன்றிய காலத்திலிருந்து விடுதலைப் புலிகள் முயன்று வந்துள்ளனர். இதன் காரணமாகவே வடக்கிலுள்ள பொது மக்களுக்குப் பொருளாதாரத் தடை சொல்லொணாத் துன்பத்தை தந்த போதிலும், தாங்கள் பொருளாதாரத் தடையை வரவேற்பதாக விடுதலைப் புலிகள் கூறிவந்துள்ளனர்.

நாட்டின் மற்றைய சமூகங்களுக்கு வழங்கப்படும் உதவிகள் மறுக்கப்பட்டு தமிழர் சமுதாயம் ஒரு வேற்று சமூகமாக அரசாங்கத்தால் கணிக்கப்பட்ட 1984ம் ஆண்டுப் பகுதியிலேயே

ஈழத்தின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டு மென்ற எண்ணம் தோன்றியது.

இதுவிடயமாக பல திட்டங்கள் உருவாக்கப்பட்டும் விரிவாக ஆராயப்பட்டும், சில வேளைகளில் ஒழுங்கற்ற முறையில் செயல்படுத்தப்பட்டும் பின்னர் மறக்கப்பட்டுமிருந்த போதிலும் பொதுவாக 1984ம் ஆண்டிலிருந்தும், குறிப்பாக 1990ம் ஆண்டிலிருந்தும் எப்படி இதைச் செயல்முறைப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் முயன்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதே எனது நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளின் ஆய்வு நிறுவனமான றூட்டின் (ROOT) பொறுப்பாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல் சிறப்புப் பட்டதாரியுமான திரு. வி. ரவி அவர்கள், யாழ்ப்பாணத்தில் 92. 04.13ம் திகதி வெளியிடப்பட்ட விழிப்பு என்ற வாரப்பத்திரிகைக்கு பின்வருமாறு கூறியுள்ளார்:

''எங்கள் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் ஒரு பாரிய போரை 1990ம் ஆண்டு யூன் திங்கள் ஆரம்பித்தது. அது ஒரு கடினமான பொருளாதாரத் தடையை விதித்து எங்களுக்குப் பெரும் நெருக்குதலைக் கொடுத்தது. அந்த நேரத்தில் நாங்கள் மிகுந்த இன்னல்களை எதிர்நோக்கினோம் என்பது உண்மையே. இருப்பினும் இவற்றிலிருந்து மீண்டு புது வாழ்வு பெற்று வாழ இந்த நெருக்கடிகள் எங்கள் மக்களுக்கு உதவின.''

புதிய கண்டுபிடிப்புக்களையும் உற்பத்தி வளர்ச்சியையும் மேற்கொள்ள இந்தத் தேவையின் அவசியம் வித்திட்டமை முன்னெப்போதுமில்லாதவாறு எம் தேவையை முழுமை செய்யக் கூடிய பொருளாதார முன்னேற்றத்தை அடையக்கூடியதாகவிருந்தது.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பாக விளங்கும் தமிழீழ ஆய்வு நிறுவனம் வடக்கில் ஒரு சுதந்திரமான பொருளாதார உள்ளகக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. 1980ம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர் குழுவே தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் முன்னோடியாக விளங்கியது. அறிவியல் பட்டதாரி மாணவனாக இருந்த சுகந்தன் என்று அழைக்



தேர்ந்த

கப்படும் ரவிசேகரத்தின் தலைமையின் கீழ் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 ஆம் ஆண்டுவரை அது மிகவும் சுறுசுறுப்பாக இயங்கியது.

இலங்கையின் தென்பகுதியில் சந்தைப்படுத்தும் பணப் பயிர்களைப் பயிரிட்டு அதன்மூலம் பெருமளவு இலாபத்தைப் பெற்றுவந்த யாழ்ப்பாண விவசாயிகளிடையே போர்க்காலப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளச் செய்ய முடியுமென இந்தக் குழு நம்பியது. இதற்காக ஒரு சிறு புத்தகம் பிரசுரிக்கப்பட்டு குடாநாட்டிலுள்ள சில பகுதிகளில் வீட்டுக்கு வீடு ரவிசேகரம் அவர்களாலும் அவரது நண்பர்களாலும் வழங்கப்பட்டது. ஆனால் இதனால் ஒருவித பயனும் ஏற்படவில்லை. மாறாக கொழும்புக்கு அனுப்பப்படும் காசுப் பயிர்களான திராட்சை, புகையிலை, வெங்காயம், செத்தல்மிளகாய் போன்றவை பயிரிடப்படும் நிலப்பரப்பு அதிகரித்ததுடன் தெற்குச் சந்தைகளிலே தங்கியிருக்கும் நிலையும் ஏற்பட்டது.

உற்பத்திக்குத் தேவையான பொருட்களை கொழும்பிலிருந்து கொண்டுவருவதால், விவசாயம் மற்றும் குடிசைக்கைத் தொழில் ஆகியவற்றின் உற்பத்திச் செலவினம் அதிகரித்துள்ளதை அந்தக்காலத்தில் உரும்பிராயில் தீவிரவாதக் குழுவொன்று மேற்கொண்ட மதிப்பீடொன்று எடுத்துக்காட்டியது.

ரவிசேகரமினதும் அவருடைய நண்பர்களினதும் முயற்சிகள் அவர்கள் எதிர்பார்த்தளவு பயனை அளிக்கவில்லை. 1985ம் ஆண்டு இவர் இறந்ததைத் தொடர்ந்து, இவருடைய குழுவிலிருந்த பலர் விடுதலைப்புலிகளின் தீவிரமான போக்கில் அதிருப்தியுற்று நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர்.

விடுதலைப்புலிகளில், ஈழத்துக்கான தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டுமென்று தீவிரமாகச் சிந்தித்த முதல் மனிதர் இவரே என நான் எண்ணுகிறேன். தற்பொழுது தமிழீழ ஆய்வு நிறுவன அமைப்புக்குப் பொறுப்பாகவுள்ள திரு. வி.ரவி அவர்களும், திரு.ரவிசேகரம் அவர்களுடன் அக்காலத்தில் இணைந்து செயலாற்றி வந்தவராவர்.

1985—86ம் ஆண்டுப் பகுதியில் திரு.கிட்டு அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பெற்ற எழுச்சியைத் தொடர்ந்து,

குடாநாட்டில் அதிகளவு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கக் கூடிய வழிமுறைகள் பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. தென்பகுதியில் சந்தைப்படுத்தும் காசுப் பயிர்கள் மூலம் அதிகளவு வருமானத்தைப்பெற்ற விவசாயிகளிடமிருந்து வரிகளைப் பெற்று விடுதலைப் புலிகளின் வருமானத்தை திரு.கிட்டு கூட்டினார். இதன் காரணமாக இவரும் இவரைப் பின்பற்றியவர்களும் மேற்கொண்ட வழிமுறைகளை 'கொக்கோ கோலா கரந்தடிப்படையினரின் பண்பாடு' என சிலர் வர்ணித்தனர்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் வடக்கையும், கிழக்கையும் 1988க்கு பின் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் வரை வடக்கின் பொருளாதார நிலை இப்படியே இருந்தது. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சில பகுதிகளின் பொருளாதாரத்தை இந்தியாவின் பொருளாதார விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாற்றியமைக்க வேண்டுமென்ற இந்தியாவினதும், ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியினதும் முயற்சி, திரு.பெருமாளின் மாகாண அரசின் கீழ் ஓரளவு வெற்றிபெற்றது. இருப்பினும் இந்திய புலனாய்வுத்துறையான 'றோ' வினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியப்படை அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த முயற்சியும் இந்த எண்ணமும் கைவிடப்பட்டது.

இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானபொழுது தமிழ் நாட்டுக் கரையோரப் பகுதியுடன் தொடர்புகள் அதிகரிக்கப்பட்டு பாக்குத் தொடுவாய்க்கு அப்பாலுள்ள சந்தை நிலைமைகளைப் பொறுத்தே குடாநாட்டில் தீப்பெட்டியிலிருந்து டீசல் நெய் வரையிலான பொருட்களின் வழங்கல் மற்றும் தேவை ஆகியவை தீர்மானிக்கப்பட்டது. ஆனால் திரு. ராஜீவ் அவர்களின் கொலையுடன் இந்த நிலை ஒரு முடிவுக்குவந்தது. இந்தக்காலகட்டத்திலேயே ஈழத்திற்கு தனியான பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் எண்ணக்கரு ஏற்புடைய ஒன்று என்று உணரப்பட்டது. முன்னெப்போதுமில்லாதவாறு வடக்கில் வாழும் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டதைத் தங்களுக்கு நல்ல வாய்ப்பாக விடுதலைப் புலிகள் கருதினர். ஒருபுறம் அரசாங்கத்தால் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட பாவனைப் பொருட்களை மக்கள் பாவியாதவாறு கேட்டுக்கொண்டு அதேவேளை மறுபுறம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்தக்கூடிய கோட்பரப் புகையை இவர்கள் மேற்கொண்டனர்.

எங்களுடைய விவசாயிகளையும், விவசாய உற்பத்தியையும் சீர்குலைக்கும் நோக்கிலேயே எங்கள் பயிர் அறுவடை காலத்தில் பல பொருட்களை சிறிலங்கா அரசாங்கம் அனுப்புகின்றதென தமிழீழ ஆய்வு நிறுவனத் தலைவரான திரு. ரவி அவர்கள் 'விழிப்பு' என்ற பத்திரிகைக்குக் கூறியுள்ளார். ''இந்தப் போரை வென்றெடுப்பதற்கு நாம் எல்லோரும் எங்கள் மக்களின் உற்பத்திப் பொருட்களை மாத்திரம் பாவிப்பதற்குப் பழகிக் கொள்ளவேண்டும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராட்டம் நடாத்தப்பட்ட வேளையில், மேல்தரமான பிறநாட்டு ஆடைகளை எரித்துவிட்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கரடுமுரடான கதர் துணியை இந்திய மக்கள் அணிந்தார்கள்.''

''எங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மாத்திரமே நாங்கள் உபயோகிக்க வேண்டும். எங்கள் தேசம். சிங்கள இனத்தின் சந்தையாக வராதவாறு நாம் ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்ள வேண்டும்.'' என 92-4-20-ம் திகதி வெளியிடப்பட்ட 'விழிப்பு' என்ற பத்திரிகையில் கூறியுள்ளார்.

''எங்கள் மீது சிறிலங்கா அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையை எங்கள் விவசாயிகள் முறியடித்துள்ளார்கள். பொருளாதாரத்தடையை நீக்கும் போர்வையில் எங்களைச் சீர்குலைக்க அரசாங்கம் முயல்கிறது. இதன் காரணமாக எங்களுடைய உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் பல சிக்கல்களை நாம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.'' வீட்டுத்தோட்டப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பரிசு வழங்கும் வைபவத்தில் ஈரோஸ் இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போது விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரும் மேற்கண்டவாறு கூறியதாக 'விழிப்பு' பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் தாங்கள் அடைந்த முன்னேற்றத்தை தொடர்ந்தும் பேணுவதற்கு சிறிதளவிலான பொருளாதாரத்தடை அமுலில் இருப்பதை விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். சரியானதோ அல்லது பிழையானதோ ஈழத்திற்கு ஒரு தேசிய பொருளாதாரம் இருக்க வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாகும். இந்தப்பாதையில் இவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை மூன்று நிகழ்வுகள் மூலம் அறியலாம்.

(அ) யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான சீனித்தேவையை முழுமை செய்வதற்காக, பனம் வெல்லத்தில் இருந்து சீனி தயாரிப்பதை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, தெங்கு பனம் பொருள் வளத்தின் முன்னேற்ற நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்தை 29-3-91 அன்று திரு. மாத்தையா அவர்கள் ஆரம்பித்துவைத்தார். பனம் வெல்லம் தயாரிக்கப்படும் பதநீரின் விலை ஏழு ரூபாவாக உயர்த்தப்பட்டது. இந்த உயர்வால் பனம் வெல்லத்திலிருந்து தயாரிக்கப்படும் சீனியின் விலையின் உயர்வை சரியீடு செய்வதற்கு ரூபா 50/-மானியமாக ஒரு கிலோ பனம் வெல்லத்திற்குக் கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்படும் ''காப்பரண்' என்ற சஞ்சிகையில் 30,000 தொழிலாளர்கள் தேவைப்படும் பொழுது, 6000 பேரேயுள்ளதாகவும், இப்பற்றாக்குறையை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும், பனங்கழியிலிருந்து பாண் தயாரிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

(ஆ) உவர்நீர் உட்புகுவதைத் தடைசெய்வதற்காக 5 அணைக்கட்டுக்களையும், 12 மைல்கள் தூரம் கொண்ட இரண்டு நீர்ப்பாய்ச்சல் வடிகால்களையும், $17\frac{1}{2}$ மைல்கள் தூரம் கொண்ட 32 கால்வாய்களையும், 31 குளங்களையும், 1991-ம் ஆண்டு ஆகஸ்டுக்கும் அக்டோபருக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மறுசீரமைப்பு செய்வதில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டது, இந்த வேலைத்திட்டத்தில், 1300 குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டன. விடுதலைப் புலிகளால் 1992-ஆம் ஆண்டு சனவரி மாதம் பிரசுரிக்கப்பட்ட 'விடுதலைப்புலிகள்' என்ற அவர்களுடைய அதிகாரபூர்வமான ஏடு, இத்திட்டத்தினால் 8,500 குடும்பங்கள் பயனடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றது. இந்தக் கூற்றுக்களில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பது ஒருபுறமிருக்க, இந்தவேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அதிகரித்துவரும் காப்பு செலவினத்திற்கு அரசாங்கம் பயன்படுத்துவதால், அரசாங்கம்மேற்கொள்ள வேண்டிய பொருளாதார வளர்ச்சி வேலைக்கு தாங்களே பொறுப்பாகவிருப்பதாக விடுதலைப்புலிகள் வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு கூறுகின்றார்கள்.



தேர்ந்த

(இ) வன்னிப் பகுதியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவனப் பிரிவின் தலைவரான எம். ஜி. ஆர் என அழைக்கப்படும் ரகு தனது அறிக்கையில் பின்வருமாறு கூறுகின்றார்: 1990-ம் ஆண்டு பெரும்போகத்தின்போது வன்னியில் நாம் நல்ல பாடத்தைக்கற்றுள்ளோம். உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லாமையால் மற்றைய பயிர்கள் பாதிப்படைந்த அதே வேளையில், வயலை உழும் வேலையும் இரண்டரை திங்களால் தாமதமானது. இதன்காரணமாக அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டமை நெல் விளைச்சலை அதிகரிப்பதற்கு ஆவன செய்யவேண்டிய அவசியத்தை உருவாக்கியது. உழவு இயந்திரங்கள் இலாபத்தை அதிகரித்த அதே வேளை உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளதை எம்மால் காணக்கூடியதாயிருந்தது. எரிபொருள் மீது விதிக்கப்பட்ட தடை வன்னிப்பகுதியில் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் எங்கள் வளமான எருதுகளை உழவு இயந்திரங்களுக்குப் பதிலாக உபயோகிக்க ஒரு அரிய சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்கியது.

197.789 ஏக்கர்களை $1\frac{1}{2}$ திங்களுள் உழுதுமுடிப்பதற்குத் தேவையான எருதுகளுக்கு பயிற்சி கொடுப்பதற்காக 1991யூலை திங்களிலிருந்து ஆகஸ்ட் வரை ஒரு பாரிய திட்டம் வகுக்கப்பட்டது. முதலாம் கட்டமாக 4000 சோடி எருதுகள் பயிற்றப்பட்டு விற்கப்பட்டன. இந்தத் திட்டத்தினால் பெற்ற பயன்களாவன:- (1) உழவு இயந்திரங்களுக்கும் அவற்றின் உதிரிப் பாகங்களுக்கும் தேவைப்படும் பணம் ஈழத்திற்கு வெளியே செல்வதில்லை. (2) நிலமற்ற தொழிலாளர்கள் கூடுதலான வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். (3) எருதுகளின் விலையும் கூடியது. 1991-ம் ஆண்டு பெரும்போகத்தில் உழவு வேலைகள் பெரும்பாலும் எருதுகளின் உதவியுடனே மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளை ஓர் இராணுவ அமைப்பாகப் பார்ப்பவர்களால் இதன் செயல்பாட்டின் பின்னால் உள்ள பேரவாவையும், கனவையும் சரியாகப்புரிந்து கொள்ள முடியாது.

88608

# வேலைப்பழுவினால் இறக்கின்றார்களா?

–ஸ்ரீவன் பிறல்–
(ஐலன்ட் 29-7-92-)

மிற்சுய் நிறுவனம் என அழைக்கப்படும் யப்பானிய வர்த்தக நிறுவனத்தில் பணியாற்றும் 47 வயதினரான திரு.யுன் இசி (Yun Ishj) என்னும் மேலாளர் இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாட் காலைப்பொழுதில் நாகோயா (Nagoya) விலுள்ள விடுதியிலுள்ள தனது அறையில் உள்ள குளியலறைக்கு நீராடச் சென்றார். பொருட்களை வாங்குவதற்காக ருசியாவிலிருந்து வந்த மேலாளர்களுடன். சிறிது நேரத்தின் பின்னர் இவர் காலை உணவு அருந்துவதாக இருந்தது.

சரளமாக ருசிய மொழியைப் பேசக்கூடிய திரு.இசி அண்மையில் ருசியா சென்று திரும்பியதும், ஒரு ருசிய அணியினரை ரோக்கியோவிலிருந்து இரண்டு மணித்தியாலங்களில் கடுகதிப் புகையிரதமூலம் சென்றடையக்கூடிய நாகோயாவுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள இயந்திர உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்கூடத்தைக் காட்டும்படி அவரது உயர் மேலாளர்களால் பணிக்கப்பட்டார்.

இதற்கு முந்திய ஆண்டில் ருசியாவுக்குப் பத்துத் தடவைகள் சென்று அங்கு 115 நாள்கள் தங்கியிருந்த இசி, தான் வேலைப்பழுவால் முறிந்துவிட்டதாக மனைவியிடம் கூறிவந்துள்

ளார். அடுத்த நாள் இவருக்குக் கிடைக்கவேண்டியதும், நெடுங் காலமாக ஒத்திப்போடப்பட்டதுமான ஓய்வு கிடைக்க இருந்ததுடன், அவருடைய குடும்பத்துடன் அளவளாவி மகிழும் சந்தர்ப்பமும் கிடைக்கவிருந்தது.

காலை உணவுக்குத் திரு. இசி வரக் காலதாமதமாகியதும் இவருடன் வந்தவர்கள் இவரைப் பார்த்துவரும்படி விடுதிப் பணியாளர்களை பணித்தனர். அப்போது இருதயநோயினால் தாக்கப்பட்ட திரு.இசி குளியலறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

ரோக்கியோவிலுள்ள மத்திய தொழில் தரக்கட்டுப்பாட்டுப் பணிமனை முன்னெப்போதும் எடுத்திராத ஒரு தீர்மானத்தை அண்மையில் எடுத்துள்ளது. திரு.இசி, கறோசி(Karoshi) என்ற நோய்க்குப் பலியாகி இருக்கலாம் (வேலைப் பழுவினால் இறந்திருக்கலாம்) எனக் கூறியுள்ளது. வேலைப்பழுவினால் குடும்பத் தலைவனைஇழந்த 30 குடும்பங்களுக்கு அண்மைய ஆண்டுகளில் தொழில் அமைச்சு, நட்ட ஈடு வழங்கியுள்ளது. ஆனால் இந்த நட்ட ஈட்டைப் பெற்றவர்கள் எல்லோரும் சாதாரண கூலித் தொழிலாளர்களேயாகும்.

இசி வழக்கின் சட்டத்தரணியும், கறோசி என்ற நோய்க்குப் பலியானவர்களின் தேசியபாதுகாப்புச் சபையின் செயலதிபருமான திரு. கிரோசி காவாகிற்ற அவர்கள், ''இந்தத் தீர்மானம் ஏனைய உடலுழைப்பற்ற தொழிலாளர்களின் (White-Collarworkers) நட்ட ஈட்டுக்கோரிக்கைகளைப் பாதிக்கும்'' எனக் கூறியுள்ளார். ''பத்திரிகைகளும் பொதுமக்களும் இந்தத் தீர்ப்பை அதிகரித்துள்ளமையினால் அரசு இதை அலட்சியப்படுத்தமுடியாது.'' என் இவர் மேலும் கூறினார்.

தற்போது ஆண்டுக்கு 700 ஆக இருக்கும் நட்ட ஈட்டுக் கோரிக்கைகளில் அரைவாசியாக இருக்கும் உடலுழைப்பற்றவர்களின் கோரிக்கைகள் இத்தீர்ப்பின்படி மேலும் அதிகரிக்கக் கூடும். அதிகமான வழக்குகள் நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடும். அத்தோடு நட்ட ஈட்டுத் தொகைகளும் அதிகரிக்கக் கூடும். கறோசி என்ற நோயினால் பத்தாயிரம் தொழிலாளர்கள் இறப்பதாக மதிப்பீடு செய்யப்படுகின்றமையால் குறிப்பாக இந்த நட்டஈட்டு வழக்குகள் கூடிக்கொண்டே போகும் என அவர் கூறுகின்றார்.

இந்த வழக்கின் தீர்ப்புப்படி திரு.இசியின் கைம்பெண்ணுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் யென் (15,940 அமெரிக்க டாலர்கள்) வீதம் அவரது வாழ்க்கை முழுவதும் வழங்கும்படி அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது. ஏலவே மிற்சி நிறுவனம் 30 மில்லியன் யென்களை இந்தக் கைம்பெண்ணுக்கு ஒரே தவணையில் வழங்கியுள்ளது.

இப்படியான நட்ட ஈட்டுத்தொகையை தீர்மானிக்க எதுவித சட்டங்களும் இல்லை. ஆனால் அநேகமாக ஒரு பணக்கொடையும், மாதாந்தம் ஒய்வூதியமும் வழங்கப்பட்டுவருகின்றன. உத்தியோகபூர்வமற்ற வழிமுறைகளின்படி ஒரு தொழிலாளியின் சம்பளத்தில் 90 சதவீதம் ஒய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஜெர்மனிய பொருளாதாரக் கல்வி நிலையத்தின் ஆய்வறிக்கையின்படி ஜெர்மனியர்களிலும் பார்க்க 550 மணித்தியாலங்கள் கூடுதலாகவும், அமெரிக்கர்களிலும் பார்க்க 300 மணித்தியாலங்கள் கூடுதலாகவும் 1990ம் ஆண்டில் சராசரி 2201 மணித்தியாலங்கள் வேலை செய்த யப்பானியத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையில் திரு. இசியின் இறப்பினால் வழங்கப்பட்ட தீர்ப்பு பாரிய மாற்றத்தை எற்படுத்துமெனக் கூறமுடியாது.

சக தொழிலாளர்களுடன் சேர்ந்து சிற்றுண்டிச் சாலைகளின் சில நேரங்களைக் கழித்துவிட்டுத் தங்கள் வீடுகளுக்குத் தாமாகவே செல்லு முன்னர் யப்பானியத் தொழிலாளர்கள் பணிமனைகளில் மேலதிகமான நேரம் இருப்பதற்கு உரிமையாளரின் அழுத்தங்களும், நிறுவன மேலாளர்களின் கடும்போக்கும், தனிமனிதப் பேராவலுமே தூண்டுதலாக இருக்கின்றன. ஒரு யப்பானியத் தொழிலாளி தன் விடுதலை நாட்களை தனது முழுவேலையை முடித்த பின் எடுத்தாலும் அவருக்கு பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு குறைவாகவே காணப்படும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் யப்பானின் பொருளாதாரம் உச்ச நிலையில் இருந்தபோது, புதிதாகப் பதவியில் அமர்த்தப்படுபவர்களுக்கு ஊக்குவிப்பாகச் சில நிறுவனங்கள் கலாய்த் தீவுகளுக்குச் சென்றுவர இலவச பிரயாண வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தன. பொருளாதாரத்தில் பின்னடைவு ஏற்பட்ட பின்னர் இவை நிறுத்தப்பட்டன. இப்போது இந்நிறுவனங்கள்



தேர்ந்த

குறைந்தளவு தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதோடு மேலதிக வேலை நேரத்தையும் குறைத்துள்ளன. அதிகமான தொழிலாளர்கள் நூறு மணித்தியாலங்களுக்கு மேல் மேலதிக வேலை செய்தாலும் அதற்குக் கொடுப்பனவுகள் கொடுக்கப் படுவதுமில்லை. அவை பதியப்படுவதுமில்லை.

இத்தோடு இந்தத் தேசத்தின் மூன்றாந்தர உள்ளகக்கட் டமைப்பினாலும், வீடமைப்பதற்கு அதிக செலவுசெய்யவேண்டி இருப்பதாலும், அநேகமான தொழிலாளர்கள் ரோக்கியோவுக்கு வருவதற்கு நெருக்கடியான புகைவண்டிகளில் இரண்டு மணித் தியாலங்களுக்கு மேல் பிரயாணஞ்செய்வதோடு வசதியற்ற வீடுக ளிலும் வசிக்கவேண்டியுள்ளது. இவற்றை விரைவாக நிவர்த்தி செய்யமுடியாமலும் இருக்கின்றது.

1997 ஆம் ஆண்டளவில் வேலை நேரத்தை 1800 மணித் தியாலங்களாகக் குறைக்க அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. பிரதம மந்திரி கிச்சி மியாசாவா (Kichi Miyazawa) அவர்களின் இத்திட்டம் யப்பானிய மக்கள் வசதியாக வாழ்வதற்கு வழி செய்தாலும், மேலதிக வேலை செய்வதை தடை செய்வதற்கான சட்டதிட்டங்கள் இல்லாமையால் இதை நடைமுறைப்படுத்து வது இயலாததாயிருக்கும்.

ஒரு தொழிலாளி கறோசி என்ற நோயினால் இறப்ப தற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் செய்த தொழிலுக்கேற்ற நட்ட ஈடே வழங்கப்பட்டு வருவதால் கடந்த செவ்வாயன்று நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் சட்டரீதியான விளைவுகள் மட்டுப் படுத்தப்பட்டவைாகவே இருக்கும் போல் தோன்றுகின்றது.

திரு. இசியின் வழக்கு ஒரு புதுமையான வழக்காகும். ஏனெனில் இந்த வழக்கில் சாட்சியமளித்த ருசிய வர்த்தர்கள், இந்த நிறுவனம் திரு.இசிக்கு அதிகளவு வேலைப் பழுவைக் கொடுத்ததனாலேயே அவர் இறக்க நேரிட்டது எனக்கூறியுள் ளனர். தங்கள் நிறுவனங்கள் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்ற பயத்தினால் யப்பானியர்கள் தங்கள் நிறுவனங் களில் நடப்பவைபற்றி வெளியே கூறுவதில்லை எனக் கூறுகின் றார் திரு.காவகிற்ற அவர்கள்.

# “வாட்டர்கேற்” அவதூறு பற்றிய உள்ளெண்ணங்கள் நிச்சயமற்றதாகவே இருக்கின்றன

—றொபர்ட் பீன்—

(நியுயோர்க் ரைம்ஸ்--ஐலண்ட், 28-07-92)

சனநாயகக் கட்சித்தேசிய குழுவின் தலைமையகத்தைத் திருடர்கள் உடைத்து உட்சென்றிருந்து தகவல் எடுத்த செய்தியை பத்திரிகைகளில் வெளிவரச் செய்ததன் மூலம் ஏற்பட்ட அரசியல் அதிர்ச்சி அலைகளினால் சனாதிபதி றிச்சர்ட் எம். நிக்சன்(Richard M. Nixon)பதவி துறக்க நேரிட்ட இருபது ஆண்டு காலத்துக்குப் பின்னரும் பல கேள்விகளுக்குப் பதில் காணமுடியாத நிலையில் உள்ள இந்த அவதூறு, அமெரிக்க மக்களின் மனதை உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

வரலாற்றாசிரியர்கள், புலன்விசாரணையாளர்கள், அரசியல்வாதிகள், இதைப்பற்றி ஆய்வுசெய்யும் மாணவர்கள் ஆகியோர் எழுப்பும் பல ஊகங்கள் விடை காணமுடியாமல் நீடித்துக்கொண்டே செல்கின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நிரூபிக்கத்தக்க விடைகளை அளிக்கமுடியாமல் இவர்கள் திணறுகின்றனர்.

1) திருடர்கள் 'வாட்டர்கேற்' பணிமனையை உடைத்துத் திருட எத்தனித்தது ஏன்? அவர்கள் அங்கு எதிர்பார்த்தது என்ன?

(2) 'வாஷிங்டன் போஸ்ற்'' என்னும் பத்திரிகையில் வெளிவந்த அதிர்ச்சியூட்டும் வாக்குமூலங்களைக் கொடுத்த 'டீப்துறோற்'(Deep Throat)என்பவர் யார்?

(3) இந்தத் திருட்டைப்பற்றி திரு. நிக்சன் அறிந்து கொண்டது எப்போது? திருட்டுக்கு முன்னர் இந்தத் திட்டத்தை அவர் அறிந்திருந்தாரா? திருட்டு நடைபெற்ற மூன்று நாட்களுக்கு பின்னர், அதாவது 20-06-1972 அன்று சனாதிபதி நிக்சனுக்கும் அவருடைய தலைமைச் செயலர் திரு. எச். ஆர். கல்டமன் H. R. Haldeman) அவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்த நாடாவில் இருக்கும் 18நிமிட இடைவெளி வந்தது எப்படி?

(1) 1974-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் சனாதிபதி நிக்சன் பதவி விலகுமுன்னர் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படுமெனை உத்தரவாதம் அளிக்கப்பட்டதா?

மெயினிலிருந்து(Maine) தெரிவு செய்யப்பட்ட குடியரசுக் கட்சியைச் சேர்ந்த வில்லியம் எஸ். கோகன் அவர்கள் பாராளுமன்ற நீதி நிருவாகக் குழுவில் உறுப்பினராக இருந்தபோது, திரு. நிக்சனின் மதிப்பை இழக்கச் செய்யும் பிரேரணைக்கு ஆதரவாக 1974-ம் ஆண்டு வாக்களித்துள்ளார். தற்போது செனட்டராக இருக்கும் இவர் சில கேள்விகள் தனக்குப் புதிராகவே இருப்பதாகக் கூறுகின்றார்.

இந்த ஒலிப்பதிவு நாடாக்களை அழிக்கவேண்டுமென திரு. நிக்சன் எப்போதாவது எண்ணினாரா? அப்படியாயின் இவை அழிக்கப்படாதது ஏன்? சனாதிபதி நிக்சன் அமெரிக்க மக்கள் முன்னிலையில் தோன்றி திருட்டுச் சம்புவத்தைக் கண்டித்து தனது ஈடுபாட்டை எடுத்துரைத்து தவறுதலுக்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்காதது ஏன்?

1974-ம் ஆண்டு இளவேனிற் காலம் வரை நிக்சனுக்கு எதிராக மதிப்பிழக்கச் செய்யும் பிரேரணையைக் கொண்டுவரு

வதற்குப் பாராளுமன்றம் விரும்பாத நிலையில் இருந்தபொழுது அவர் உண்மையை வெளிப்படுத்தித் தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம் என திரு. கோகன் கூறுகின்றார்.

இந்த நாடாக்களை அழிப்பது நீதிக்குத் தடையாக இருக்குமென்று வெள்ளை மாளிகை மேலாளர்கள் கருதியதாலோ அல்லது நிக்சனை இந்தக் குற்றங்களிலிருந்து விடுவிப்பதற்கு இந்த நாடாக்கள் உதவும் எனச்சில மேலாளர்கள் கருதியதாலோ அவை அழிக்கப்படாதிருக்கக் கூடும் எனத் திரு. கோகன் கூறுகின்றார்.

வாட்டர்கேற் அவதூறு (Wetergate Scandal)பற்றி ஆராயும் மாணவர்களும், புலனாய்வாளர்களும் அதில் பங்குபற்றியவர்களும், வாட்டர்கேற் பணிமனையை உடைப்பதற்கான உள்ளெண்ணங்கள் என்ன என்பது உட்படச் சில கேள்விகளுக்கு ஒத்துவரக்கூடிய பதில்களைக் கூறமுடியுமென எண்ணுகின்றனர்.

வாட்டர் கேற்றை உடைப்பது பற்றிய உள்எண்ணத்தை பின்நோக்கிப் பார்த்தால் அது பகுத்தறிவற்ற செயலாகத் தோன்றுகின்றது. ஆனால் நிக்சனின் அதிகமான உதவியாளர்களும், கோட்பரப்பாளர்களும் உலகத்தைப் பற்றிப் புறம்போக்கான சூழ்ச்சி எண்ணங்களையும், தங்களுக்கேற்றவாறு நீதி நியாயக் கோட்பாடுகளையும் கொண்டிருந்தார்கள் என்பதை வாட்டர்கேற் காலத்து ஆவணங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

நிக்சனின் அரசியல் எதிரிகளுக்கு எதிரான விரிவான கண்காணிப்புத் திட்டங்களின் ஒரு பகுதி இந்தத் திருட்டாகும்.

வாட்டர்கேற் தொடர்மாடியிலுள்ள சனநாயகக் கட்சியின் தலைமையகத்தை உடைத்து அதற்குள் 17-6-1972 அன்று சட்டவிரோதமாக நுழைந்தது உண்மையில் இரண்டாவது முறையாகும். முதன்முறையாக திருடர்கள் இதே பணிமனைக்குள் 27-5-1972 அன்று உட்புகுந்து ஒட்டுக்கேட்கும் மின்கருவிகளை இணைத்துச் சென்றுள்ளனர்.

சனநாயகக் கட்சியின் தேசியக் குழுத்தலைவரான திரு. லோறன்ஸ் எப். ஓ. பிறையன் அவர்களது தொலைபேசியிலும்



தேர்ந்த

சனநாயகக் கட்சியின் தேசியத் தலைவர்கள் அமைப்பின் நிரு வாக இயக்குனர் திரு. ஆர். ஸ்பென்சர் ஒலிவர் அவர்களது தொலைபேசியிலும் இந்த ஒட்டுக்கேட்கும் கருவிகள் இணைக் கப்பட்டன.

ஒலிவருடைய தொலைபேசியில் இணைக்கப்பட்ட ஒட்டுக் கேட்கும் கருவி நன்றாக இயங்கியதன் மூலம் குடியரசுக் கட் சியினர் அவரது பேச்சுக்களை நன்றாகக் கேட்க முடிந்தது. ஆனால் ஓ பிறையனின் தொலைபேசியில் பொருத்தப்பட்ட ஒட்டுக்கேட்கும் கருவியில் தொழில் நுட்பக்கோளாறு ஏற்பட் டது. இந்தக் கோளாறைத் திருத்துவதற்குத் திருடர்கள் திரும் பவும் 1972-ம் ஆண்டு யூன் திங்களில் சென்றனர்.

சனநாயகக் கட்சி வேட்பாளர்களின் மதிப்பைக் குறைப்ப தற்கு உதவியான செய்திகளைப் பெறுவதற்காகவும், 1972-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் சனநாயகக் கட்சியின் அர சியல் யுக்திகள் என்னவென்பதை அறிந்து கொள்வதற்கா கவும் இந்தத் திருடர்கள் உண்மையாக முனைந்திருக்கக்கூடும். ஆனால் நிக்சனுக்கும் அவரது நிருவாகத்திற்கும் இக்கட்டான நிலையை உருவாக்கக்கூடிய சில விடயங்களைப்பற்றி சனநாய கக் கட்சியினர் எவ்வளவு தூரம் அறிந்துள்ளனர் என்பதைத் தெரிந்துகொள்ளக் குடியரசுக்கட்சியினர் முனைந்திருப்பார்கள் என்ற முடிவுக்கு இந்த விடயத்தைப் பற்றி ஆராயும் நிபுணர் கள் வந்துள்ளனர்.

நிக்சனுடைய சகோதரர் எப். டோனால்ட் நிக்சனுக்கும் (F. Donald Nixon)ஒதுங்கிவாழும் கோடீஸ்வரரான கோவார்ட் ஆர். கியூஸ்(Howard. R. Hughes)அவர்களுக்கும்உள்ளதொடர்பை சனநாயகக் கட்சியினர் எவ்வளவு தூரம் அறிந்திருந்தனர் என் பதை அறிவதில் நிக்சனின் கோட்பரப்பாளர்கள் முனைந்துள் ளார்களென்று செனட்சபை வாட்டர்கேட் அவதூறுக் குழுவின் முக்கிய சட்டத்தரணியான சாமுவேல் டாஷ் கூறுகின்றார். குற்றச் செயல்கள் புரிபவர்களுடன் தொடர்பு வைத்துள்ள நியூசன் நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு மேலாளருடன் டோனாலட் நிக்சன் தொடர்புகள் வைத்திருந்ததை அறிந்த சனாதிபதி நிக்சனின் கோட்பரப்பாளர்கள், இத்தொடர்புகள் வெளிவருவது சனாதிபதி நிக்சனை இக்கட்டான நிலைக்குக் கொண்டு வருமெனக் கவலைகொண்டனர் என திரு. டாஷ் கூறுகின்றார்.



2643 C.C

வாசிங்டனில் திரு. கியூஸ் அவர்களுக்குப் பரிந்துபேசுபவராக திரு. ஓ பிறையன் இருந்தாரென்பதையும், வெளிவிவகாரக் குழுவிலிருக்கும் சட்டத்தரணி ஒலிவரின், தந்தையான றொபர்ட் ஒலிவர் வாசிங்டனில் கியூசின் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதையும் அறிந்த நிக்சனின் கோட்பரப்பாளர்கள், சனநாயகக் கட்சியினர் இதை அறிந்திருப்பார்கள் என்பதால் கவலைகொண்டனர்.

மீண்டும் சனாதிபதித் தேர்தலில் கோட்பரப்புச் செய்வதற்கு நிச்சனால் அமைக்கப்பட்ட தேர்தற் கோட்பரப்பாளர் குழுவின் துணை இயக்குனராகவிருந்த திரு. யெப் ஸ்ரூவர்ட் மக்ரூட் அவர்கள் இந்த ஊகத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். சனாதிபதி நிக்சனுக்கும் திரு. கியூஸ் அவர்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை சனநாயகக் கட்சியினர் எவ்வளவு தூரம் அறிந்திருக்கின்றனர் என்பதை அறிவதே இந்த உடைப்பின் முதலாவது நோக்கமாகும் எனத் திரு. மக்ரூட் மேலும் கூறினார். தேர்தல் நடக்கும் போது இந்தச் செய்திகள் நிக்சனின் தேர்தல் கோட்பரப்பாளர்களின் மனத்தை உறுத்திக்கொண்டே இருக்கவேண்டும் என்று குடியரசுக்கட்சியினர் விரும்பினர் என அவர் மேலும் கூறினார்.

நிக்சனின் முன்னிலையில் உதவியாளரான ஜோன் டீ ஏழிச்மன் செனட்சபை வாட்டர்கேற் குழுவுக்குச் சாட்சியமளிக்கும்போது திரு. கியூஸ் அவர்களின் அமைப்பிற்குத் திரு. ஓ பிறையின் எவ்வளவு தூரம் பங்களிப்பு அளிக்கிறார் என்பதை அறிவதில் திரு. நிக்சன் ஆர்வம் கொண்டிருந்தார் என்று கூறியுள்ளார். நாட்டில் உள்ள சனநாயக அரசியல்வாதிகளில் ஒரேயொரு செயல்வீரன கத் திரு. ஓ பிறையின் திகழ்ந்தார் எனச் சில குடியரசுக்கட்சியினர் கூறுகின்றனர். அனைத்துலகத் தந்தித் தொலைபேசிக் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கை வைப்புகளுக்கு எதிராக மத்திய அரசு தொடர்ந்த வழக்குகளில் இணக்கம் காணப்பட்ட தொகைபற்றி திரு. ஓ பிறையின் எவ்வளவு அறிந்திருப்பார் என்பதை அறிய குடியரசுக் கடசியினர் முனைந்திருக்கக்கூடும் என்பதும் இந்த உடைப்புக்கு மற்றொரு காரணமாக இருக்கலாமெனத் தான் கருதுவதாகத் திரு. ஒலிவர் கூறுகின்றார்.

1972-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குடியரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டுக்குத் தேவையான நிதி உதவியை அனைத்



தேர்ந்த

துலக தந்தி, தொலைபேசிக் கூட்டுத்தாபனம் கொடுப்பதாக விருந்தால் 1971-ஆம் ஆண்டில் இந்த வழக்குகளில் சமாதானத் தீர்வை ஏற்படுத்த நிக்சன் நிருவாகம் இணங்கும் எனப் பல வாரங்களாகத் திரு. ஓ பிறையின் கூறிவந்துள்ளார்.

அனைத்துலகத் தந்திதொலைபேசிக் கூட்டுத்தாபனத்தால் நிருவகிக்கப்படும் மெயின்லுள்ள வேட்டையாடும் தங்குமிட மொன்றில் சட்டமா அதிபரான திரு. யோன் என் மிச்செல் அவர்கள் சில காலந்தங்கியிருந்தமை குறிந்துக் கிடைத்த துப்புப் பற்றிச் சனநாயகக் கட்சியினர் புலன் விசாரணை செய்து வந்ததைக் குடியரசுக்கட்சியினர் அறிந்திருந்தனர்.

அனைத்துலகத் தந்தி தொலைபேசிக் கூட்டுத்தாபனத்தின் வழக்கில் இணக்கம் காணப்பட்ட தொகைகளின் விபரங்களை எவ்வளவு தூரம் நாம் அறிந்திருப்போம் என்பதை அறிவதற்காகவே எங்கள் தொலைபேசிகளில் ஒட்டுக்கேட்கும் மின் கருவிகளைப் பொருத்தியுள்ளனர். எங்களுக்கு இவைபற்றிப் பல விபரங்கள் தெரிந்திருக்கும். அவைகளைப் பின்னர் தேர்தல் கோட்பரப்புக் காலத்தில் பயன்படுத்தலாம் என்பதால் அதுபற்றி அறிய நினைத்திருக்கலாம் என ஒலிவர் கூறினார்.

இந்த உடைப்புக்கு முன்னர், இந்த உடைப்பைப் பற்றிய முழு விபரங்களும் திரு. நிக்சனுக்குத் தெரிவிக்கப்பட்டதென்பதில் எனக்கு முழு நம்பிக்கையும் இருக்கிறதெனத் திரு. டாஷ் கூறினார்.

சனாதிபதி நிக்சன் திரும்பவும் அப்பதவிக்கு வருவதாக அமைக்கப்பட்ட தேர்தற் கோட்பரப்புக் குழுவின் சட்டத்தரணியான திரு. ஐ. கோர்டன் லிடி அவர்களால், நிக்சனின் எதிரிகளை வேவுபார்த்து அவர்களது குறைபாடுகளை அறிவதற்கான திட்டம் 1972-ம் ஆண்டு பெப்ரவரி திங்களில் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் முழுவிபரங்களும் வெள்ளைமாளிகை சட்டத்தரணிகளான திரு. மிச்செல், திரு. மக்ரூடர், திரு. யோன் டபிள்யூ டீன் ஆகியோருக்கு விளக்கிக் கூறப்பட்டது. சனநாயகக் கட்சியின் தலைமைப்பீடம் உட்பட ஏனைய இலக்குகளையும் மின்கருவிகள் மூலம் கண்காணிக்கும் சாத்தியக்கூறுகளை அவர்கள் விவாதித்தனர்.

இந்தத் திட்டத்தை உடனடியாகத் திரு. கல்டமனுக்கு விளக்கிக் கூறிய திரு. டீன் அது புத்திசாலித்தனமற்றது எனவும்

கூறினார். வெள்ளை மாளிகை நடைமுறை வழிமுறைகளின் படி திரு. டீன் கூறியவற்றைத் திரு.கல்டமன் அறிந்ததும், இந்த உடைப்புப் பற்றிய சூழ்ச்சித் திட்டத்தை நிக்சனுக்கு அது நடப்பதற்குமூன்று திங்களுக்கு முன்னதாகவே கூறியிருப்பார் எனத் தான் நம்புவதாகத் திரு. டாஷ் கூறினார்.

யோர்ச்ரவுண் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியராக இப்பொழுதும் கடமையாற்றிவரும் திரு. டாஷ் அவர்கள், இந்த உடைப்பு நடைபெற்ற சில நாட்களுக்குள் அதை மறைப்பதற்காகத் திரு. நிச்சன் விவாதித்தது பற்றிய வெள்ளை மாளிகையிலுள்ள நாடா ஒன்று இது பற்றிய விசாரணையை முன்னெடுத்துச் செல்ல உதவியது எனக் கூறுகின்றார். தொடர்ந்து அவர் கூறும்போது சனாதிபதி நிக்சன் இந்த உடைப்புப் பற்றிய திட்டத்தை 1972-ம் ஆண்டு மார்ச் திங்களில் அறிந்திருப்பார் எனத் தான் நம்புவதாகவும், திரு. கல்டமன் அறிந்திருந்தால் சனாதிபதியும் அறிந்திருப்பார் எனவும் கூறினார்.

தான் பதவியிலிருப்பதற்கான முயற்சியில், 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை இந்த உடைப்புப் பற்றியோ அல்லது உண்மைகளை மறைத்து வைக்க நடந்த முயற்சிகள் பற்றியோ தான் அறிந்திருக்கவில்லையெனத் திரு. நிக்சன் மீண்டும் மீண்டும் கூறிவந்துள்ளார்.

இதைப்பற்றிய உண்மைகளை 'வாசிங்டன் போஸ்ற்'என்னும் புதினத்தாளில் திரு.வுட்வோர்ட் அவர்களும் திரு.காரில் பேண்ஸ்ரைன் அவர்களும் இணைந்து சிறிது சிறிதாக வெளியிடத் தொடங்கினர். இவர்களுக்கு இந்த விடயங்களைக் கொடுத்தவர் 'டீப் துறோற்' என அடையாளம் கொடுக்கப்பட்டார்.

பல ஆண்டுகளாக 'டீப் துறோற்' என்பவர் யார் என்பதைக்கண்டுபிடிக்கும் முயற்சி நடக்கின்றது. திரு. கல்டமனின் பின்னர் வெள்ளைமாளிகையில் அவரது பதவியை வகித்த திரு. அலெக்சாண்டர் எம்.கெய்க் யூனியர் அவர்கள் 'டீப் துறோற்' ஆக இருக்கலாம் என்ற சந்தேகம் இருக்கின்றது.

1972 ஆம் ஆண்டு திரு. வுட்வோர்ட்டுடன் வாசிங்டன் போஸ்ற் பத்திரிகையில் பணியாற்றிய திரு.யேம்ஸ்மான் கொடுக்கும் விபரங்கள் டீப் துறோற்றின் அடையாளத்தை நம்பத்



தேர்ந்த

தகுந்த வகையில் வெளிப்படுத்துகின்றன. திரு. மான் அவர்கள் 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்' பத்திரிகையில் தற்போது பணியாற்றி வருகின்றார்.

திரு. மான் அவர்கள் சென்ற திங்கள் 'அட்லான்ரிக்' என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் மத்திய புலனாய்வுத் துறையில் உயர் மேலாளர் பதவி வகிப்பவர் ஒருவர் தான் இந்த 'டீப் துறோற்' ஆக இருக்கக் கூடுமெனக் கூறியுள்ளார். ஆனால் அவர் யார் என்று திரு.மானால் அடையாளம் காணமுடிய வில்லை. 1972ம் ஆண்டு கோடைகாலத்திலும், வசந்த காலத் தின் போதும் திரு.வுட்வோர்ட் அவர்கள் மத்திய புலனாய்வுத் துறையில் இருக்கும் தனது நண்பனைப் பற்றியும், தனக்குச் செய்திகளை வழங்குபவரைப்பற்றியும் அடிக்கடி கூறிவந்ததைத் திரு.மான் நினைவுகூருகின்றார்.

மத்திய புலனாய்வுத் துறையினர் இந்தச் செய்திகளை வெளியிடுவதற்கு ஏன் உள்ளெண்ணம் கொண்டிருந்தார்கள் என்பதைத் திரு.மான் விளக்குகின்றார். வாட்டர்கேற்றை உடைத்து உட்புகுந்தவர்களைக் கைதுசெய்வதற்கு 46 நாட்க ளுக்கு முன்னர், மத்திய புலனாய்வுத்துறையின் தலைவராக நீண் டகாலம் இருந்த திரு.எட்கார் கூவர் இறந்தமையாலும், நிக்ச னின் வெள்ளை மாளிகை நிருவாகம் தங்கள் விசாரணைகளில் தலையிடுவதால் தங்கள் சுதந்திரம் பறிபோகலாம் என்ற நோக் கினாலும் இச்செய்திகளைப் பத்திரிகைகளுக்குக் கொடுக்க மத் திய புலனாய்வுத்துறை உள்ளெண்ணம் கொண்டிருந்தது எனக் கூறுகின்றார்.

தங்களுடைய விசாரணைகளில் வெள்ளை மாளிகை தலை யிடக்கூடாதென்பதற்காகவே மத்திய புலனாய்வுத் துறையினர் உயர் மேலாளர்களில் ஒருவரான டீப் துறோற் வாட்டர்கேற் பற்றி திரு.வுட்வோர்ட்டுடனும், வாசிங்டன் போஸ்ற் பத்திரிகை யாளருடனும் கதைத்தார் எனத் திரு மான் எழுதியுள்ளார். வாட்டர்கேற் பற்றிய விசாரணைகளிலிருந்து வெளிவரும் விப ரங்கள் நிக்சனின் நிருவாகத்தால் மறைக்கவோ அல்லது திருத் தியமைக்கப்படவோ முடியாதவகையில் ஆக்குவதற்காகவே மத் திய புலனாய்வுத்துறை பத்திரிகையாளருடைய தொடர்பு மூலம் இந்தச் செய்திகளை வெளிப்படுத்தியது எனத் திரு.மான் எழுதி யுள்ளார்.


PUBLIC LIBRARY

திரு.மான் அவர்களுடைய ஊகங்களைப் பற்றித் திரு.வுட் வேரார்ட்டும், பேர்ணரைனும் கருத்துக்கூற மறுத்துவிட்டனர்.

1972ம் ஆண்டு யூன் திங்கள் 20ந் திகதி அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப் பதிவு செய்த நாடாவில் 18 நிமிட இடைவெளி ஏற்பட்டதற்குத் திரு.நிக்சனே பொறுப்பாளியாவார். ஆனால் இதற்குத்தானே பொறுப்பு என ஏற்றுக் கொண்ட அவரது செயலாளர் றோஸ்மேரிவுட்ஸ் இந்த அழிப்புகள் தற்செயலாக நடந்தவை எனக்கூறியுள்ளார்.

இந்த ஒலிப்பதிவு நாடாவிலிருந்து அழிக்கப்பட்ட பகுதிகள் தனக்கும் நிக்சனுக்குமிடையே வாட்டர்கேற் பற்றி நடந்த பேச்சுவார்த்தைகளாகும் எனத் திரு.கல்டமனின் குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது.

வாட்டர்கேற் அவதூறு பற்றி செனட்டர் எம்.கென்னடி விசாரணை செய்தபோது அவருக்கு உதவியாளராக இருந்த திரு.யேம்ஸ் எவ். பிளக் அவர்கள், நிக்சனும் அவரது அரசியல் கூட்டாளிகளும் எவ்வளவு தூரம் தவறாக நடந்துள்ளார்களென்பது இனிமேல்தான் தெரியவரும் எனக்கூறுகின்றார்.

''நான் ஒரு அறிவுப்பிறழ்ச்சியாளனல்லன். ஆனால் இந்த வாட்டர் கேற்றைப் போன்ற எங்களுக்குத் தெரியாத அநேக விடயங்கள் நடைபெற்றுள்ளன ''எனக் கூறும் திரு.பிளக்''எங்களுக்குத் தெரிவது ஒரு பாரிய கடற்பனிமலையின் உச்சி ஒன்றுதான்'' எனக்கூறுகின்றார்.

இரண்டாவது முறை சனாதிபதிப் பதவியை வகிக்கும் போது தனது அரசியல் எதிரிகளைக் கண்காணிப்பதற்கும், அதிருப்தியாளர்களை ஒடுக்குவதற்கும் நிக்சன் வகுத்திருந்த திட்டங்களை வரலாற்று ஆசிரியர்கள் விரிவாக ஆய்வு செய்யவில்லை என வாட்டர்கேற் விடயததைத் தனது பத்திரிகைக்காகச் சேகரித்த சி.பி.எஸ் நியூஸ் என்ற பத்திரிகையின் நிருபரான திரு.டானியல் ஸ்கோர் கூறியுள்ளார்.

வாட்டர்கேற் விடயம் வெளிவராது இருந்தால், ஒரு அரசியல் யாப்பின்படி நடக்கவேண்டிய அமெரிக்க அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய திட்டங்களை எவ்வளவு தூரம்

திரு.நிக்சனும் அவரது உதவியாளர்களும் நடைமுறைப்படுத்தியிருப்பார்கள் என்பது இன்னமும் மக்களுக்கு விரிவாகத் தெரியப்படுத்தப்படவில்லை எனத் திரு.ஸ்கோர் கூறுகின்றார். அத்தோடு 1972ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டியதன் பயனாகத் தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற மன எண்ணம் திரு.நிக்சனுக்கு இருந்ததெனத் திரு.ஸ்கோர் மேலும் கூறுகின்றார்.

நிக்சனினதும் அவரோடு வாட்டர்கேற் அவதூறில் சேர்ந்து பிடிபட்டவர்களினதும் மன உணர்வுகளைப் பற்றி என்னால் இன்னமும் விளங்கிக் கொள்ளமுடியவில்லை என ஐந்து ஆண்டு காலத்துக்கு மேலாக நிக்சனின் மூத்த உதவியாளராகப் பணியாற்றிய திரு.லெனாட் காமென்ற் கூறுகின்றார். அவர்களுடைய உள்ளெண்ணங்கள், நோக்கங்கள் அவர்கள் என்ன செய்தார்கள், என்ன நினைத்தார்கள் என்பதெல்லாம் ஒரு புதிராகவே இருக்கின்றது என அவர் மேலும் கூறினார்.

❀ ❀ ❀

பொறுப்பு என்பது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பொருள். அது அண்மையிலுள்ள ஒரு மனிதனாக இருக்கலாம்; ஒரு பலவீனமானவனாக இருக்கலாம்; ஒரு சித்த பிரமை பிடித்தவனாக இருக்கலாம். அது நாம் தெரிந்து கொண்ட ஒரு உண்மையாக இருக்கலாம் அல்லது நீர்ப்பரப்பாக இருக்கலாம் அல்லது ஒருவனுடைய சரித்திரமாக இருக்கலாம். எது நம்மிடம் ஒப்படைக்கப்படுகிறதோ அதனால் எவ்விதமான சோதனைகள் ஏற்பட்டாலும் அதற்கான முழுப்பொறுப்பையும் நாம் ஏற்க வேண்டும்.

—ஜெர்மன் நாடகாசிரியர்
ஸீக்ஃப்ரீட் லென்ஸ்.

## இரண்டாவது பலவேகய இராணுவ நடவடிக்கை மூலம் முதன்மை நிலப்பரப்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டைத் துண்டிக்கும் தங்கள் முக்கிய நோக்கத்தை அதிரடிப் படையினர் நிறைவேற்றியுள்ளனர்

(டெயிலி நியூஸ் 29. 07. 1992)

விடுதலைப் புலிகள் தரைமூலமாக உதவி பெறுவதையும், சுதந்திரமாக நடமாடுவதையும் தடைசெய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து முதன்மை நிலப் பரப்பிற்குச் செல்லும் தரை மற்றும் ஏரிப் பாதைகளைத் துண் டிப்பதே முப்படைத் தளபதிகளினால் வகுக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பலவேகய இராணுவ நடவடிக்கையின் போது அமைக்கப்பட்ட வெற்றிலைக்கேணி கரையோரக் காப்பு காப்பரண்களுக்கும் ஆனையிறவுக்கும் இடை யேயுள்ள நிலப்பரப்பை தங்கள் போராளிகளையும், பொருட்க ளையும் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குக் கொண்டு



தேர்ந்த

செல்ல விடுதலைப் புலிகள் உபயோகித்து வந்தார்கள். இந்தக் குறுகிய நிலப்பரப்பும் யாழ்ப்பாண ஏரியும் விடுதலைப் புலிகளுக்கு மிகவும் முக்கியம் வாந்தவையாகும்.

பலவேகய இராணுவ நடவடிக்கையின் போது வெற்றிலைக் கேணியில் கரையோரக் காப்பு காப்பரண்களை அமைத்ததன் மூலமும், வலம்புரி நடவடிக்கையின் போது தீவுகளையும், பூநகரி மற்றும் சங்குப்பிட்டித்துறை உட்பட்ட பகுதிகளைக் கைப்பற்றியதன் மூலமும் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களும் முற்றுப் பெற்றன.

இராணுவத் தளபதியான லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா அவர்களும் வான் படைத்தளபதியான எயர் மார்சல் ரெறன்ஸ் குணவர்த்தனா அவர்களும், கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்ணாந்து அவர்களும், வடக்குப் பகுதித் தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவா அவர்களுடனும், அதிரடிப்படையின் தளபதியான பிரிகேடியர் விஜய விமலரத்தினா அவர்களுடனும், கொழும்பிலும், அநுராதபுரத்திலும், பலாலியிலும் விரிவாகக் கலந்தாலோசித்த பின்னர் இந்தத் திட்டத்தை வகுத்தனர்.

இராணுவம், கடற்படை, மற்றும் வான்படை ஆகியவற்றின் நடவடிக்கைகளை வழிநடாத்துபவர்களுடன் இணைந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்தையும் தயார் செய்தார்கள். கடற்படையினரும், வான் படையினரும் தங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையை யூன் நடுப் பகுதியில் ஆரம்பித்தார்கள். வெற்றிலைக் கேணியிலுள்ள தங்ககம் திரும்பவும் சுறுசுறுப்படைந்தது.

ஒரு முக்கிய நோக்கத்தை அடைவதற்காகவே இரண்டாவது பலவேகய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக இந்த நடவடிக்கை 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது:

இராணுவத்தின் யுக்தி

இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தக் கூடியதாகவும், தடை செய்யக்கூடியதாகவும் விடுதலைப் புலிகள்

அமைத்திருந்த நிலைகளை அழிப்பதற்கும் பலாலியிலிருந்து காங்கேசன்துறை வரை அமைந்துள்ள இராணுவத்தின் முதன்மை தளத்தின் கட்டுடபாட்டுப் பகுதிகளை விரிவு படுத்தவும், இந்த ஆண்டு மே திங்கள் பிற்பகுதியில் காப்புப் படையினர், சண்ட மாருதம் என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கைமூலம இடைக்காட்டிலிருந்து தொண்டமானாறு வரையும், அங்கிருந்து தெல்லிப்பழை வரையும் உள்ள நிலப் பரப்பையும், மற்றும் கடற்புலிகளின் முக்கிய தளமான சேந்தான் குளத்தையும் அதிரடிப் படையின் முதலாவது பிரிவு கைப்பற்றியது. இந்த நிலப்பரப்பைக் கைப்பற்றியதன் மூலம் தரைப் படையினதும், கடற்படையினதும், வான்படையினதும் முதன்மையான தளங்களுக்கு கூடிய காப்பை வழங்க முடிந்தது.

### விடுதலைப் புலிகளின் யுக்தி

பாரிய தாக்குதலை மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றை இராணுவம் வகுத்துள்ளது என விடுதலைப் புலிகள் உணர்ந்தனர். முதன்மை நிலப்பரப்பிலிருந்துகுடாநாட்டைத்துண்டிக்கும் நோக்கமாகவே வெற்றிலைக் கேணியில் உள்ள இராணுவத் தளத்தை இராணுவத்தினர் பலப்படுத்த முயல்வதாக அவர்கள் கருதினர். விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளான ஆனையிறவு தங்ககத்தை விடுவிப்பதையட்டுமே நோக்கமாகக் கொண்டு சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பலவேகய என்ற இராணுவ நடவடிக்கையைப் போலல்லாது, இரண்டாவது பலவேகய இராணுவ நடவடிக்கை பல முக்கியமான நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

படையினர் வெளியேறி முன்னேறிச் செல்லக்கூடிய பகுதிகள் எங்கும் காப்பு அரண்களையும் தங்ககங்களையும் தடுப்பு வேலிகளையும், விடுதலைப்புலிகள் அமைத்திருந்தார்கள். வெற்றிலைக் கேணியிலுள்ள தளத்தை இராணுவத்தினர் பலப்படுத்துவதை முறியடிக்க அத்தளத்தை நோக்கி பாரிய அளவிலான எறிகணைத் தாக்குதலை அவர்கள் மேற்கொண்டனர். அத்துடன் தொடர்ச்சியாகத்தங்ககங்களையும்,காப்பரண்களையும்,மறைந்து தாக்கும் நிலைகளையும், ஏற்படுத்தியிருந்தனர். எறிகணைத் தாக்குதல்களாலும், கண்ணி வெடிகளாலும் இராணுவத்தினர் வெளியே வருவதைத் தங்களால் ஆரம்ப கட்டத்தில் தடுக்க இயலாதுவிடின் பின்வாங்கிச் சென்று சமரை நடாத்த அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.



தேர்ந்த

பலப்படுத்தல் :-

தங்கள் வசமுள்ள போர்த் தளபாடங்களைக் கொண்டு செல்லும் படகுகளையும் (L.C.M.S.) பீரங்கிப் படகுகளையும் பலப்படுத்திய கடற்படையினர், 1992 ஆம் ஆண்டு யூன் திங்கள் 10 ம் திகதியன்று கண்காணிப்பு நடவடிக்கையை ஆரம்பித்தனர். மன்னார், காங்கேசன்துறை, புல்மோட்டை, முல்லைத்தீவு, அளம்பில் மற்றும் திருக்கோணமலை ஆகிய இடங்களில் படையினரை ஏற்றி இறக்கக்கூடிய வசதிகள் கொண்ட தளங்கள் அமைக்கப்பட்டன. அதிரடிப்படைக்குத் தேவையான ஆட்பலம் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றை வழங்க நாள் முழுதும் இரண்டாவது புலிகள் படை அணியின் தலைமைச் செயலகம் இயங்கக் கூடிய வகையில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

கடற்கரைப் பகுதியில் கைப்பற்றிய நிலப்பரப்பை விரிவாக்கல்:

போதியளவு துருப்புக்கள் வந்து சேர்ந்ததும் 7வது பிரிகேட்டின் தளபதியான பிரிகேடியர் கெமுனு குலத்துங்க வெற்றிலைக்கேணிக்கு வந்து, லெப்ரினன்ட்கேணல் லோறன்ஸ் பெர்ணாந்து அவர்களின் தலைமையின் கீழுள்ள முதலாவது கஜபா அணியும், லெப்.கேணல் பரமி குலதுங்க அவர்களின் தலைமையின் கீழுள்ள 6 வது கெமுனு அணியும் இணைந்து கட்டைக்காடு மற்றும் யூல் கோட்டை (Fort Yul) பகுதிகளைக் கைப்பற்றி கடற்கரைப் பகுதியில் இறங்குதுறை நிலப்பரப்பை விரிவாக்கின

தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட விடுதலைப்புலிகள், இராணுவத்திற்குப் பாரிய உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதன் மூலம் பலப்படுத்தும் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தினார்கள். அதிரடிப்படையணியின் தளபதியான பிரிகேடியர் விஜய விமலரத்தினா, போர்க்காலத் தலைமைப்பீடம் ஒன்றை அமைப்பதற்காக வெற்றிலைக்கேணிக்கு வந்ததைத் தொடர்ந்து, வடபகுதிப் படைத் தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவா அவர்களும் தம் போர்க்களத் தலைமைப் பீடத்துடன் அவ்விடத்தை வந்தடைந்தார்.

**இடைத் தங்கு தளம் ஒன்றை அமைத்தல்:**

இதன்பின் முள்ளியான் கோயில் பகுதியில் இடைத் தங்கு தளம் ஒன்றை அதிரடிப்படையினர் அமைத்தனர். கெமுனுப் படையணியின் 6வது பிரிவின் லெப். கேணல் பரமி குலதுங்க அவர்களினதும், 6வது பிரிகேட்டின் தளபதியான கேணல் பாறி லியனகே அவர்களினதும் தலைமையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலிகளுடன் பேரச்சம் தரும் சமரில் ஈடுபட்டதன் பின்னரே இந்த இடைத் தங்குதளம் அமைக்கக் கூடியதாகவிருந்தது.

இந்தத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு உதவி வழங்கச் சென்ற லெப்ரினன்ட் கேணல் உதென கென்தரகம அவர்களின் தலைமையிலான 7-வது சிங்கப்படைப் பிரிவு விடுதலைப் புலிகளின் பாரிய எறிகணைத் தாக்குதல்களுக்கும், கண்ணிவெடித் தாக்குதலுக்கும் இலக்காகிப் பலத்த இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது.

இந்தப்பகுதியைப் பலப்படுத்திய விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு முன்னேறி வந்த துருப்புக்களை முன்னேற விடாது தடுத்துக் கொண்டிருந்த வேளையில், அதிரடிப்படையினர் வான் படையின் உதவியுடன் பக்கமாக எதிர்த் தாக்குதலை மேற்கொண்டு அந்தப்பகுதியைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்,

**நித்திய வெட்டையிலிருந்து பொத்துநாகன் வரையான பகுதியையும், புல்லா வெளியையும் கைப்பற்றியமை.**

முதலாவது பலவேகய இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டதும், ஆனையிறவுக்குச் செல்லும் பாதையிலே உள்ளதுமான நித்தியவெட்டையிலிருந்து பொத்துநாகன் வரையுள்ள பகுதிகளிலுள்ள ஊர்களிலும், புல்லாவெளியிலும் மிகவும் பலம் வாய்ந்த தளங்களை விடுதலைப்புலிகள் அமைத்திருந்தனர். கேணல் பாறி லியனகேயின் தலைமையிலான 6-வது பிரிகேட் பிரிவு, 6-வது கெமுனுப் படைப்பிரிவை ஆயத்த நிலையில் வைத்துக்கொண்டு லெப்ரினன்ட் கேணல் திஸ்ஸ ஜெயவர்த்தனா தலைமையிலான 6-வது கஜபாகு பிரிவை நித்தியவெட்டையின்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



நேர்ந்த

ஒரு பக்கத்தில் தாக்குதலில் ஈடுபடுத்தியும், பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தலைமையிலான 7-வது பிரிகேட், 7-வது சிங்கப் பிரிவை ஆயத்த நிலையில் வைத்துக்கொண்டு லெப்ரினன்ட் கேணல் லோறன்ஸ் பெர்ணாந்து தலைமையிலான 1வது கஜபாகு படைப் பிரிவை நித்தியவெட்டையில் மறுபக்கத்தில் தாக்குதலில் ஈடுபடுத்தியும், அதிரடிப்படையினர் ஒரு பாரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இருமுனைகளிலும் முக்கியமாக முள்ளியான் பக்கத்திலிருந்து பலத்த எதிர்ப்பையும், தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதல்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. மிதிவெடியினால் ஏற்பட்ட பலத்த இழப்புக்களின் நடுவில் நித்திய வெட்டை வரையிலான பகுதியை 6-வது பிரிகேட் அணியும் புல்லாவெளிப் பகுதி வரையிலான பகுதியை 7-வது பிரிகேட் அணியும் கைப்பற்றியது. பிரிகேடியர் விஜய விமலரத்தினா அவர்கள் முள்ளியானிலுள்ள அவரது போர்க் காலத் தலைமைப்பீடத்திலிருந்த வேளையில் விடுதலைப் புலிகளின் மூன்று எறிகணைகள் அவரது தலைமையகத்தின் முன்னால் இருமுறை விழுந்தபோதும் மயிரிழையில் தப்பினார். அவருக்குக் காப்புக் கொடுத்தவண்ணம் இருந்த அவரது மெய்க்காவலர் கோப்ரல் உபாலி காயமடைந்தார்.

6-வது பிரிகேட் அணியிலிருந்து பிரிகேடியர் விமலரத்தினா கேணல் வியனகேயுடன் பீரங்கிப் படைப்பிரிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, எறிகணைத் தாக்குதல்களிலிருந்து அவருக்கு பாதுகாப்பு அளித்துக்கொண்டு சென்ற லெப்.கேணல் சிறிமுதனாயக்காவின் வாகனத்துக்கு முன்னாகச் சென்ற பவல் வாகனம் தாங்கி எதிர்ப்பு கண்ணி வெடியில் அகப்பட்டு சிதறுண்டது.

லெப்ரினன்ட் கேணல் பரமி குலத்துங்கா தலைமையிலான 6-வது கெமுனுகாவற்படை பொத்துநாகனிலுள்ள தீவிரவாதிகளின் பலம் பொருந்திய ஒரு ஊரை அடுத்தநாள் கைப்பற்றியது. கேணல் அன்ரன் விஜேந்திரா தலைமையிலான 2வது பிரிகேட் முள்ளியானிலிருந்து புல்லாவெளி மற்றும் பொத்துநாகன் வரையிலான பகுதியைக் கடந்து சென்று, லெப்ரினன்ட் கேணல் மோகன் றொக்கவூட் தலைமையிலான முதலாவது சிறிலங்கா இலகு காலாட்படையுடன் இணைந்து கொண்டது. இந்த

நடவடிக்கை மூலம் வடக்கிலிருந்து தெற்குக்குச் செல்லும் தரைப் பாதையை துண்டிக்க வேண்டுமென்ற தனது முதலாவது நோக்கத்தை அதிரடிப்படை நிறைவேற்றிக் கொண்டது.

இந்த நடவடிக்கையின் போது பலர் காயப்பட்டதுடன் 37பேர் கொல்லப்பட்டதாக தீவிரவாதிகளின் ஒலிபரப்பு கூறுகின்றது. வான்படையினர் தீவிரவாதிகளின் ஒரு பஜிரோ மோட்டார் வாகனம், இரண்டு லொறிகள், 7 தளங்கள் ஆகியவற்றை அழித்துள்ளனர். புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட பீரங்கிப் படகுகளிலிருந்து தூர இடங்களிற்குச் செல்லக்கூடிய சுடு கலன்களை, உபயோகித்து பயனுள்ள உதவியைக்கடற்படையினர் வழங்கியுள்ளனர்.

காப்புப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக திரு.மாத்தயா அவர்களுடன் இயக்கச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவரான திரு.நித்தியா அவர்களும், விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணப் பகுதிக் தலைவரான திரு.தினேஸ் அவர்களும் அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள போராளிகளின் பலத்தை 1000 பேராளிகளாக கூட்டி இந்த சமரில் ஈடுபடுத்தியதாக தீவிரவாதிகளின் செய்திப் பரிமாற்றத்தைக் குறுக்கீடு செய்து கேட்டபொழுது அறியமுடிந்தது. யாழ்ப்பாண நகரத்தின் காப்பு திரு.பால்ராஜ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து முதன்மை நிலப்பரப்பிற்கு செல்லும் பாதையை தடைசெய்ய மேற்கொண்ட முயற்சி முடிவுறுவதற்கு முன்பாக திரு. பிரபாகரன் அவர்கள் மாங்குளம் காடுகளுக்குச் சென்றுவிட்டதாக அறிய முடிகின்றது.

இராணுவத் தளபதியான லெப்ரினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா அவர்களும், கடற்படைத்தளபதியான வைஸ் அட்மிரல்கிலான்சி பெர்ணாந்து அவர்களும் மற்றும் இந்த நடவடிக்கையை வழி நடாத்திச் சென்ற மற்றைய மேலாளர்களும் இராணுவம் வெற்றியை ஈட்டிய நாளன்று அங்கு வருகை தந்து இந்த நடவடிக்கையின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தனர்.

ஆனையிறவு ஏரி வரையுள்ள பகுதிகளை விரிவுபடுத்தல்:

பின்னர் 6வது பிரிகேட் அணியின் துணையுடன் லெப்ரினன்ட் கேணல் மதுரவிஜேவிக்கிரமா அவர்களின் தலைமையில்


தேர்ந்த

முதலாவது கெமுனு காவற்படையினர் தீவிரவாதிகளால் கைவிடப்பட்ட உழவு இயந்திரமொன்றையும். ஈருளிகளையும் கைப்பற்றியதுடன் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை ஆனையிறவு ஏரி வரைக்கும் விரிவுபடுத்தினார்கள்.

பெரிய பச்சிலைப்பள்ளியையும் கோயில் வயலையும் கைப்பற்றியமை:

தீவிரவாதிகள் எதிர்பார்த்தது போல் வடக்குப் பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலுமிருந்து இராணுவத்தினர் இருமுனைத் தாக்குதலை மேற்கொண்டனர். முதலாவது தரைப்படை அணியின் உதவியுடன் 7வது பிரிகேட் தாக்குதலை மேற்கொண்டு பள்ளமும், கால்வாயுமுள்ள அணைக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருந்த தீவிரவாதிளின் முக்கியமான தளமொன்றைக் கைப்பற்றியது.

கால்வாய் அணைக்கட்டின் மேற்குக் கரையோரத்தில் தீவிரவாதிகள் தயார் நிலையில் இருந்தனர். முதலாவது கஜபா அணி இரவோடிரவாக அணைக்கட்டைக் கடந்து தீவிரவாதிகள் முற்றிலும் எதிர்பாராத வகையில் அவர்களைத் தாக்கி அவர்களின் தளத்தை அழித்தது. கஜபா அணி தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபட்டிருந்த வேளையில் 7வது பிரிகேட் அணி தாக்குதலை ஆரம்பித்து கோயில் வயலிலுள்ள தீவிரவாதிகளின் தளத்தை மறுநாள் கைப்பற்றியது.

இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பு இருந்ததுடன் அவர்கள் தாங்கிகளை அழிக்கும் குழுக்களையும் ஈடுபடுத்தியிருந்தார்கள். இருப்பினும் 7வது பிரிகேட் அணி தங்கள் குறிக்கோளை நிறைவேற்றியது.

படையினர் நிலை கொண்டுள்ள பகுதியை விரிவாக்கல்:

6வது கஜபா படை அணியினரும், 6வது கெமுனு காவற்படை அணியினரும், 6வது பிரிகேட் அணியினரும், கோயில் வயலிலிருந்து அகழியும், அணையும் உள்ள பகுதிவரையுள்ள தடைகளை அகற்றி தங்களுடைய தளம் உள்ள பகுதியை விரிவுபடுத்தினர். கடற்கரைத் தளத்திற்குப் பொறுப்பானவரும், 4வது பிரிகேட்டின் தளபதியுமான பிரிகேடியர் லால் வீரசூரியா, எஸ்.எஸ்.ஜி.(S.S.G) அணியைச் சேர்ந்த மேஜர் பாகுர் மோர்

சத் அவர்களுடைய உதவியுடன் யூல் கோட்டையிலிருந்து (Yul Fort) வடக்குப் பக்கமாகவுள்ள பகுதியை விரிவுபடுத்திய அதேவேளையில் கடற்கரைத் தளத்தினது காப்புக்கும் பொறுப்பாகவிருந்துள்ளார்.

சங்கத்தார் வயலைக் கைப்பற்றியமை:

பச்சிலைப்பள்ளிப் பகுதிக்குச் செல்லும் கேந்திர நிலையத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தீவிரவாதிகளின் முக்கியத்துவம் வாய்ந்ததுமான தங்ககம் சங்கத்தார் வயலில் உள்ளது. தீவிரவாதிகள் மூன்று மணிநேர சமரின் பின் இதைக் கைவிட்டுச் சென்றதால் கேணல் அன்ரன் விஜேந்திராவின் தலைமையிலான 2வது பிரிகேட் படையணி இதைக் கைப்பற்றி தங்களால் கைப்பற்றப்பட்ட பகுதிக்குச் செல்லும் முக்கியமான பாதைகளை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது, பின்னர் 6வது பிரிகேட் படையணியினர் முன்னேறிச் சென்று ஏரி வரையிலுமுள்ள இடங்களில் உள்ள தடைகளை அகற்றினர். லெப்ரினன்ட் கேணல் சீவாலிவனிக சேகராவின் தலைமையிலான 3வது கஜபா படையணியினர் ஏரிக்கூடாக தொடர்பை ஏற்படுத்தினர்.

முதன்மை நிலப்பரப்பிலுள்ள தமிழமழம் (Thamilamalam) பச்சிலைப்பள்ளி ஆகியவற்றை இணைக்கும் பழைய கரைப் பாதை திருத்தப்படுகின்றது. இராணுவத் தளபதியும், கடற்படைத் தளபதியும் மற்றும் முப்படைகளையும் வழிநடத்திச் செல்லும் மேலாளர்களும் சமர் நடைபெற்ற பகுதிகளுக்கு வருகை தந்து இந்த சமரில் பங்குபற்றிய வீரர்களையும் மேலாளர்களையும் சந்தித்ததுடன், மேலும், கூடுதலான பெறுபேறுகளை அவர்கள் எய்தும் வகையில் உற்சாகப்படுத்திச் சென்றுள்ளார்கள்.

இயக்கச்சியைக் கைப்பற்றியமை:

குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் பலம் வாய்ந்த கோட்டைகளில் இயக்கச்சியும் ஒன்றாகும். இந்தப் பகுதிக்குள் உட்புகக்கூடிய எல்லாப் பாதைகளிலும் தீவிரவாதிகள் பலம் வாய்ந்த காப்பு அரண்களை அமைத்திருந்தனர். தாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளாலும், யொனி மிதிவெடிகளாலும், பாதைகளும், தரைகளும் நிரப்பப்பட்டிருந்தன. ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக நடாத்தப்பட்ட கடும் சமரின் பின் 6வது பிரிகேட் படையணியும், 6வது கெமுனு காவற்படையணியும் இந்தப் பகுதியைக் கைப்பற்றியது.



தேர்ந்த

பிரபாகரன் அதிரடிப்படையினரைக் கைப்பற்ற விடப் போவதில்லை எனக் கூறிய இந்தப் பகுதியை காப்பதற்காக தீவிரவாதிகள், எறிகணைகளை, பாரிய இயந்திரப் பீரங்கிகள் மற்றும், அருள் ஏவுகணைகளை உபயோகித்தார்கள். 6வது பிரிகேட் படையணி பலப்படுத்தப்பட்டதும் 2வது பிரிகேட் படையணி இயக்கச்சிக்கு வடக்காக கம்முதாவ கட்டடத் தொடரிலுள்ள தீவிரவாதிகளின் தளத்தைக் கைப்பற்றியது.

இக் கட்டடத் தொடரிலுள்ள வீடுகளை அதிரடிப் படையினர் உபயோகப்படுத்தாதவாறு தாங்கள் இங்கிருந்து பின் வாங்கிச் செல்லுமுன் தீவிரவாதிகள் இவைகளைக் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டுச் சென்றுள்ளனர். ஆனையிறவுக்கு குடிதண்ணீர் வழங்கும் முக்கிய நன்னீர் கிணற்றுத் தொகுதிகளை 2வது பிரிகேட் படையணி கைப்பற்றியதன் மூலம் படையினருக்கு பாரிய சிக்கலாக இருந்த குடிநீர்ச் சிக்கல் தீர்க்கப் பட்டுள்ளது. 6வது பிரிகேட் படையணியினரும் 6வதுகஜபா படையணியினரும் இயக்கச்சியின் மேற்குப் பக்கமாக முன்னேறி,ஆனையிறவிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறிவந்த லெப்ரினன்ட் கேணல்ஜயம்பதி விஜயரத்தின அவர்களின் தலைமையிலான 5வதுகெமுனு காவற்படைஅணியுடன் இணைந்தனர்.

கடற்படை நடவடிக்கைகள்:

திருக்கோணமலையிலிருந்து வந்த கிழக்குப்பிராந்திய கடற்படையைச் சேர்ந்த கொம்மடோர் மோகன் சமரசேகரா (Comeast) கப்ரின் அமரவீர (Copo) மற்றும் வடபிராந்திய கடற்படையைச் சேர்ந்த கொம்மடோர் மோகன் ஜயமகா (Comnorth மற்றும் கரையோர இறங்கு துறை நிலையத்தைச் சேர்ந்த கப்ரின் சரத் (Copo) கன்கேவா ஆகியோர் கடற்படை நடவடிக்கைகளுக்கு தலைமை. வகித்தார்கள். இராணுவத்தினரையும், அவர்களுக்குத் தேவையான பொருட்களையும், இராப்பகலாக ஓய்வின்றி ஏற்றிச் சென்று கடற்படை உதவியது. பீரங்கிப் படகுகளிலிருந்து கரையோரத்திலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீதும், கரையோரப் பகுதிகளிலும் தாக்குதலை மேற்கொண்டு கடற்படையினர், படையினருக்குப் பெரிதும் உதவினர்.

வான் நடவடிக்கை:

வான் நடவடிக்கைகள் வடக்குப் பகுதி வான்தளபதியான லிங்கொம்மாண்டர் சுனில்கப்ரால் அவர்களினதும்,

அவரின் உதவியாளரான சிறாந்த குணதிலகா அவர்களினதும் தலைமையில் வழிநடாத்தப்பட்டது. வான்படையைச் சேர்ந்த சியாமா செட்டி வானூர்திகள், வை-12 வேவு பார்க்கும் செஸ்ஸா வர்னூர்திகள், மற்றும் உலங்கு வானூர்திகள் அதிர டிப்படையினருக்கு வேண்டிய காப்பையும், உதவியையும் அளித் தன.

இரவுபகலாக இடைவிடாது வான் தாக்குதலை மேற் கொண்ட வான் படையினர் பெரும் எண்ணிக்கையான விடுத லைப்புலி வீரர்களை அழித்ததுடன், அவர்களுடைய 6வாகனங் கள், 12 பாரம் ஏற்றிச் செல்லும் வண்டிகள், 20உழவு இயந்தி ரங்கள் பல தளங்கள் மற்று அவர்கள் ஒருங்கிணையும் இடங் கள் ஆகியவற்றை அழித்து அதிரடிப்படையினரின் நடவடிக் கையை இலகுவாக்கினர்.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமர் நடைபெற்ற இடங்களில் பீரங்கி பொருத்தப்பட்ட உலங்கு வானூர்திகளும், எப். ஜி. எஸ் களும் தாக்குதலை மேற்கொண் டதன் மூலம் சமர் நடவடிக்கைகளில் வான் படையினர் உத வினர். காயமடைந்த படையினரை அப்புறப்படுத்தல் மற்றும் வானிலிருந்து வேவு பார்த்தல் ஆகிய நடவடிக்கைகளிலும் வான் படையினர் இரவு பகலாக ஈடுபட்டிருந்தனர். பலாலிக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் வை - 8ரக வானூர்தி வெடித்துச் சிதறியது. வான் படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும்.

மருத்துவம்:

படையினருக்கு அண்மையாகவிருந்து சேவை செய்வதற் காக படைப் பிரிவினருக்கு உதவும் நிலையங்கள், காயமுற்றவர் களை ஒன்று சேர்க்கும் நிலையங்கள், காயப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் மருந்து கட்டும் நிலையங்கள், மற்றும் மருந்து கட்டும் முக்கிய நிலையம் ஆகியவற்றை கப்ரின் பிறபாத் இரத் னாயக்கா மற்றும் பொது வைத்திய சேவையிலுள்ள டாக்டர் களான கபிலா குணவர்த்தன, அனுரா சமரவீர ஆகியோரின் உதவியுடன் லெப்ரினன்ட் கேணல் ஹில்மன் த சில்வா மற்றும் சஞ்சீவ விஜயசிங்கா ஆகியோர் துப்பாக்கிச் சூடுகளைப் பொருட் படுத்தாது துணிவுடன் அமைத்திருந்தனர்.



தேர்ந்த

டாக்டர்கள் றோயி குணவர்த்தனா இடுமித்பெர்னாந்து. இலாசாந்த அமரசிங்க டி.சி.குணதிலக, பீரீஸ், மாகானாதா மற்றும் த சொயிசா ஆகியோர் பலாலி ஆதார மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்ட காயப்பட்ட படையினரைப் பேணினர்.

நடைமுறைப்படுத்தும் பணியாட்கள்:

இராணுவத் தேவைகளை முழுமை செய்யும் நடவடிக்கைகளில் லெப்ரினன்ட் கேணல் பசில் பீரீஸ் ஈடுபட்டிருந்த வேளையில் கேணல் ஜீ.எஸ், கேணல் நிகால் ஜயக்கொடி, மேஜர்கள் நாளின் த அல்விஸ் மற்றும் ரஞ்சித் ரூபசிங்க ஆகியோர் தலைமைப்பீடத்தில் யுத்திகளைத் திட்டமிடும் இரண்டாவது பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்தனர். லெப்ரினன்ட் கேணல் சிறிமுதனாயகா, சுனில் தென்னக்கோன், உதய ஆரியரத்னா, யோன் சேனவீர ஆகியோரின் தலைமையிலான கவசவாகனப் பிரிவு பீரங்கிப் பிரிவு, பொறியியல் பிரிவு, சமிக்கைப் பிரிவு ஆகியவற்றின் உதவியுடன் லெப்ரினன்ட் கேணல் குப்பன் பேரறான், வசந்த பமுனுகம ஆகியோரின் தமைமையிலான பிரிகேட்டுகளின் உதவியுடனும் லெப்ரினன்ட் கேணல் சாமன் குலதுங்க அதிரடிப்படையின் தலைமையகப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

இராணுவத் தேவைகள்-:

லெப்ரினன்ட் கேணல் லங்கா ஜயரத்தினாவின் தலைமையில் அதிரடிப்படை நிர்வாகப் பகுதியொன்றை கரையோரக் காப்பிடத்தில் அதிரடிப்படைப்பிரிவு அமைத்தது. தங்களுக்கென தனியான நிர்வாகப் பகுதிகளைக் கொண்ட ஒவ்வொரு பிரிகேட்களும் தாங்கள் முன்னேறிச் சென்றபோது முன்னணிக் காப்புப் பகுதியை அமைத்தது. இராணுவத் தளபதியின் பணிப்பின் பேரில் படையினர் யாவருக்கும் சூடான உணவு ஒவ்வொரு நாளும் வழங்கப்பட்டது. பிரிகேட் நிர்வாகப் பகுதிகள் லெப்ரினன்ட் கேணல் கீர்த்தி தம்மிதா, மேஜர் சுர்சா வீரதுங்கா மற்றும்மேஜர் திலகரத்தினா ஆகியோரின் தலைமையிலிருந்தது.

விழுந்து நொருங்கிய வை-8 ரக வானூர்தியைத் தேடுதல்

இயக்கச்சியைக் கைப்பற்றியவுடன், நொருங்கிச் சிதறிய வை-8 ரக வானூர்தியைத் தேடுவதற்காக 7வது பிரிகேட் அணியை அதிரடிப்படையினர் ஈடுபடுத்தினர். வானூர்தியை

இரண்டு துண்டுகளாகக்கண்டு பிடித்த படையினர் ஸ்குவாட்டன் லீடர் பைசால் கசீர் மற்றும் பைலட் லெப்ரினன்ட் பிரியந்த பெர்னாந்து ஆகியோரின் உடல்கள் உட்பட 10 வான் படையினரின் உடல்களை மீட்டெடுத்தனர்.

நடவடிக்கை முடிவுற்றது:-

சமரை மேற்கொண்ட 3பிரிகேட் படையணிகளுடன், கைப்பற்றிய இடங்களை அமர்த்தப்பட்ட ஒரு பிரிகேட்படையணியும், பிரிகேடியர் விஜயவிமலரத்தினாவின் தலைமையில் இராணுவ நடவடிக்கையை திட்டமிட்டபடி 10 நாட்களுக்குள் நிறைவேற்றியுள்ளது. ஈழப்போரில் சிறிலங்கா இராணுவம் பெற்ற பாரிய வெற்றிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த வெற்றியின் மூலம் கூட்டு காப்பு படைத் தலைமைப்பீடம் வகுத்த முக்கிய திட்டம் நிறைவேற்றப்பட்டதுடன், 60 கிலோ மீற்றருக்கு மேலான சுற்றுவட்டாரத்தைக் கொண்ட நிலப்பரப்பும் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

விடுதலைப் புலிகள் பாரிய இழப்பைச் சந்தித்ததால், அவர்களுடைய போராளிகள் சண்டையைக் கைவிட்டார்கள். 2வது பலவேகய இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப் புலிப் போராளிகளில் 700பேர் கொல்லப்பட்டதாகவும் 1500க்கு மேற்பட்டோர் காயமுற்றதாகவும், நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. சிறந்த தலைமைத்துவம், உயர்ந்த மனோதிடம், சிறந்த நிர்வாகம், திறமையான திட்டம், தரை நடவடிக்கையைக் கொண்டு நடாத்தும் திறமை ஆகியனவே இந்த வெற்றிக்குக் காரணமாகும்.

இந்த நடவடிக்கையில் பெரிய வெற்றியை ஈட்டிய காப்புப் படையினர் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதற்கு மேலும் பல தாக்குதல்களை நடாத்த ஆயத்தமாகவிருக்கின்றனர்.

இலங்கை இராணுவத்தை எதிர்க்கும் விடுதலைப் புலிகளின் ஆற்றலில் நம்பிக்கை இழந்த யாழ்ப்பாண மக்கள் அவர்கள் கொடுமையிலிருந்து தாம் விடுபடும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

# நெடுங்கேணியில் ஆதிக்க நிலையில் இருந்த ரோந்துப்படை பதுங்கித்தாக்கப்பட்டது

மே - 1989

( Assignment - சர்தேஸ் பாண்டே )

நெடுங்கேணி வன்னிக்காடுகளின் நடுவில் இருக்கும் ஒரு சிறிய ஊர். அதன் பரந்த ( காடுவெட்டி ) வெளியாக்கப்பட்ட நிலப்பரப்புக்கள் பண்ணைகளாக மாறிவருகின்றன. வடக்கில் ஒட்டிசுட்டான் முல்லைத்தீவுக்குச் செல்லும் பாதையும், தென் மேற்கில் வவுனியாவுக்குச் செல்லும்பாதையும், தென்கிழக்கில் சிங்களக் குடியேற்றப் பகுதிக்கான வழிகளையும், வட கிழக்கில் நித்திகைக்குளக்காடுகள், சிறிது தூரம் சென்றபின் கால்நடைப் பாதையாக மாறும் பாதை ஆகியன ஒன்றுசேரும் சந்தியில் இது அமைந்துள்ளது. இவ்வூர் நெடுநாட்களாக மூடப்பட்டுள்ள இரு ஆலைகள், பாடசாலை, மருத்துவமனை, பாடசாலைக்கருகாமையில் ஒரு சிறிய சந்தை ஆகியவற்றைக் கொண்டதாக இருந்தது. சந்தைகூட வீடுகளையும் குடிசைகளையும் சுற்றுப்புறத்தில் கொண்ட கூடலில் ( சந்தி ) தான் அமைந்திருந்தது. சந்தைக்கு வடக்கில் இரு கிலோ மீற்றர் தொலைவில் பெருந்தொகையிலிருந்த சமாதானப் படையினரின் தங்ககம் அமைந்திருந்தது. முகாமை நோக்கியபடி இருந்த உயரமான குளக்கட்டுடன் கூடிய குளம் சந்தைக்கு வடக்கில் இருந்தது.




88லும் 89 முற்பகுதியிலும் நடவடிக்கைகளின் போது நெடுங்கேணியைப் பகலிலும் இரவிலும் ஆதிக்கம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் பிறகு சந்தையை 'ஆதிக்கத்தின்கீழ்' வைத்திருப்பதென்பது வழமையானதாகவும் மாற்றலாகி



தேர்ந்த

PUBLIC LIBRARY

வரும் பட்டாலியன் கட்டாயம் செய்யவேண்டிய கடமையாகவும் ஏற்பட்டது. அதற்குக் காரணம் மாற்றலாகிச் செல்லும் பட்டாலியன் பாரம் கொடுக்கும் அறிக்கைகளில் அவ்விதம் செய்யவேண்டும் என்று எழுதுவதாலாகும். ஆகவே புதியதாகவந்த பட்டாலியன் வழமையாக நடந்துவந்த கடமையைச் செய்யவேண்டியதாகி இந்நடவடிக்கை அவ்விதம் நடத்தப்படுவதற்கு என்னகாரணத்திற்காக என்று ஒருமுறையாவது கேட்டறியாமல் அதைத் தொடர்ந்து செய்து வந்தது இதன் காரணமாக புதிய பிரிவின் ரோந்துப்படையினர் பழைய முறையிலேயே முன்பாவித்த பதுங்குகுழிகளை முன்னர் பாவிக்கப்பட்ட அதே அளவு நேரத்துக்குப்பாவித்தும் பழைய முறையிலேயே மக்களை 'சோதனை' செய்தும் வந்தனர் புதிய பிரிவினர் செய்த ஒரு மாற்றம் சந்தையடியில் இருந்த முன்னர் பாவிக்கப்பட்ட இருமாடிக்கட்டிடத்தைப் பாவிக்காமல்விட்டு அதற்குப்பதிலாக சந்தையின் நடுப்பகுதிகளில் அமைந்திருந்த நிலத்தோடு கூடிய பதுங்கு குழிகளைப் பாவித்தமையுமாகும். இரண்டாவது மாற்றம் அவ்விதம் பாவிப்பதற்கு முன்னர் முற்றுமுழுதாக அருகாமையிலிருந்த பாடசாலையையும் மற்றும் கட்டிடங்களையும் (இவற்றுள் கிடங்குகளும் பதுங்குகுழிகளும் அமைக்கப்பட்டிருந்தன) பரிசோதனை செய்யாது விட்டமையாகும். மூன்றாவது மாற்றம் காலப்போக்கில் சந்தை, பாடசாலை மற்றும் கட்டிடங்களில் ஏற்பட்ட சனநடமாட்டத்தின் அதிகரிப்பையோ அல்லது குறைவையோ பற்றி அறியவிருப்பமில்லாமல் விட்டமையாகும். நெடுங்கேணி கூர்மைமிக்க மாறும் தன்மைகொண்ட தொல்லைகொடுக்கும் இடமாகவிருந்தபோதும் படைப்பிரிவினர்கள் மாதக்கணக்காக ஒரு சிறு சிக்கலையும் அங்கு எதிர்கொள்ளவில்லை.

நாள்தோறும் நடவடிக்கை ஒழுங்கு முறைப்படி காலைக் கடமையில் ஒரு இளநிலை படை மேலாளரின் தலைமையின் கீழ் சுமார் 20 படையினர் பொழுது புலர்ந்தபோது ரோந்துசெல்ல தங்ககத்தைவிட்டு வெளிப்பட்டு ஆலையை நோக்கிச் செல்லும் பாதையால் சென்று பின் வவுனியாவுக்குச் செல்லும் பாதைக்கு திரும்பினர். பின்னர் அவர்கள் தொடர்ந்து நடந்து சந்தைக்குள் நுழைந்தனர். அங்கு இருந்த கிடங்குகளுக்குள்ளும் பதுங்கு குழிகளுக்குள்ளும் பிரிந்து சென்றனர். அதற்குள் இருந்து கொண்டு அப்பகுதியை மேற்பார்வையிடும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். பதுங்கு குழிகளில் அநேகமானவை அருகாமையிலிருந்த பாடசாலையில் அமைந்திருந்தன. விடுமுறைகாலமாதலால் பாடசாலை மூடப்பட்டிருந்தது. கதவுகளும் பலகணிகளும் வெளிப்புறமாகப்

பூட்டப்பட்டிருந்தன. சந்தைக்கு வந்த மக்களும் குறைவு. சில கடைகள் திறக்கப்படவில்லை. சாதாரணமாக அவைகள் திறக்கப்பட்டிருக்கவேண்டும்.

காலைச்சாப்பாட்டுவேளை திடீரென பாடசாலைக் கதவுகளும் பலகணிகளும் திறந்து கொண்டன. கைக்கெட்டிய தூரத்தில் இருந்து கிடங்குகளையும் பதுங்கு குழிகளையும் நோக்கி சூடுகள் வந்தன. அதன் பின்னர் பதுங்கு குழிகளுக்குள் எறி குண்டுகள் வீசப்பட்டன. பாடசாலைக்கு வெளியிலிருந்த சிலர் திருப்பித்தாக்க எத்தனித்தபோது இரண்டுமாடிக் கட்டிடத்தில் இருந்த போராளிகள் கீழ்நின்றவர்கள் மீது மிகமோசமாகச் சுட்டார்கள். நடமாட்டத்தில் இருந்த யாவரும் தாக்கப்பட்டனர். விலகிச் சென்றிருந்த இரண்டே அங்குலப் பீரங்கிப் பிரிவு இன்னமும் பாடசாலைக்குப் பின்னால் தான் நின்றது. அதுதான் தாக்கப்படாததொன்றாகும். அது விரைவாக மறைவு எடுத்து சில குண்டுகளை வீசியது. அப்போது அவர்களும் தாக்கப்பட்டார்கள். மிகக்குறைந்த சிலரே மறுபக்கத்திலிருந்த சில கட்டிடங்களுக்குப் பின்னால் சென்று தொடர்பற்ற முறையில் சுட்டுக்கொண்டிருந்தார்கள். வெளிப்புறத்தைத் தவிர சந்தைக்குள் சண்டை முடிந்துவிட்டது.

தங்ககத்தில் இருந்த படையணியினர் வேகமாக நெற்காணிகளூடாக பாடசாலைக்கு துணைக்கு வரமுயன்றனர். இப்படி நடக்குமென போராளிகள் சரியாக எதிர்பார்த்திருந்தனர் துணைப்படைக்கு நல்ல வரவேற்புச்சூடு கொடுக்கப்பட்டது. அவர்களால் தலையை நிமிர்த்த முடியவில்லை. ஆதிக்க நிலையில் உயர்ந்த குளக்கட்டுகள் மீதுநின்று உதவிக்குச் சென்ற துணைப்படையைச் செயலிழக்கச் செய்த போராளிகளை நோக்கி தங்ககத்தில் இருந்து பீரங்கிகளால் சுடப்பட்டது. இத்தாக்குதல் போராளிகளுக்கு களிப்பை தந்தது போலும் அவர்கள் காட்டெல்லையில் இருந்து தங்ககம்மீது தானியக்கித் துப்பாக்கித் தாக்குதலை நடத்தினார்கள். ஆனால் அச்சூடுகள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பாவனையாகவே நடத்தப்பட்டன. அரை மணித்தியாலத்தின் பின்னர் போராளிகள் தாங்கள் தொடங்கியதுபோல் விரைவில் சுடுவதை நிறுத்திக்கொண்டு கொல்லப்பட்ட படையினரதும் இறந்த போராளிகளினதும் காயப்பட்ட போராளிகளினதும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் கரைந்து விட்டார்கள்.



தேர்ந்த

இந்த பட்டாலியன் எந்தவித பயிற்சியைப் பெற்றிருந்தது? சிறிலங்காவின் போர்க்களத்துக்கு வருமுன் அது எவ்வகையான பயிற்சிகளை முன்னேற்பாடாக பெற்றிருந்தது? அதனைச் சிறிலங்காவிற்கு அனுப்புமுன் அதன் முன்னைய டிவிசன் அல்லது பிரிகேட் தளபதிகள் அப்பட்டாலியனின் பயிற்சியில் எவ்வித கவனம் செலுத்தியிருந்தார்கள்? உண்மையில் அவை தமது முன்னைய நிலையங்களில் நிலையக் கடமைகள் குளிப்பந்தாட்ட அரங்குகள், விளையாட்டுக்கழகங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்ற சமாதானகால முளை வெறுமை கொண்ட அர்த்தமற்ற கருத்தற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்கள். 89 முற்பகுதியில் கொண்டு வரப்பட்ட வேறு சில படைப்பிரிவினரும் மேற்கூறியதுபோன்ற நடவடிக்கையையே எடுத்துக்காட்டினர். படை அணியின் அல்லது பிராந்தியத்தளபதிகளின் சுயநல, சமாதானகால தேவைகளுக்கு மாறாக எதிர்த்து தலைநிமிர்ந்து நின்று தமது துருப்பினருக்கு பயிற்சி அளித்த தளபதிகளும் அவர்களது பிரிவுகளும் திறமையாகச் செயல்பட்டனர். இழப்புக்களைக் குறைத்து எதிரியைத் தேடிச் சென்றனர். புதிதாகக் கொண்டு வரப்பட்ட அணிகள் கடமையைச் சரிவரச் செய்யாது புத்திசாலித் தனமற்றவகையில் பாதிப்புக்கு உள்ளாகினால் அதன்பழி அவ்வித துணைப்பிரிவுகள் எந்தப்படை அணி அல்லது பிராந்தியப்படை அணித் தளபதிகளின் கீழ் இருந்து வந்தனவோ அவர்களின் தொழிற்துறைசாராத அக்கறையற்ற தன்மையினால் வந்தது என்று அவர்கள் மீதே பழிசுமத்தப்படும். இது 89 முற்பகுதிகளில் கூட நடந்துவந்த ஒரு தொடரான நம்பிக்கைமோசடி, மனவருத்தம்தரும் சொரணையற்ற துறை சார்பற்றசெயல்.

மனிதனே உண்மையான கடவுள். அவன் ஒருவன் மட்டுமே மனிதகுலத்தின் விடுதலையைத் தேடித் தரமுடியும்.

—லுட்விக் ஃபாயர்பாக்.

யாழ்ப்பாணப் பணி

# வலிகாமக் கரையோர இடைநிலைப் பகுதிகளில் சுற்றிவளைத்துத் தேடுதல்

ஜனவரி 1988

(Assignment சர்தேஸ் பாண்டே)

*ஜனவரி மூன்றாம் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த எங்களுக்கு யாழ். குடாநாட்டின் வலிகாமப் பிரிவின் கரையோர இடைநிலைப் பகுதிகளில் பொதுவாக கீரிமலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, அளவெட்டி, மாகியப்பிட்டி, சங்காணை, தொல்புரம் பிரதேசங்களில் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவரது உயர்மட்ட சகாக்களும் நடமாடுகிறார்கள் என்ற அதிமுக்கிய தகவல் சென்னையிலிருந்தும் தில்லியிலிருந்தும் தரப்பட்டது. வலிகாமத்திலிருந்த படை அணியினருக்கு புலிகளின் தலைவர்களையும் அவ்வியக்கத்துடன் இணைந்து செயற்படும் செயற்பாட்டாளர்களையும் கைதுசெய்யும்படியும் அல்லது கொல்லும்படியும் போர் ஆயுதங்களைக் களையும்படியுமான பணி கொடுக்கப்பட்டது. இந்நடவடிக்கை ஜனவரி 22இல் இருந்து 25 வரையான நாலு நாட்களில் நடத்தப்படவேண்டுமெனவும் திட்டமிடப்பட்டது.*

*பிரிகேட் படை அணியில் ஐந்து பட்டாலியன் காலாட் படைப் பிரிவுகள் இருந்தன. அவற்றில் மூன்று அவர்கள் ஏற்கனவே இருந்த கடலோர இடைநிலைப் பகுதிகளில் மறுசீரமைக்*



தேர்ந்த




கப்பட்டன. தென்பகுதியிலிருந்த எஞ்சிய இருபகுதியிலிருந்தவர்களில் ஒவ்வொன்றிலிருந்தும் அரைவாசிக்கதிகமானோர் அங்கிருந்து எடுக்கப்பட்டு வடக்கில் குறிக்கோளுக்கு உள்ளாக்கப்பட்ட பகுதிகளில் திருப்பி அணிவகுக்கப்பட்டனர். இவற்றிற்கு மேலதிகமாக அயலில் இருந்த பிரிகேட் படை அணிகளிலிருந்து முழுமையாக இரு பட்டாலியன் காலாட் படைப்பிரிவுகளும் ஒரு கலப்புப் பட்டாலியன் காலாட்படைப் பிரிவும் வரவழைக்கப்பட்டு திருப்பி அணிவகுக்கப்பட்டன. டிவிசனின் வளங்களிலிருந்து ஒரு குவாட்ரன் கவசவாகனப்படை அணிப்பிரிவை

யும், B.M.P. க்களை உள்ளடக்கிய இயந்திரப் பிரிவையும் கொண்டதான படைத்தொகுதியும் வழங்கப்பட்டது. கடற்கரைப் பகுதியைக் கண்காணிப்பில் வைத்திருப்பதற்காக ரோந்துப் படகுகளோடு கூடிய இருகடற்படைக் கப்பல்கள் காரைநகரிலும் (சிறீலங்கா கடற்படைத் தளம்) காங்கேசன்துறையிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. Mi 25 ரக அக்பாருடன், சித்தை (ஆயுதம் தாங்கிய கனமும் பாரங் குறைந்ததுமான இரு) ஆகிய உலங்கு வானூர்திகளுடன் ஒரு Mi 8 ரக உலங்கு வானூர்தியும் துருப்புக்களை தந்திரோபாய நடவடிக்கைகளுக்காக ஏற்றிஇறக்குவதற்கு ஏற்ற முறையில் வழங்கப்பட்டிருந்தன.

கரையோர இடைநிலைப் பகுதிகளிலும் அதன் பின்புற நாட்டுப் பகுதிகளில் அதாவது மேற்கில் தொல்புரத்திலிருந்து கிழக்கில் கீரிமலை வரையிலான பகுதிகளில் காலாட்படைப் பிரிவுகளான பட்டாலியன்கள் ABC பிரிவுகள் ஏற்கனவே நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தன. நாட்டுப்புறப் பகுதி சுழிபுரம், சித்தன்கேணி, சண்டிலிப்பாய், அளவெட்டி, மாவிட்டபுரம் ஊடாக நீண்டிருந்தது. இது தொல்புரத்திலிருந்து சண்டிலிப்பாய், கீரிமலை வரை சென்று வெளிப்புற தடுப்பு எல்லையாக இருந்தது. அவ்வெல்லையில் பட்டாலியன் Fஉம் வடமராட்சி பிரிகேட் படை அணியின் G, H பட்டாலியன் பிரிவுகளும் தென்மராட்சி பிரிகேட்படை அணியின் பட்டாலியன் Kஉம், வலிகாம பிரிகேட் படை அணியின் பட்டாலியன் Bஉம் நிலைகொண்டிருந்தன. கடற்கரையோரப் பகுதியில் காங்கேசன்துறையிலிருந்து கீரிமலை, மாதகல் வரை தாக்குப்படைப் பிரிவால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது. ஐயப்பாட்டுக்குரிய பகுதிகள் என்று கருதப்பட்டவற்றை சுற்றியுள்ள உள்தடுப்பு எல்லைச் சுற்றிவளைப்பு பட்டாலியன் Aயினால் கண்காணிக்கப்பட்டது. உள்சுற்றிவளைப்புக்குள் தேடுதல் வேலைகள் வலிகாம பிரிகேட் படை அணியின் பட்டாலியன் E செய்தது. அத்துடன் தத்தமது நடவடிக்கைப் பொறுப்புக்குள் அமைந்த பிரதேசங்களில் ஐயப்பாட்டுக்கு உள்ளாகிய இடங்களில் தேடுதல் நடவடிக்கைகளைச் செய்வதற்கு கரையோரப் பகுதியில் நிலைகொண்டிருந்த மூன்று பட்டாலியன்களும் படையினரைத் தந்து உதவவேண்டும்.

நிலப்பரப்போ பெரிது ஏறக்குறைய 15 கிலோ மீற்றர் நீளமும் 10 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. அப்படியான இப்பிரதேசத்தில் பிரபாகரனையும் அவரது தோழர்களையும் தேடுவது

வைக்கோற் போரில் ஊசியைத் தேடுவதென்ற பழமொழிக்கு ஒப்பான மிகக் கடினமான வேலை. தளத்தில் மக்களின் நடவடிக்கைகள் போராளிகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஐயப்பாட்டுக்குள்ளான ஒளிந்திருக்கும் இடங்கள், தங்கி ஆறியிருக்கும் இடங்கள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைக்கின்றன. இவை பின்னர் 'நம்பக்கூடியவை' என்றும்' மிகவும் நம்பக்கூடியவை' என்றும் பிரிக்கப்படும். 'நம்பக்கூடியன' என்ற பகுதிகள் அந்தந்த உள்புறத் தடுப்பு எல்லைகளில் உள்ள பட்டாலியன்களால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்படுகிறது. 'மிகவும் நம்பக்கூடியவை' என்ற பகுதிகள் மேலும் சுற்றிவளைக்கப்பட்டு வேறொரு பட்டாலியன் பிரிவினால் தேடுதலுக்கு உள்ளாக்கப்படும். துருப்புக்களும், கவசவாகனங்களும் இரவோடிரவாக நகர்த்தப்பட்டு ஜனவரி 21/22ந் திகதி இரவு நிலைகள் எடுக்கப்பட்டன. சீரான ஒழுங்குமுறையில் ஒரு தொங்கலிலிருந்து மறு தொங்கல்வரை தேடுதல் நடாத்தப்பட்டது.

அடுத்த நான்கு நாட்களாக ஒவ்வொரு வீடும், குடிசையும், வயல், புதர்க் காடு, புதர்வேலி என்பவை ஒன்றுக்கு இரண்டு தடவை தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன. கண்டிப்பான முறையில் மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆட்காட்டிகள் பெருமளவில் உபயோகிக்கப்பட்டனர். ஒவ்வொரு குடிமகனும் முற்றுமுழுதாகச் சோதனைக்காளாகினான். தேடுதலில் ஐந்து தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் எதிர்பாராத முறையில் ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கொல்லப்பட்டார். கைதானவரில் இருவர் உபபிரிவுத் தலைவர்கள். கைப்பற்றப்பட்ட பொருட்களில் ஒரு கைத்துப்பாக்கி, ஒன்பது கையால் வீசும் எறிகுண்டுகள், 45 வெடிவைக்கும் திரிகள், ஒரு கிலோகிறாம் பெக் வெடிமருந்து பியூஸ் துண்டுகள், மூன்று சைனைட் குளிகைகள் ஆகியன அடங்கும்.

இதிலிருந்து தெரிந்துகொள்ளக்கூடியது என்ன? இந்த நடவடிக்கைக்காக பிரிவின் ஒரு மூலைக்கு ஒரு டிவிசனின் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமானோர் குவிக்கப்பட்டனர். இதற்காக மற்றைய பிரிகேட்களிலிருந்த பல பட்டாலியன்கள் அங்கு கொண்டுவரப்பட்டன. அவ்விதம் செய்ததால் அவ்வப்பகுதிகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளால் ஏற்படும் இடருக்கும் சில இடங்களிலிருந்து படைகள் ஒருவாரத்துக்கு மேலாக விலகியிருப்ப

தால் ஏற்படும் ஆபத்துகும் உள்ளாகவேண்டியும் ஆகியிருக்கலாம் இந்நடவடிக்கை நாம் விரும்பினால் எங்கென்றாலும் எந்நேரத்தி லென்றாலும் பெருந்தொகையான படைகளை நகர்த்தவும் அவர் களை ஒரு இடத்தில் குவிக்கவும் முடியும் என்பதை போராளி களுக்கும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது. 1988 ஜனவரி மாதத் தில் அந்த ஒரு மூலைக்குள் எமது டிவிசனில் இருந்த 2ப பட்டா லியன்களில் 8 பட்டாலியன் படையினரை குவித்திருந்தோம்.

மூத்த தலைவர்கள் இருகிறார்கள் என்ற புலனாய்வுத் தகவல் முழுமையானதல்லாவிட்டாலும் நாங்கள் அதைத் தட்டிக் கழிக்கக் கூடியவர்களாக இருக்கவில்லை. ஆகவே நடவடிக்கை யின் முடிவில் ஒரு சிலவற்றைத் தவிர வேறொன்றும் எமக்குக் கிடைக்கவில்லை. அது ஒரு பயனற்ற நடவடிக்கையாகியது. வான் கண்காணிப்பு, வழமையான தரை நடவடிக்கைகள் போன்றவற்றை உபயோகிக்கவேண்டுமென்ற எண்ணம் எமக்குத் தோற்றவில்லை. எனக்குக் கீழ் பணியாற்றிய வலிகாமம் பிரி கேட் அணித் தலைமை அதிகாரி ''படித்த பாடங்கள்'' என்று தனது அறிக்கையில் எழுதும்போது ஒரு பயனுள்ள இலக்கைப் பற்றி உறுதியான தகவல் இல்லாது எடுக்கப்படும் இத்தகைய பாரிய நடவடிக்கைகள் முயற்சிசெய்த அளவுக்கு பயன்தராது இருக்கும் வளங்களைக் கூட நன்மை பயக்காத விதத்தில் திசை திருப்புவதாகவே முடியுமென்று நாசூக்காக குற்றம்சாட்டியிருந் தார். நான் அக்குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

எறிகின்ற கடல் காற்று
மனிதர்கள் அஞ்சார்
எதுவந்த தெனின் என்ன
அதை வென்று செல்வார்

**மகாகவி**

# தமிழரின் போர்மனப்போக்கு - தென் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் அதன் மூலங்களும் பரவல்களும்-(1)

- டி.பி.சிவராம் -

( லங்கா கார்டியன் - 1.5.92 )

தென் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் உள்ள தமிழ்த் தேசியவாதத்தை, இருதொகுதி எண்ணங்களையும், நம்பிக்கைக ளையும் கொண்டு விளக்கலாம்.

ஒன்று தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றின் தூய்மை தனித்தன்மை என்பது, மற்றது போரின் சிறப்புப் பண் புகளையும் சீர்மையான குறிக்கோள்களையும் மேம்படுத்திக் கூறும் தமிழ் மரபுவழித்தன்மை.

இவ்வெண்ணங்களும் நம்பிக்கைகளும் ஐம்பது அறுபதுக ளில் தென் இந்தியாவிலுள்ள திராவிட இயக்கத்துக்கு இந்தி எதிர்ப்பு தனிநாட்டுக் கோரிக்கைகளை முன்னெடுக்கும் முக்கிய சொற்றொடர்களைக் கொடுத்தன, அச்சொற்றொடர்களின் பாணியிலேயே 1956க்குப் பின் சிறிலங்காவில் தமிழ்மொழி உரிமைகளுக்கும் பிரதேச சுயாட்சிக்கும் ஆன தேசியவாதமும் முன்னெடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தேசியவாதமும் இதே இருதொகுதி எண்ணங்கள் நம்பிக்கைகள் ஆகியவற்றினூடாகவே வெளிப் படுத்தப்படுகிறது. ஆனால் விடுதலைப் புலிகளின் தமிழ்த்தேசிய வாதம் தொடக்கத்திலிருந்தே போர் மனப்பான்மையை அதாவது, போரின் சிறப்புப் பண்புகளையும் சீர்மையான குறிக்கோள்க ளையும் மேம்படுத்துவதே அவர்களின் முதன்மையான தனிச்சிறப் பம்சங்களாக உள்ளடங்கியிருந்துள்ளது.

நவீன இராணுவ கட்டமைப்பொன்றை கட்டி எழுப்புவதே புலிகள் கூறிக்கொள்ளும் குறிக்கோளாகும். ஒரு திறமைமிக்க முன்னேற்றமான இராணுவ நிறுவனமொன்றை உருவாக்குவதற் கான அவர்களின் முயற்சியில் போர் மனப்பான்மை என்ற அடிப் படைக்கருத்து முக்கிய பங்கெடுக்கிறது. ஆகவே வழமையிலுள்ள நவீன வழிமுறைகளான கட்டுப்பாடு, அமைப்பு, பயிற்சி ஆகிய வற்றுடன் விடுதலைப்புலிகள் தமது போராளிகள் நடுவிலும் தமிழ் மக்களிடையேயும் செயல்திறனும் மூர்க்கமும் கொண்ட போராட் டப் படையை வளர்த்தெடுத்து ஊக்கம் கொடுப்பது பண்டைய ஆற்றல் மிக்க இராணுவ மரபுவழியின் ஒரு பகுதி என்று மன தில் ஆழப்பதியவைத்து அக்கருத்துகளைக் கோட்பரப்புகை செய் கின்றார்கள்.

இம் மரபுவழியின் சிகத் தலையாய வெளிப்பாடாக புலிச் சின்னம் கருதப்படுகிறது. ''தமிழீழத்தின் தேசியச் சின்னமாக புலி இலச்சினையை பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு காரணம் உண்டு. புலி இலச்சனை திராவிட நாகரீகத்தின் அடித்தளத்தில் வேரூன்றியுள்ளது. தமிழர்களின் வீர வரலாற்றையும் தேசிய எழுச்சியையும் பிரதிபலிப்பதாக உள்ளது. தமிழரின வீரமரபுக ளின் அடிப்படையில் உருவாக்கப்படவுள்ள சுதந்திர தமிழீழத்தை பிரதிபலிக்கும் சின்னமாக எமது தேசியக் கொடி இருக்கும்.'' (விடுதலைப்புலிகள் பெப், மார் 1991 கட்டுரையிலிருந்து)

கல்வி, அரசசேவை, வியாபாரம் விவசாயம் ஆகியவையே தமது சமுகத்தின் தனிச்சிறப்புப் பண்பு என வழமையாக எடுத் துக்காட்டி வருபவர்களாக சிறிலங்காத் தமிழர்கள் இருக்கும் போது எவ்விதம் விடுதலைப் புலிகள் தமது போர் மனப்பான்மை திராவிட நாகரீகத்திலும் தமிழர் மரபுகளிலும் வேரூன்றியுள்ளது என வரையறுக்கக் கூடியதாக உள்ளது? தமிழ் உண்மையில், அர சியல்வாதிகளும் புத்தி ஜீவிகளும் சமுகத்தில் முன்னேறுவதற்கு

பொதுவாக இருந்த வழிகளுக்கு ஆபத்து வந்ததால்தான் போர் மனப்பான்மை உருவாகியது என்று கூறுகிறார்கள். தமிழரின் போர் மனப்பான்மை ஆராய்வுக்கு உட்படுத்தப்படாததானாலும் தமிழரின் பண்பாட்டிற்கும் தேசியத்துக்கும் முக்கிய வடிவத்தைக் கொடுப்பதால் தமிழரின் தனித்தன்மையை அவர்கள் தம் போராட்டப் பண்பால் விடுதலைப்புலிகளால் வரையறுத்துக் கூறக்கூடியதாயிருக்கிறது. இக்கட்டுரை தென் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் உள்ள தமிழர்களின் அரசியலை கீழ்க்காணும் கேள்விகளுக்கமைய ஆய்வுக்கு எடுக்கிறது.

அ) தமிழ் போர் மனப்பான்மை என்றால் என்ன?

ஆ) தென் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் அது தோன்றியதற்கும் பரவியதற்கும் காரணிகளாக இருந்த சமூக அரசியல் சூழ்நிலைகள் என்ன?

பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதவருக்கும் இடையிலான முரண்பாடு; தென் இந்தியாவிலுள்ள பிராமணரல்லாத உயர்மட்டத்தோரின் பிரித்தானிய சார்புப் பிராந்திய அரசியல்; தனித்தமிழ், சுயமரியாதை இயக்கங்கள்; மொழிவழித் தேசியம்; பிரிவினைவாதம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே திராவிட இயக்கம் தொடக்கத்தில் ஆராயப்பட்டது.

திராவிட இயக்க ஆய்வில் தமிழ்த்தேசியத்தின் மற்றைய முக்கிய உறுப்பான அதன் போர் மனப்பான்மை எடுத்துக் கையாளப்படவில்லை. திராவிட ஆய்வுகளில் தமிழ்ப் பண்பாடு, சமூகம் என்பனவற்றின் கோட்பாடுகளை உருவாக்கிய வரலாற்று எழுத்தாண்மை மரபுகளின் செல்வாக்கு அது அவ்விதம் ஏற்படுவதற்கு ஓரளவுக்குக் காரணமாகவிருக்கலாம். தொடக்க காலங்களில் தமிழ்மக்களையும் அவர்களின் பண்பாட்டையும் சமாதானத்தன்மையானதாகவும் போர்க்குணம் இல்லாததாகவும் காட்டப்பட வேண்டுமென்ற தீர்க்கமான அரசியல் நிர்ப்பந்தத்தால் அது அவ்விதம் உருவாகியது.

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையான மறைமலை அடிகள் ஆங்கிலத்தில் இவ்விதம் எழுதுகிறார்: '' உள்ளூர் சாட்சியங்கள் மூலம் கிறிஸ்துவுக்கு முன் 1500 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட தமிழர்களின் பண்டைய இலக்கிய நூலான தொல்

காப்பியத்தில் பண்டைய தமிழர்களின் வாழ்க்கையைப் படிக்கும் போது ஒரு அரசனுக்கும் இன்னொரு அரசனுக்குமிடையிலான சில சண்டைகளைத் தவிர அநேகமாக அவர்கள் மிக நாகரீக வளர்ச்சியடைந்த மக்கள் குழுக்களாக சமாதானமாக வாழ்ந்தார்கள் எனக்காணலாம். இந்தத் தொடர்ச்சியான சமாதானமான மிக நாகரீகமடைந்த வாழ்வில் தமிழர்கள் ஈடுபட்டிருந்தமையே தமிழ் மொழி இன்றும் பழங்காலப் பண்பு கெடாத உயிர்த்துடிப்புடைய புகழ் பூத்த நிலையில் இருப்பதற்கு காரணமாக இருந்துள்ளது.'' மறைமலை அடிகளின் கூற்றுக்கள் ஆரம்ப கால திராவிட இயக்கத்தினரின் எண்ணத்தை பிரதிபலிப்பனவாக உள்ளன. தமிழ்த் தேசியவாதத்தின் ஆய்வில் பெருமளவில் கோட்பாடுகளும் நம்பிக்கைகளும் தமிழர்களின் வரலாற்றை ''தொடர்ச்சியான சமாதானமான, மிகநாகரீகமடைந்த வாழ்க்கை'' என எடுத்துக் காட்ட வெளிப்படையாக எத்தனிப்பது தெளிவாகிறது.

திராவிட இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களின் கருத்து இவ் விதமாக இருந்தால் அப்போது தமிழ்ப் போர்க் குணத்தின் ''மூலங்களை'' எங்கிருந்து ஒருவர் கண்டறியலாம். பொதுவாக தென் இந்தியாவும், குறிப்பாகத் தமிழரும் நவீன இந்திய இராணுவத்தில் (சென்னைப்படை அணி ஒன்றுதான் தென் பிராந்தியத்தைச் சேர்ந்த ஒரே ஒரு படை அணியாகும்.) குறிப்பிடத்தக்க அளவு இல்லாத நிலையிலேயே இருககிறார்களேயாயினும் தமிழரின் போர்மனப்பான்மை இந்த்ய இராணுவத்துடனும் இந்திய சமுகத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டதாயுள்ளது.

இந்திய இராணுவத்தில் வட இந்திய மக்கள் கூடுதலாக இருப்பது இந்திய போர் மனப்பான்மையை துணைக்கண்டத்தின் வடபகுதிகளில் உள்ள சமுகங்களினதும் அரசியலினதும் படிமுறை வளர்ச்சியின் ஒரு பகுதியாகவே முக்கியமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. இந்திய இராணுவத்தின் வளர்ச்சியில் வட இந்தியாவின் போர்க்குணம் படைத்த குலங்களினதும் வகுப்புக்களினதும் வளர்ச்சி வேறொரு இடத்தில் ஆராயப்பட்டுள்ளது. இராணுவ சேவையை தமது மரபுவழி இயல்பான தொழில் எனக் கருதும் இனங்கள், குழுக்கள் நவீன இராணுவத்தில் திறமையான போராளிகளாக இருப்பார்கள் என்ற கருத்து இந்திய பாகிஸ்தானிய இராணுவங்களில் உருவாக்கத்தில் மிகமுக்கிய பங்கை வகித்துள்ளது. இக்கருத்து அதாவது போர்க்குணம்

படைத்த குலங்கள் என்ற தத்துவம் இராணுவ ஆட்திரட்டலில் பிரிட்டிசாரால் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முக்கிய பங்கு கொண்டிருந்தது. அத்துடன் அது கீழைத்தேசமொழிப்புலமையாளரின் இந்திய மக்கள் குறித்த ஆராய்ச்சிக்கட்டுரைகளில் போர்க்குணம் படைத்த வடக்கெனவும் அது இல்லாத தெற்கெனவும் நவீன நோக்குகளைக் கொண்ட கருத்துக்களை உருவாக்குவதற்கும் காரணமாயிருந்துள்ளது. அதன் காரணமாக இந்திய இராணுவத்தின் வீரமரபுகள் பற்றி விபரிக்கும் இந்திய அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ வெளியீடான புத்தகத்தில் தென் இந்திய குலங்களின் போராட்ட மரபுகள் எடுத்துக்காட்டப்படவில்லை. சுதந்திர இந்திய இராணுவத்தின் போர்க்குணம் படைத்த சாதிகளான சீக்கியர், ராசபுத்திரர், ஜரீஸ், குர்க்காக்கள், மராதர், பஞ்சாபிகள், டோக்றாஸ், கார்த்நவாலிகள், மகார்ஸ், சூமினியர் ஆகியோர் யாவரும் வட இந்தியச் சாதியினரும் வகுப்பினருமாவர். அப்படி இருந்தும் இந்திய இராணுவத்தின் முற்கால வரலாற்றில் தென் இந்திய துருப்புக்களான தமிழர்களும், தெலுங்கர்களும் இந்தியாவை பிரித்தானியருக்கு அடிமைப்படுத்திய முக்கிய போர்களில் புகழ்பெற்று விளங்கினார்கள் என்று தெரியக்கிடக்கிறது.

இந்திய இராணுவத்தில் தெற்கின் வீழ்ச்சி இரண்டு கட்டமாக நடந்தது. வடக்கின் போர்க்குணம் படைத்த குலத்தினரிடையேயும் குறிப்பாக வடக்கே பொதுவாகவும் துணைக்கண்டத்தின் வடமேற்குப்பகுதிகளிலும் குறிப்பாகவும் ஆட்திரட்டல் மேற்கொள்ளப்பட்டமை- இதைத்தான் ஸ்ரீபன் கோகன் இந்தியஇராணுவம் பஞ்சாப்பியமயமானது எனக் குறிப்பிடுகின்றார்.

முற்கட்டத்தில் 1857 இல் நடந்த இராணுவக் கலவரத்துக்குப் பின்னர் 1859 இல் பீல்கொமிசனும் 1879 இல் ஈடன் கொமிசனும் செய்த சிபார்சுகளின் அடிப்படையில் இராணுவம் சீரமைக்கப்பட்டபோது பிரித்து ஆளும் கோட்பாட்டுக்கமைய சேவையும் ஆட் திரட்டலும் பிரதேச அடிப்படையில் வரையறுக்கப்பட்டன. வங்காளிய இராணுவத்தினர் மிகவும் குறைக்கப்பட்டனர். பிராமணர்களும் உயர்சாதி இந்துக்களும் மிகப் பெருந்தொகையாக தவிர்க்கப்பட்டனர். சிப்பாய்களின் செயற்பாடு அவரவர்

களின் சமஸ்தானங்களுக்குள்ளேயே வரையறுக்கப்பட்டது. பம்பாய், சென்னை சமஸ்தானங்களில் பெரிய அளவிலான உள்ளூர் காப்புச் சிக்கல்கள் இல்லாதிருந்ததால் அச்சமஸ்தானங்கள் இராணுவ ரீதியில் பின்தங்கிய பகுதிகளாயின. இதைத் தொடர்ந்து அப்பிராந்தியங்களில் வாழும் குலங்களின் போர்த்தகமைகள் குறைந்துவிட்டதென்ற கருத்தும் வெளிவந்தது. ஆட்குறைப்புகள் சிபார்சு செய்யப்பட்டு பம்பாய் சென்னை இராணுவங்களில் ஆட்குறைப்புகள் நடத்தப்பட்டன.

இரண்டாவது கட்டம் இராச்சியத்தின் வடமேற்கெல்லையில் 1885 இல் ருஸ்சிய பேரரசின் அச்சுறுத்தலும் அதைத் தொடர்ந்து 1887 - 1889 ஆண்டுகளில் நடந்த பர்மாப் போரும் '' நன்றாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட போர்த்தகமைகள் கொண்ட குலத்தைச் சேர்ந்தவர்களின் '' பெருந்தொகை ஆட்பலத்தேவையை உருவாக்கியது. பிரித்தாளும் கொள்கைக்கமைய பிரதேசரீதியான ஆட்திரட்டல் முறை கைவிடப்பட்டு போர் முழுமையாக நடைபெற்ற இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளிலேயே உள்ள குலத்தினர், வகுப்பினர் ஆகியவர்களிடையில் பெருமளவில் ஆட்திரட்டல் நடைபெற்றது. போராட்ட உணர்வு கொண்ட ஆட்பலம் குறையாதிருப்பதற்காக விசேட சமூக பொருளாதார சலுகைகள் இம்மக்களுக்கு வழங்கப்பட்டன. '' இவ்விதம் தான் ராசபுத்திரர்கள், சீக்கியர்கள், ஜறிஸ், பஞ்சாபி முஸ்லிம்கள், குர்க்காக்கள் ஆகியோரின் வளர்ச்சியும் அவர்கள் போர்க்குணம் கொண்டவர்கள் என்ற கருத்தும் ஏற்பட்டது. போர்க்குணம் படைத்த குலங்கள் என்ற 19ம் நூற்றாண்டில் எழுந்த கோட்பாடு இந்திய மக்கள் குறித்தும் இந்திய பகுதிகள் குறித்தும் ஆய்வாளர் நடுவில் ஏற்படுத்திய தாக்கம் அதிகமாகும். அது, ஏன் சில இந்திய மக்கள் (பரந்தளவில் ஆட்திரட்டலுக்கு உட்படுவோர்) போர்க் குணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்றும், ஏன் மற்றவர்கள் (பெருந்தொகையாக ஆட்திரட்டலுக்கு உட்படாதோர்) போர்க் குணமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நிரூபிக்க எத்தனிக்கிறது.

30988

### தமிழரின் போர்ப்பண்பு (2)

# போர்த்தொழில் புரியும் தமிழ்க்குல மக்கள்

— டி. பி. சிவராம்
(லங்கா கார்டியன் 15-5-92)

முன்னாளில் போர்த்தொழில் புரிந்த பெருமளவிலான மக்கள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்காளம், பம்பாய்' சென்னை ஆகிய இராசதானிகளில் இருந்தனர். விரிவுபடுத்தப் பட்டுவரும் இந்திய இராணுவத்தில் உள்ள அநேகமான தொழில் வாய்ப்புக்கள் வேண்டுமென்றே தங்களுக்கு மறுக்கப்பட்டு வருவதாக இவர்கள் நினைத்தார்கள். பிரித்தானிய இராணுவத் தலைமைப்பீடம், இக்குலத்தவர்கள் போர்த்திறனை இழந்தவர்கள், ஆயுதம் ஏந்தத் தகுதியற்றவர்கள் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையால் இந்த மனக்குமைச்சல்கள் மேலும் இவர்களிடையே வளரத் தொடங்கியது.

இக்குலத்தவர்களின் பண்பாட்டில் வேரூன்றி நிற்கும் வீர உணர்ச்சி, அவர்கள் தங்கள் போர்த்திறமையைக் காட்டுவதற்கு உந்துசத்தியாக அமைந்து இருந்தது. பல்லாண்டு காலம் வீர காவியம் படைத்த வடமேற்கு இந்திய மக்கள், இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதில் தங்களை ஒதுக்கும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் பிரித்தானியர்களின்

ஒடுக்குமுறைகளை இல்லாதொழிப்பதற்காகத் தேசிய எழுச்சியை வளர்ப்பவர்களுக்கும் போர்த்திறனுள்ளவர்களுக்கும் கட்டாயம் மதிப்புக் கொடுக்கப்படவேண்டும் என்பதை ஒரு கொள்கையாக வளர்க்கத் தொடங்கினர். இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதில் பாதிப்புற்ற மக்களின் பேச்சாளராகத் திகழ்ந்த திரு. பாலகெங்காதர திலகர் அவர்கள் தேசிய இந்திய போர்ப்பண்புக்கு ஊக்கமளித்து இந்தக் கொள்கையை வளர்த்தார். பிரித்தானிய இந்திய இராணுவ அமைப்பு, இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் அவர்கள் பின்பற்றிய முறைகள் ஆகியவற்றைப் பின்பற்றி இந்திய போர்ப்பண்பை ஆராய்ந்து கருத்து வெளியிட திரு. ஸ்டீபன் கோகன் (Cohen) அவர்கள் முனைந்துள்ளார்,

பிரித்தானிய இந்திய இராணுவ அமைப்புப் பற்றி அடிப்படையில் வித்தியாசமான இரண்டு கொள்கைகள் இந்திய மக்களிடையேயுள்ளன. இவ்விரண்டையும் பிரித்தானிய, இந்திய இராணுவப் பண்புகள் எனக் கொள்ளலாம். அவையாவன: புதிய இராணுவப் பண்பு, மரபுவழி இராணுவப் பண்பு என்பனவாகும். புதிய இராணுவப் பண்புச் சிந்தனைகள் வங்காளத்திலும் மேற்கு இந்தியாவிலும் ஆரம்பமாகி ஏனைய பிரதேசங்களுக்குப் பரவின. புதிய இராணுவப் பண்பு தேசிய ரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடியதாக அமையவேண்டுமென்றும், இதுதான் தேசிய ரீதியில் மக்களின் உட்கிடக்கை என்றும், இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும்போது அனைத்து மக்களிடையே சமநிலை பேணப்படவேண்டும் என்றும் கோருகின்றது. மரபுவழி இராணுவப் பண்பு பிரதேச பாரம்பரியத்தாலும், பிரித்தானியரின் ஆட்சேர்ப்பு முறையினாலும், தோற்றுவிக்கப்பட்டது. இந்த மரபுவழி இராணுவப் பண்பு பிறப்பாலும், உரிமையாலும் ஆயுதமேந்தும் சில குலத்தினரிடையே இருந்து வந்தது. இந்தக் குலத்தவர்கள் ஒரே இடத்தில் குவிந்து வாழாமல் சிறு சிறு பிரிவுகளாக இந்தியாவெங்கும் சிதறுண்டு பரந்து வாழ்ந்துவந்தனர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் போர்த்திறனுடைய நோக்குடனும், பிரித்தானியருக்கு எதிரான நோக்குடனும் இரண்டு பிரிவுகள் தமிழ்ப் பகுதியில் இருந்தன.

அ) புதிய இராணுவப் பண்பைக் கடைப்பிடிப்பவர்கள் - தீவிரவாதிகள் - அத்தோடு அவர்களின் ஆதரவாளர்கள்.

2643 C·C

ஆ) மதிப்பிழக்கச் செய்யப்பட்ட மரபுவழி இராணுவக் குலத்தவர்கள்.

இந்தியாவின் பண்டைக்கால வீரகாவியங்களை மீண்டும் புதுப்பித்ததுடன், தேசிய விடுதலைக்கு அவசியமான மரபுவழி போர்த்திறன் வாய்ந்தவற்றிற்கு கட்டாயம் மதிப்பளிக்கவேண்டும் என்பதும் மரபுவழியாக போரை உயிர்நாடியாக நேசிக்கும் மதிப்பிழக்கச் செய்யப்பட்ட தமிழ்ப் போர்க் குலத்தவர்களின் பண்டைய கால வரலாற்று ரீதியான வெற்றிகளுக்கும், அவர்களின் போர்த்திறனாற்றலுக்கும் தேசிய ரீதியில் முக்கியத்துவமும் வாய்ப்பும் அளிக்கப்படவேண்டுமென்பதும் புதிய இந்திய இராணுவப் பண்பின் பரந்துபட்ட அடிப்படைக் கொள்கையாகும். போர்க்குணம் கொண்ட மரபுவழி தமிழ்க்குலமான மறவர் குலத்துச் சேதுபதிப் பரம்பரையைச் சேர்ந்த பாண்டித்துரைத் தேவர் புதிய தமிழ்ப் போர்ப் பண்புச் சிந்தனைகளில் அக்கறைகாட்டிய தோடல்லாமல தேசிய எழுச்சிக்கும், விடுதலைக்கும் அவசியமான தமிழர்களின் பண்டைக்கால மரபுவழிப் போர்த்திறனை வெளிக்காட்டும் அரசியல் சிந்தனைகள் ஏற்பட்ட இக்காலத்தில் அவைகளை ஊக்குவித்து வளர்க்கும்பொருட்டுத் தமிழர்களின் புத்துணர்ச்சியை வெளிக்கொணரும் முயற்சியில் இறங்கினர்.

2643 C·C

ஆதலின், தமிழர்களின் போர்ப்பண்பு புதிய, பழைய மரபுவழிப் போர்ப் பண்புகளின் கலப்பாகும் முதலாவது தேசிய புத்துணர்ச்சிக் கொள்கையாகவும் இரண்டாவது குலப்பண்பாடு சார்ந்ததாகவும் வளர்ந்துவந்ததாகும்.

இந்தியாவிலுள்ள ஏனைய பிரதேசங்களில் இருந்து வந்ததுபோல் தமிழர்களின் போர்ப்பண்பு சிறு சிறு பிரிவுகளாக இருக்கும், பிறப்பாலும் உரிமையாலும் ஆயுதம் ஏந்தும் குலத்தவர்களிடையே இருந்து வந்தது. சென்னை இராசதானியில் 1891 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனத் தொகைக் கணக்கெடுப்பின் போது, ''பயங்கரமான அடக்கமுடியாத போர்த்திறன் வாய்ந்த மக்கள் எனவும் இவர்கள் அதிகமாக மதுரை, திருநெல்வேலிப் பிரதேசங்களில் குமரிமுனை தொடக்கம் வடக்கே இராமநாதபுரம் சமிந்தாரின் எல்லைவரையும் உள்ள கரையோரப் பகுதிகளில் வாழ்ந்துவந்தனர் எனவும் மறவர்குல மக்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துப் போர்வீரர்கள் இந்த மரபு

வழி மறவர்குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்த ஒல்லாந்தர் அவர்களைத் தங்கள் சேவைகளில் அமர்த்தினர். (தெற்காசியாவில் ஆரம்பகாலத்தில் போரைக் குலத்தொழிலாகக் கொண்ட மக்களை ஒரு காலனித்துவ நாடு சேவைக்கமர்த்தியமைக்கு இது ஒரு சான்றாகும்.)

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் மரபுவழியாக போர்ப் பண்புள்ள குலத்தவரிடையே இரு பிரிவினர் வெவ்வேறு மனக்குமுறல்களுடன் இருந்ததாகத் திரு. கோகென் குறிப்பிடுகின்றார்.

அ) இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும்போது முழுமையாகத் தவிர்க்கப்பட்ட அல்லது குறைந்தளவில் சேர்க்கப்பட்ட வகுப்பினர்.

ஆ) இராணுவத்தில் இருந்துகொண்டு தங்களுக்கு மேலாளர் பதவிகள் வேண்டுமென்று எதிர்பார்த்த வகுப்பினர்.

மனக்குமுறல்களுடைய மறவர்கள் மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்களாவர். மரபுவழியாக மறவர்களுக்குத் தமிழ் மக்களிடையே இருந்துவந்த செல்வாக்கைக் குறைக்கும் வகையிலும் அவர்களின் போர்த்திறனை முற்றாக இல்லாதொழிப்பதற்காகவும் சமூக, பொருளாதார ரீதியிலும், தண்டிக்கக்கூடிய வகையிலும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அவர்களுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதேகாலத்தில் வடஇந்தியாவிலுள்ள போர்த்திறன்வாய்ந்த குலத்தவர்களுக்கும், வகுப்பினருக்கும் கொடுத்த செல்வாக்குக்கும் அரவணைப்புக்கும் எதிர்மாறாக இருந்தது. மறவர்களை மதிப்பிழக்கச் செய்ததோடல்லாமல் மக்கள் மதிக்காத குறைந்த குலத்தவர்களாகவும் ஆக்கினர். இப்படியாக இவர்களின் மதிப்பைக் குறைப்பதற்காக எடுத்ததற்கெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. இதனால் சென்னை ஆட்சிவட்டத்தில் உள்ள தென்தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட சமூக அமைப்பில் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் காண்பிக்கப்பட்டனர். தமிழ்ப் பிரதேசத்தின் போர்ப் பண்பை இல்லாதொழித்து அதனைச் சமாதானப் பிரதேசமாகக் கொண்டுவருவதற்கு இவர்களின் மரபுவழிமுறையும், அதுபற்றிய நினைவுகளும் கட்டாயமாக முற்றாக மழுங்கடிக்கப்படவேண்டுமென எண்ணினர்.



தேர்ந்த

இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும்போது போர்ப்பண்புள்ளவர்களைச் சேர்ப்பது என்ற கோட்பாட்டின்படி வடஇந்தியாவில் ஆட்சேர்த்த போதும் தென்தமிழ் நாட்டில் வேண்டுமென்றே அதை இல்லா தொழித்து இந்திய உபகண்டத்தின் இராணுவத்தில் மேலும் அவர் களுக்கு இராணுவத்தில் இடமில்லாதுபோயிற்று.

வடஇந்தியாவிலுள்ள செல்வாக்குமிக்க இனத்தவர்களை கீழ்ப்படியச்செய்து அவர்களுக்கு காப்பளிப்பதும், அத்துடன் அவர்களது பண்பாட்டை போர்ப்பின்னணியில் வளர்த்ததும், பிரித் தானியாவை தாராளமாக வளர்ச்சியடையவும் முன்னேற்றமடைய வும், செய்தது. அதேவேளை தெற்காசியா வீழ்ச்சியுறவும் வழி சமைத்தது என திரு. டேவிட் வாசுபுறூக் (David Washbrook) வாதிடுகின்றார்.

இதற்கு மாறாகத் தமிழ்ப் போர்க்குலத்தவர்களின் போர்த் திறன் வாய்ந்த பண்பாடு இல்லாதொழிக்கப்பட்டதும், அவர்களின் போர்த் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டதும் தென்தமிழ்நாடு இந் தியா ஒரு தேசமாக வளர கொடுத்த விலையாகும்.

பிரித்தானியர் விட்டுச்சென்ற இந்த யுக்திகள் புதிய இரா ணுவ அமைப்பிலும் பிரதிபலித்தது. இதன் நடுவிலிருந்தே புதிய தமிழ்ப் போர்ப்பண்பு எழுச்சி பெறலாயிற்று.

போர்த்திறன் வாய்ந்த மறவர் குலத்தவர்களின் திறமையை மழுங்கடித்ததும், போர்த்திறனற்ற தமிழ்ச் சமுகத்தவர்களை இரா ணுவத்திற் சேர்த்து அந்த வெற்றிடங்களை நிரப்பி சமுகத்தில் அவர்களுக்கு மதிப்பைக் கொடுத்தும் மறவர் சமுகத்திடையே புரட்சிச் சிந்தனை தோன்ற வழிவகுத்தது.

இராணுவத்தில் சேர்க்கப்பட்ட போர்த்திறனற்றோரில் வேளாளர், நாடார், ஆதிதிராவிடர் ஆகியோர் அடங்குவர். விவ சாயத் தொழிலையன்றி வேறெதுவும் தெரியாத, சமாதானத்தை விரும்புகின்ற வேளாளர்களுடைய பண்பாடும் மதிப்பும் (சனத் தொகை மதிப்பு 1871) மரபுவழியாக போர்க்குணம் படைத்த வகுப் பினரை மழுங்கடிப்பதற்கும் ஒடுக்குவதற்குமான நோக்கங்களை நிறைவேற்றப் பொருத்தமாக இருந்தது. இதைச் செய்வதற்குப் பிரித்தானியர்கள் உள்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை களைக் கையாண்டனர். சமுகத்தில் கட்டுப்பாட்டையும் காப்பை

யும் உறுதிப்படுத்துவதற்கு வேளாளர்களைத் தவிர வேறெது வித வழியும் இல்லையெனக் கண்ட பிரித்தானியர்கள் அந்த வழியையே பின்பற்றத் தொடங்கினர். இதன்படி பிரித்தானியரின் ஆதரவுடன் வேளாளர் சமூகம் வளர்ந்து ஆதிக்கம் பெற்று அவர்களின் பண்பாடு தமிழர்களின் உயர்ந்த பண்பாடாக மதிக்கப்பட்டு அதுவே தமிழர்களின் பண்பாடு எனவும் காட்டப்பட்டது. நாடார்களும், ஆதி திராவிடர்களும் இந்த மாற்றத்திற்கேற்ப மாற்றப் படக் கூடியவர்கள் எனக் கணிக்கப்பட்டனர். அவர்களில் அதிகமானவர்கள் அங்கிளிக்கன் திருச்சபையில் ( Anglican's ) சேர்ந்தனர். சென்னை இராசதானியில் இராணுவத்துக்கு ஆட்சேர்க்கப்படும்போது இவர்களுக்கு அதிகளவு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. திராவிட மக்களின் போர்ப்பண்பை இல்லாதொழிக்க பிரித்தானியரும், அங்கிளிக்கன் திருச்சபையும் முயன்றதால் அவர்கள் முன்னுரிமை கொடுத்த இச் சமூகத்தினர் அவர்கள் சார்பான பண்பாட்டையே வளர்க்க முயன்றனர். இதனால்தான் ஆரம்பகால திராவிட இயக்கத்தின் வரலாற்றில் அவர்களின் போர்ப்பண்புகள் குறித்த வரலாறுகள் விலக்கப்பட்டன அல்லது மறைக்கப்பட்டன. வேளாளரின் பண்பாடே தமிழரின் பண்பாடு என்ற கருத்து முன்வைக்கப்பட்டது ( இப்படியான கருத்துக்களைத்தான் மறைமலை அடிகளும் முன்வைத்தார். ) 20ம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் தமிழர்களின் தேசிய பண்பாட்டை வெளிக்காட்டுவதில் இரண்டு விதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. அவை பிரித்தானியருக்கு எதிரான அடங்காத போர்ப்பண்புடைய குலத்தவர்களின் பண்பாடும், வரலாறும், மற்றும் தங்களுடையதே உண்மையான மரபுவழி பண்பாடும், வரலாறும் என்று கூறும் வேளாளர்களுடைய வரலாறும் பண்பாடுமாகும். இவ்வேளாள மேல் குலத்தினர் பிரித்தானியருக்கு ஆதரவாளர்களும் சமாதான விரும்பிகளுமாகும். ஒரு சாரார் வேளாளர்களே தூய தமிழர்கள் எனக் கூறுகின்றனர்.. மறுசாரார் எல்லாத் தமிழர்களும் மறவர்கள் எனவும் தமிழ்நாடு அதன் பண்டைய போர்த்திறனால் மதிப்புப் பெற்றுள்ளது எனவும் கூறுகின்றனர். இப்படியிருக்கும் பொழுது ஆரம்பத்தில் இருந்து திராவிட இயக்கத்துக்கு எதிராக அரசியல் சமூக ரீதியில் இருந்து வந்த தமிழர் போர்ப்பண்பு 1950 களிலும் 1960 களிலும் அதனுடைய செல்வாக்கை அதிகரிக்கச் செய்ததுடன், இலங்கையின் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்தேசிய இயக்கங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைக்கு வந்தது எப்படி?



தேர்ந்த

இது அரசியல் ரீதியாகத் திராவிடஇயக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களுடனும் 1930ன் பின்னர் மறவர்களுக்கும் இந்திய தேசியக் காங்கிரசுக்கும் இடையில் ஏற்பட்ட உறவுகளினால் அவைகளில் ஏற்பட்ட மாற்றங்களுடனும் தொடர்புள்ளதாகும்.

திராவிட இயக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியமாக பின்வருவனவற்றுடன் தொடர்புடையன.

அ) 1944ம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சார்பான நீதிக்கட்சியின் செல்வாக்குள்ள தலைமை தூக்கி எறியப்பட்டமை

ஆ) 1947 / 48 ம் ஆண்டுகளில் பிரித்தானிய ஆட்சிக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக ஏற்பட்ட துரிதமாற்றங்கள் திராவிட இயக்கத்திற்குள் பாரிய வேற்றுமைகளைத் தோற்றுவித்தமை.

தமிழ்ப் போர்க் குலத்தவர்களுக்கெதிராகப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் எடுத்த அடக்கு முறைகளை சென்னை இராசதானியிலுள்ள காங்கிரசின் மிதவாதப் பிராமணத் தலைமைப் பீடம் எதிர்க்காமையினால் இந்திய தேசியக் காங்கிரசுக்கும் மறவர் குலத்தவர்களுக்குமிடையே நிலவி வந்த உறவு பாதிப்படைய ஆரம்பித்தது. ஆற்றலும் செல்வாக்கும் மிக்க மறவர் குலத்தலைவரான திரு. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான இந்திய இராணுவத்தில் இணைந்து தமிழ்நாட்டிலுள்ள காங்கிரசுக்கு எதிராகப் பார்வாட் புளொக் ( Forward Block ) என்னும் கட்சியை ஆரம்பித்து அதற்கு ஆதரவைத் தேடிய போது இந்த எதிர்ப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த எதிரப்புணர்ச்சி 1957ம் ஆண்டில் சாதிக்கலவரமாக வெடித்தது. அப்போது ஆட்சியிலிருந்த காங்ரசு அரசாங்கம், இந்தக் கலவரத்துக்கு திரு முத்துராமலிங்கத தேவரே சூத்திரதாரி என அவரைக் கைது செய்தது. தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களில் ஓரளவே செல்வாக்குப் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மறவர்களின் விடயங்களில் தலையிட ஆரம்பித்தது. அந்தக்கால கட்டத்தில் தென் தமிழ்நாட்டிலிருந்து தெரிவுசெய்யப்

பட்ட ஒரேயொரு உறுப்பினரான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மு. கருணாநிதி அவர்கள் மறவர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தார். அத்துடன் தமிழர்களில் போர்ப்பண்புள்ள குலத்தவர்களுடைய பண்பாட்டை தமிழர்களின் தேசியப் பண்புடன் இணைத்து அது முக்கிய இடம்பெற வழிவகுத்தார்.

தான் தமிழ்நாட்டின் முதன் மந்திரியாக வரும்வரைக்கும் திரு. கருணாநிதி 'மறவன்' என்னும் புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதிவந்தார். (அவர் தனது கட்சித்தோழர்களுக்கு வாராந்தம் எழுதிய கடிதம் 'மறவன்மடல்' என வெளிவந்தது) இதன் மூலம் தமிழர் போர்ப்பண்பு திராவிட இயக்கத்தின் செயல்பாட்டுடன் இரண்டறக் கலந்தது. 1950 களிலும் 1960 களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைவாதத் தீவிரவாதத்தில் தமிழர் போர்ப்பண்பு ஆதிக்கஞ் செலுத்தியது. இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுத்து வன்மை இலங்கைத் தமிழர்கள் நடுவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. இந்த காலகட்டத்தில் மட்டக்களப்பு நகரத்திலுள்ள அமிர்தகழி என்னும் சிறு ஊரைச் சேர்ந்த காத்துமுத்து சிவானந்தன் என்னும் ஒரு இளைய மாணவன் தமிழ்நாட்டில் கல்விகற்றுக் கொண்டிருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய தீவிரவாதப் போராட்டங்களில் பங்கெடுத்தான். தமிழர்களின் எழுச்சிக்குப் பொருத்தமான ஒரு ஆயுதம் எனத் திரு காத்துமுத்து சிவானந்தனைத் திரு.கருணாநிதி போற்றியுள்ளார். இந்த மாணவன்தான் பிற்காலத்தில் காசி ஆனந்தன் என அழைக்கப்பட்டார். இவர் இலங்கை திரும்பியதும் இரு வாரங்களுக்கொருமுறை வெளிவரும் தி.மு.க என்னும் பத்திரிகையில் எழுதிவந்தார். அதில் காணப்பட்டது தான் "மறக்குலம்' என்னும் அவரது பாடல்.

மறவர் படை தான் தமிழ்ப் படை..................

..................... புலிப்படை...............

அந்தப்பாடலிலுள்ள இந்த வரிகள் தான் இப்போது விடுலைப் புலிகளின் வரலாற்றுத் தத்துவமாக அவர்களின் கனவாகவும் இருக்கின்றது. ★

# அருந்த போர்
# மசிதோனியாவிலா?

–மார்லைஸ் சிமண்ஸ்–

(நியூயோர்க் ரைம்ஸ்-ஐலண்ட் 14-2-92)

(பார்சிய பேரரசின் அழிவுகளின்மேல் மகா அலெக்சாண்டர் ஒரு பெரிய பேரரசை நிறுவினான். கி. மு. 323-ம் ஆண்டில் அலெக்சாண்டர் இறந்த பின்னர் அவனது தளபதிகள் அந்தப் பேரரசை பங்குபோட்டுக்கொண்டனர். கி. மு. 148-ம் ஆண்டில் மசிதோனியா ரோமப்பேரரசின் ஒரு மாகாணமாக ஆக்கப்பட்டது. கி. பி. 395-ம் ஆண்டில் ரோமப் பேரரசு பிளவுண்டுபோகையில் இந்தப் பிராந்தியம் பைசைன்ரைன் பேரரசின் (Byzantine Empire)ஒரு பகுதியாக்கப்பட்டது. இந்த மசிதோனியா கி. பி.800-ம் ஆண்டுகளில் முதலாவது பல்கேரியப் பேரரசுடனும் பின்னர் கி. பி. 1300-ம் ஆண்டுகளில் சேர்பியன் பேரரசுடனும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கி. பி. 1389-ம் ஆண்டுதொடக்கம் 1912-ம் ஆண்டு வரை மசிதோனியா துருக்கியின் ஆட்சியின் கீழ் இருந்தது. மசிதோனியாவிலிருந்த பல்கேரிய, கிரேக்க, சேர்பிய மக்கள் 1890-ம் ஆண்டு முதல் 1912-ம் ஆண்டுவரையும் ஒட்டமான் பேரரசுக்கெதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். 1912-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பால்கன் போரில், பால்கன் நேசநாடுகள் ஒட்டமான் பேரரசை முறியடித்ததுடன் பல்கேரியா, சேர்பியா (யூகோசிலாவியா) கிரேக்




கம் ஆகிய நாடுகள் மசிதோனியாவைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டன. அதிக நிலப்பரப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 1913-ம் ஆண்டில் பல்கேரியா இரண்டாவது பால்கன் போரைத் தொடங்கியபோது அது மற்றைய பால்கன் நாடுகளால் முறியடிக்கப்பட்டது. மசிதோனியாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றும் முயற்சியாக இரண்டு உலகப் போர்களின் போதும் பல்கேரியா அந்தப் பிராந்தியத்தின் மீது படையெடுத்தது. இந்த இரு போர்களின் போதும் வெற்றியீட்டிய பக்கத்தில் கிரேக்கமும், சேர்பியாவும் சேர்ந்து போர்புரிந்து பல்கேரியாவை மசிதோனியாவிலிருந்து விரட்டியடித்தன.)

தனது பண்டைய கால வரலாற்றுப் பெருமையையிட்டுப் பெருமிதம் அடைந்திருந்த கிரேக்கம், அதற்கு வடக்கேயிருக்கும் யூகோசிலாவியா என்றநாடு தற்போது சீர்குலைந்து வருவதனால் ஏற்படும் பாரிய தாக்கம் காரணமாக ஏற்பட்ட அசாதாரணமான தேசிய எழுச்சியினால் மீண்டும் ஒரு மயக்க நிலைக்குக்கொண்டுவரப்பட்டுள்ளதுபோல் தெரிகின்றது.

மசிதோனியா என்ற பெயரே இந்த எழுச்சி ஏற்பட்டதற்குக் காரணமாக இருக்கின்றது. 3000 ஆண்டுகளாக இருந்துவரும் மசிதோனியா என்ற பெயர் முழுமையாகக் கிரேக்கத்தையே குறிக்கின்றது எனவும் அது அப்படியே தொடர்ந்து இருந்துவரவேண்டுமெனவும் கோரித் தெருத்தெருவாக ஊர்வலம் செல்வோரும், மோட்டார் வாகனங்களிலும், வியாபார நிலையங்களின் பலகணிகளில் விளம்பரங்களை ஒட்டுவோரும், கொடிகளைத் தாங்கிச் செல்வோரும் உணர்ச்சிபூர்வமாகக் கூறுகின்றனர்.

வெகுகாலமாக யூகோசிலாவியா ஒன்றியத்தில் இருந்து வந்ததும், தற்போது சுதந்திரம் கோருவதுமான சிறிய நாடான மசிதோனியாவே இந்த அச்சுறுத்தலுக்குக் காரணமாகும். பண்டைக்காலத்தில் மசிதோனியாவில் வாழ்ந்துவந்த அரிஸ்தோத்தில்(Aristotle)என்ற தத்துவ ஞானியாலும், அவரின் மாணாக்கனான மகா அலெக்சாண்டர் என்ற பேரரசனாலும் பெருமைப்படுத்தப்பட்ட கிரேக்கத்தின் நிலப்பரப்பான மசிதோனியாவின் பெயரை மறைக்கும் வண்ணம் அல்பேனிய இனத்தவர்களும், சிலாவிய இனத்தவர்களும் இணைந்து தங்களது தனிக்குடியரசுக்கு மசிதோனியா எனப்பெயரிட்டுள்ளனர் எனக் கிரேக்கர்கள் கூறுகின்றனர்.

வடகிரேக்கத்தின் துன்பகரமான வரலாற்றை இந்தப் பெயர் வெளிக்காட்டுவதே இங்கு முக்கியமானதாகும். வெகுகாலமாக இந்த நிலப்பரப்பில் அடிக்கடி சண்டை நிகழ்ந்துவந்துள்ளது. 40 ஆண்டுகளுக்கு முன்னரும் இங்கு சண்டை நடைபெற்றுள்ளது. வடக்கேயுள்ள நிலப்பரப்பில் அக்கறையில்லை எனக்கூறும் கிரேக்கம் யூகோசிலாவியாவிலுள்ள மசிதோனியாவுக்கு கிரேக்க நிலப்பரப்பில் அக்கறை இருக்கும் எனக் கூறுகின்றது.

சுகோபியே(Skopjc) என்ற தலைநகரைக் கொண்ட மசிதோனியாக் குடியரசில் தற்போது நிலவும் கொந்தளிப்பைத் தணிக்கும் வண்ணம், அந்தக் குடியரசை அங்கீகரிப்பதற்கான வழிவகைகளைத் தேடும் முயற்சியில் ஐரோப்பிய சமூக நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் இறங்கியிருப்பதே அண்மைய

வாரங்களில் கிரேக்கத்தில் இந்தச் சிக்கல் கிளம்பக்காரணமா யுள்ளது.

"இது ஒரு நெருக்கடி நிறைந்த பால்கன் சிக்கலாகும். இந்தக் குடியரசை அங்கீகரிக்கத் தவறின் யூகோசிலாவியா பக்க முள்ள நாடுகள் சீர்குலைந்துபோய்விடும் என சுகோபியே கூறு கின்றது. அதேபோன்று இந்தக் குடியரசு அங்கீகரித்தால் தெற் கிலுள்ள பால்கன் நாடுகள் அனைத்தும் சீர்குலைந்துபோகு மெனக் கிரேக்கம் கூறுகின்றது" என ஒரு மேற்குநாட்டு இராச தந்திரி கூறினார்.

கிரேக்கத்தின் கடுமையான அழுத்தங்களால் ஐரோப்பிய சமூகநாடுகளும் அமெரிக்காவும் இந்தச் சிக்கலுக்கு ஒரு முடிவு எடுப்பதை மே திங்கள் வரை இடைநிறுத்தி, வைத்துள்ளதுடன், ஜனவரியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவுற்றபோதும் இந்தக் காலத்தினுள் ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டு மென கிரேக்கத்தையும், சுகோபியேயையும் வலியுறுத்தியுள்ளன. அத்துடன் இந்நாடுகள் மசிதோனியக் குடியரசுக்கு புதிய மசி தோனியா அல்லது சிலாவோ மசிதோனியா எனப் பெயர் வைக்கலாம் எனவும் யோசனை கூறியுள்ளன.

மசிதோனியா என்ற சொல்லை உள்ளடக்கிய எந்தப் பெயரும் தங்களுக்கு ஏற்புடையதல்ல எனக் கிரேக்கத்திலுள்ள அரசாங்கமும் அதிகமான எதிர்க்கட்சியினரும் அண்மைய நாட் களில் அதிகமாக எடுத்துக் கூறியுள்ளனர். கிரேக்கத்தின் எதிர்ப் புக்களை மேற்கு ஐரோப்பிய நாடுகள் உதறித்தள்ளினால் அதற் குப் பதிலடியாகக் கிரேக்கம் தனது வட எல்லையை மூடி அத னூடாகச் செல்லும் அனைத்துலகப் போக்குவரத்துப் பாதை யைச் செயலறச் செய்ய வேண்டுமென அனேக கிரேக்கர்கள் கூறுகின்றனர்.

பூகோள ரீதியாக வரையறுக்கப்படாத எல்லைகள் அடங் கிய நிலப்பரப்பான மசிதோனியாவில் கிரேக்கமொழி பேசும் இன மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவருகின்றனர். கி. மு. 4-ம் நூற்றாண்டிலிருந்த மகா அலெக்சாண்டரின் பேரர சின் காலத்திலிருந்து இந்தக்குடியரசு ஒரு உறுதியான வரைய றுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட அரசாங்கமாகத் திகழ வில்லை. கி. பி.7-ம் நூற்றாண்டில் சிலாவிய இனமக்கள் இந் தக் குடியரசில் குடியேறினர்.



தேர்ந்த

அண்மைக் காலங்களில் அரசியல் சிக்கல்கள் நிரம்பிய, அதிக குருதி சிந்தும் இன்னல்கள் நிறைந்த நிலப்பரப்பாக இது காட்சியளிக்கின்றது. முன்னைய யூகோசிலாவியாவிலிருந்த மசிதோனியாக் குடியரசு 26,000 சதுரக்கிலோ மீற்றர் பரப்பளவையும் 1.9 மில்லியன் மக்களையும் கொண்டதாகும். இங்குள்ளோர் அதிகமாகப்பேசுவது ஒருவித பல்கேரிய மொழியாகும். கிரேக்கத்திலுள்ள மசிதோனிய நிலப்பரப்பில் ஏறக்குறைய இதேயளவு மக்கள் வாழ்ந்தாலும் அதன் பரப்பளவு 34,600 சதுரகிலோ மீற்றராகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்கத்திலுள்ள மசிதோனியக்கிளர்ச்சியாளர்களும் பல்கேரியாவிலுள்ள மசிதோனியக் கிளர்ச்சியாளர்களும் துருக்கியருக்கெதிராகச் சண்டையிலீடுபட்டாலும் ஒட்டமான் பேரரசின் கடைசிக்காலத்தில் தங்களுக்கிடையே சண்டையில் ஈடுபட்டுவந்தனர் இதற்குப் பின்னர் இந்த நிலப்பரப்புக்காக இரு பால்கன் போர்கள் நடைபெற்று இறுதியில் 1913-ம் ஆண்டில் இது பிரிக்கப்பட்டபோது பல்கேரியாவுக்கு 10 சதவீதம் நிலப்பரப்பும் சேர்பியாவுக்கு 38 சதவீத நிலப்பரப்பும் மீதி அரை வாசிக்குமேல் கிரேக்கத்துக்கும் கொடுக்கப்பட்டது.

கிரேக்கத்திலும், சேர்பியாவிலும் இருக்கும் மசிதோனியர்களுடன் இணைந்துவாழ விரும்பிய விரக்தியுள்ள பல்கேரிய மசிதோனியர்கள் ஒரு கரந்தடி இயக்கத்தை உருவாக்கி உலக மகாப்போர்களின் போது படுகொலைகளில் ஈடுபட்டும், எல்லைகளைக் கடந்து சென்று அதிரடித்தாக்குதல்களை நடத்தியும் வந்தனர். இரண்டாம் உலகப்போரில் கிட்லர் பக்கம் சார்ந்திருந்த பல்கேரியா இதுதான் தக்க தருணம் என நினைத்து கிரேக்கத்துக்குச் சொந்தமான மசிதோனியாவுக்குள் படையெடுத்துச் சென்றதாயினும் போரின் முடிவின்போது கட்டாயமாக அங்கிருந்து வெளியேறவேண்டி ஏற்பட்டது.

1946-ம் ஆண்டு தொடக்கம் 1949-ம் ஆண்டுவரை கிரேக்கத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது கடும் சண்டை மூண்டது. இந்த உள்நாட்டுப் போரில் ஏறக்குறைய 100,000 கிரேக்கர்கள் இறந்துள்ளனர். கிரேக்கத்திலுள்ள பொதுவுடமை வாதிகளின் தளங்கள் இந்நிலப்பரப்பில் இருந்ததுடன், பொதுவுடமை வாதிகளுக்கு மசிதோனியாவைத் தருவது என்றவாக்

குறுதியின்பேரில் யூகோசிலாவியாவிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுவந்தனர். இந்த உள்நாட்டுப் போரின் உச்சக்கட்டத்தின்போது திரு. டிட்டோவும், திரு. ஸ்டாலினும் ஏஜியன்கடலுக்குச் செல்லும் நுழைவாயிலிலுள்ள, நிலப்பரப்பான சலோனிக்காவைத் தங்களுக்குத் தருமாறு கோரினர்.

டிட்டோ யுகோசிலாவ் மசிடோனியாவை உருவாக்கிய போது, அதை கிரேக்கத்தை சூழ்வதற்கான முதற்படியாகவும், பாரிய பொதுவுடமை மசிடோனியாவிற்கான கருவாகவும் வாசிங்டன் கருதி எச்சரிக்கையடைந்தது. 1944-ம் ஆண்டு அறிக்கையொன்றில், எட்வாட்வ் ஆர். செட்டினியஸ் மசிடோனிய நாட்டுடனான அல்லது அதன் 'தேசிய புத்துணர்வை' குறிக்கும் தன்மையை, 'கிரேக்கத்திற்கெதிரான சாத்திய செயற்பாடாகவே' கருதமுடியும் என கண்டித்துள்ளார்.

கிரேக்கத்தின் வலதுசாரிப் பத்திரிகையான எஸ்தினா அந்த அறிக்கையை சென்றவாரம் மீண்டும் வெளியிட்டுஅமெரிக்கா இந்த முன்னாள் அறிக்கையை வாசித்து தனது அண்மைக்கால இராசதந்திர வரலாற்றைத் தெரிந்துகொள்ளவேண்டுமெனக் கூறியுள்ளது.

இந்தச் சிக்கல் காரணமாக ஏற்பட்ட பாதுகாப்பின்மையால் கிரேக்கம் இப்போது சீற்றமடைந்துள்ளது. ''யூகோசிலாவியப் பொதுவுடமைவாதிகள் எங்கள் வரலாற்றைத் திருடி உண்மைக்குப் புறம்பாக மசிதோனியா சிலாவியருடையது என எழுதி வைத்துள்ளனர் என்பதால் நாங்கள் மிகவும் ஆத்திரம் கொண்டுள்ளோம் என்கிறாள் வரலாற்று ஆசிரியையான செல்வி யூயினியா கௌகௌறா (Eugenia Koukoura) இவர் அவ்விடத்தைப் பார்வையிட வந்த ஒருவரை விடாப் பிடியாகக் கூட்டிச்சென்று 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய மசிதோனியக் கல்லறையைக் காட்டினாள். இக்கல்லறையில் கிரேக்க எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன. சேர்பியாப் பிரதேசத்திலுள்ள வார்தார் (Vardar) என்றழைக்கப்படும் நிலப்பரப்பை மசிதோனியா என்ற குடியரசாக 1944ம் ஆண்டில் உருவாக்கிய டிட்டோ தன்னைப் பின்பற்றுபவர்களைக் கொண்டு வரலாற்றை மாற்றி எழுதி இப்பகுதிக்கு மசிதோனியா என்ற ஒரு அடையாளத்தைக் கொடுத்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.



தேர்ந்த

அண்மை வாரங்களில் கிரேக்க அரசாங்க மேலாளர்கள் இந்த மசிதோனியா என்ற பெயர் தங்கள் நாட்டுக்கே சொந்தம் என்பதை வலியுறுத்தியபோதும் யூகோசிலாவியாவிலுள்ள மசிதோனியா என்ற நிலப்பரப்பை பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை. போர்க்கப்பல்களுக்கும் வடக்கிலுள்ள நிலப்பரப்பிலுள்ள வானூர்தித் தளங்களுக்கும் புதிய பெயர்களைக் கிரேக்கர்கள் சூட்டியுள்ளனர். சலோனிக்காவிலுள்ள வானூர்தித் தளத்தை மசிதோனியா என அழைப்பதுடன் காவல்லாவிலுள்ள வானூர்தித் தளத்துக்குப் பேரரசன் மகா அலெக்சாண்டரின் பெயரைச் சூட்டியுள்ளனர். புதிதாக அகழ்வாராய்ச்சிமூலம் கண்டெடுக்கப்பட்ட அரும்பெருஞ் செல்வங்கள் இந்த நிலப்பரப்புக்கும் கிரேக்கத்துக்குமுள்ள தொடர்பை வெளிக்கொணர்ந்துள்ளன. மசிதோனியாவில் கண்டெடுக்கப்பட்ட அரும்பெரும் செல்வங்கள் மக்களின் பார்வைக்காக ஏதென்சிலுள்ள இரண்டு நூதனசாலைகளில் இந்த திங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மசிதோனியா என்ற சொல் கிரேக்கத்துக்குச் சொந்தம் என்ற இந்தத் தேசிய அடையாளச் சின்னத்தை வெளிக்கொணருவதில் அநேகமாக மக்கள் இணைந்துள்ளனர். பண்டைய பேரரசின் சின்னமான மசிதோனிய நட்சத்திரம் வியாபார நிலையங்களிலுள்ள பலகணிகளிலும் தெருக்களிலுள்ள விளக்குகளிலும் ஒட்டப்பட்டுள்ளது. ஆண்கள் தங்களின் மேற்சட்டைகளின் மார்பிலும், பெண்கள் தாங்கள் அணியும் மார்பு ஊசிகளிலும், தோடுகளிலும் இந்த மசிதோனிய நட்சத்திரச் சின்னத்தை அணிகின்றார்கள். ஒரு பக்கத்தில் இந்த நட்சத்திரச் சின்னமும் மறு பக்கத்தில் மகா அலெக்சாண்டரின் உருவமும் பொறிக்கப்பட்ட 100 திறாமா நாணயங்களும் அரசாங்கத்தால் சில வாரங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது.

"கிரேக்கர்கள் நாட்டுப்பற்றுக் குறைந்தவர்கள், குடிபெயர்பவர்கள், தங்கள் செல்வங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவார்கள்" எனக்கூறும் சட்டத்தரணியான அன்ட்றியாஸ் ஏடுகானோமிடிஸ், "ஆனால் அவர்கள் பண்டைக்கால வரலாற்றைப் பற்றியும் தங்கள் முன்னோருடைய மரபுரிமை பற்றியும் யாரும் குறை கூறினால் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்" என மேலும் கூறுகின்றார்.

வெளியிலுள்ளோருக்கு சொற்பொருள் ஆய்வியற் தகரா றுபோன்று இது தோன்றும். ஆனால் இது கிரேக்கர்களின் முன் னோரின் மரபுரிமைக்கும் பொதுவுடமை நாடான யூகோசிலா வியாவின் வழித்தோன்றல்கள் மசிதோனியாவைத் தங்கள் நாட் டுடன் இணைப்பதற்காக வெகுகாலமாகத் தங்கள் மனத்துள் வைத்திருக்கும் வேட்கைக்கும் இடையிலான சிக்கலாகும்.

யூகோசிலாவியாவில் ஒரு மசிதோனியக் குடியரசை திரு. டீட்டோ உருவாக்கிய பின்னர் இந்நிலப்பரப்பிலுள்ள தீவிரவா திகள் ஏனைய நாடுகளிலுள்ள மசிதோனியாவை மீட்டெடுத்து ஒரு பாரிய மசிதோனியா என்ற நாட்டை உருவாக்கவேண்டு மென வெளிப்படையாகக் கூறிவருகின்றார்கள்' என அரசாங்க மேலாளர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட பேச்சுக்கள் முனைப் புடன் வெளிவருகின்றன. ஆனால் சுகோபியேயில் அரசாங்கம் தனக்குப் பிறதேசங்களிலுள்ள மசிதோனியா பற்றி அக்கறை யில்லை எனவும் ஆனால் மசிதோனியாக் குடியரசு என்ற பெயரை மாற்றமுடியாதெனவும் கூறுகின்றது.

இந்தநாட்டிலுள்ள மக்களை சச்சரவுகளையும், பிளவுக ளையும் மறந்து தேசியவாதிகளாக இணைந்துவாழ இந்த ஆறு திங்கள் சச்சரவு வழிவகுத்துள்ளது. ஆனால் ஒரு தீர்வைக்கா ணும் கிரேக்க அரசாங்கத்தின் முயற்சி இப்படிப்பட்ட வாதங்க ளினால் பெரிதும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. இது தேசியரீதியில் சித்தபிரமையை வெளிக்கொணர்ந்துள்ளது என ஒரு மூத்த அர சாங்க மேலாளர் கூறுகின்றார்.

மக்களின் மனதில் கொழுந்துவிட்டெரியும் இச்சிக்கல் வள ரத் தூபமிட்டது அரசாங்கமே. இதனால் ஒரு தீர்வைக்காண் பதற்கான வழிவகைகள் குறைந்து விட்டன என ஏதென்சி லுள்ள வெளிநாட்டு இராசதந்திரிகள் கூறுகின்றனர். இந்தச் சிக் கலைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளை விரிவுபடுத்தும் முகமாக முதலமைச்சர் திரு.கொன்ஸ்ரன்ரைன் மிற்சோராகிஸ் அவர்கள் சுடும்கோட்பாட்டாளரான தனது வெளிநாட்டமைச்சர் திரு.அன் ரோனிஸ் சமனாஸ் அவர்களை திங்கட்கிழமையன்று பதவிநீக் கம் செய்துள்ளார். கிரேக்கத்தின் எல்லையை மூடிவிடும்படி திரு.சமனாஸ் விடாப்பிடியாக இருந்தார்.



தேர்ந்த

இந்தச் சிறிய வளர்ச்சி பெறாத அயல்நாட்டுக்கு அவர்கள் ஏன் பயப்படுகின்றார்கள் என அவர்களைக் கேட்டதற்கு, இந்த மசிதோனியா என்ற பெயரினாலும், நாட்டினாலும் அடிக்கடி போர் மூண்டிருக்கின்றது என்பதைக் கிரேக்கம் நினைவு படுத்தியது.

சுகோபியேயி அரசாங்கம் ஆத்திரமூட்டும் செயல்களில் தற்போது இறங்கத் தயாரில்லை என ஏதென்ஸ்பட்டினத்திலும், வடக்கேயுள்ள நிலப்பரப்பின் தலைப்பட்டினமான சலோனிக்காவிலுமுள்ள கிரேக்க மக்கள் கூறுகின்றனர். ஆனால் எதிர்காலத்தில் மசிதோனியா என்ற கொடியின்கீழ் தீவிரவாதக் குழுக்கள் சச்சரவுகளை ஆரம்பிக்கும் என அச்சமுறுகின்றனர். கிரேக்கத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது தோல்வியுற்ற சுகோபியேயிற்கு சென்ற பொதுவுடைமைவாதிகள், தங்கள் தோல்வியை இன்றும் மறக்கவில்லை. அவர்களும் அங்குள்ள தீவிரவாதிகளும் சேர்ந்து சிக்கல்களை உருவாக்கலாம்.

2643 c c

தேசிய நூலகப் பிரிவு
மாநகர் நூலக சேவை
யாழ்ப்பாணம்.

காற்றினால் உலைக்கப்பட்டுக்
கழுத்தினைக் குனிந்து சாம்ப
நேற்றைய மழைக்கு வந்த
நெடும்புல்லோ நாங்கள்.........
வேருக்குள் உறுதி கொண்ட
வேம்புகள் மனிதர்.........

மகாகவி

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

முதலில் உன்னை இயக்கக் கற்றுக் கொள்.
பிறகு உலகை இயக்கலாம்!

—சாக்ரடீசு

PUBLIC LIBRARY,
JAFFNA.

திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்குது—அதைச்
சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது

—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

88608

# “தாயும் குஞ்சும்
# குண்டுக்குப் பலி”

“கொஞ்சுந் திரவியத் தேனமுதே — என்றன்
குஞ்சுப் பசுங்கிளிக் கோமளமே !
கஞ்சி வடித்திட விட்டிடடா — அங்கே
காகம் பறக்குது பார்த்திடடா.

பூவிற் குருவியைப் பார்த்திடடா — கண்ணே
போகும் பசுவினைக் கூப்பிடடா.
கூவுங் குயிலினைப் பார்த்திடடா — அங்கே
கோழி வருகுது கூப்பிடடா.

பாலைக் குடித்திடு பாக்கியமே” — என்று
பாலன் மகிழ்ந்திட ஊட்டுகையில்
ஞாலமுழுதும் நடுங்கியது — அந்த
நாலு திசையும் கலங்கியது.

அண்ட நடுங்கியது,
கொண்டு குலுங்கியது
விண்டு கலங்கியது,
குண்டு வெடித்ததுவே.

வாய்வழி பால்வடியத்,
தாய்மடி சோர்ந்து விழச்,
சின்னக் கிளியுடனே.
அன்னை சரிந்தனனே.

ஆனந்தத்தேன்
பண்டிதர் க. சச்சிதானந்தன்

தாசன் அச்சகம் யாழ்ப்பாணம்.